நிறுவன ஆசிரியர் உரை



# இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?

# What Must I Do To Be Saved?

*J.C. Choate*

ஒருவர் வாழ்க்கையில் என்ன செய்தாலும் அல்லது அவருடைய ஒழுக்கம் எவ்வளவு நன்றாக இருந்தாலும் இரட்சிக் கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? என்கிற கேள்வியைக் கேட்டு, அதற்குப் பதிலளிப்பதை விடப் பெரிதானது வேறு எதுவும் இல்லை. அப்போஸ்தலன் பவுல், ஒருவர் பாவியாயிருக்கிறார் என்றும், அவர் தன்னுடைய கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படும் வரை தன் செயலுக்குக் கணக்கு கொடுக்க வேண்டியவராயிருக்கிறார் (ரோமர் 3:23; 5:8) என்றும் கூறுகிறார். ஒருவர் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள முடியாதபடியால், பாவ மன்னிப்புக்கான தேவனுடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியவராயிருக்கிறார். இரட்சிப்பு நமக்கு சாத்தியமாகும்படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரிக்கும்படியாக அனுப்பி வைத்தார் (யோவான் 3:16,17). பாவமன்னிப்புண்டாகும்படி கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் (எபேசியர் 1:7). மிகவும் எளிதானது.

ஆனால், மறுபடியும், இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? அப்படிச் செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா? அப்படியிருந்தால் அது என்ன? இந்த கேள்விக்குப் பதிலளிப்பதற்கான ஒரே வழி, கர்த்தருடைய வார்த்தைகளிடத்தில் செல்வது தான். இயேசு இவ்விதமாகச் சொன்னார் “ *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* ” (மாற்கு 16:16). மறுபடியும், இயேசு “ *எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது* ”. *அன்றியும், மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே*

*பிரசங்கிக்கப்படவும் வேண்டியது* (லூக்கா 24:46,47). மேலும், இயேசு சொல்லும்போது, நாம் பரம பிதாவுக்கு முன்பாக அறிக்கை பண்ணப்பட வேண்டுமென்றால், மனுஷருக்கு முன்பாக நாம் கிறிஸ்துவை அறிக்கை பண்ண வேண்டும் (மத்தேயு 10:32).

இந்த கேள்விக்கு பதில் பெறுவதற்கான மற்றுமொரு வழி, தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர்களிடம் செல்வது. - பவுல், "*விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " என்று சொன்னார் (ரோமர் 10:17). எபிரெய எழுத்தாளர் " *விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்*" என்று அறிவித்திருக்கிறார் (எபிரெயர் 11:6). பின்பு, " *பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* " என்றார் (அப். 2:38). சவுல் விசுவாசித்து, அறிக்கையிட்டு, தன் மனந்திரும்புதலைக் காட்டிய பிறகும், அவர் தான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்ட பொழுது, அவருக்கு இவ்விதமாகச் சொல்லப்பட்டது. " *இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு* " என்று (அப். 22:16).

அடுத்ததாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிற அந்த 11 மனமாற்ற சம்பவங்களைப் பாருங்கள். அவைகள் 2,3,8,9,16 அதிகாரங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கேட்டவர்கள் விசுவாசித்தார்கள், தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பினார்கள், கர்த்தரிடத்தில் அவர்களுக்கிருந்த விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள், பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இரட்சிப்பின் நிபந்தனைகளை சுலபமாக்கும்படியும், தெளிவான முறையில் நாம் புரிந்து கொள்ளும்படியாகவும், கொடுக்கப்பட்டிருக்கும் இரட்சிப்புக்கான கட்டளைகள், "படிகள்" என்றழைக்கப்படுகின்றன. படி 1: சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும்; படி 2: அதை விசுவாசிக்க வேண்டும்; படி 3: பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்; படி 4: கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும்; படி 5: பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும்.

இந்தப் படிகள் ஒருவரை கிறிஸ்துவிலும், சபையிலும் இருக்கச் செய்கிறது. இந்தப்படிகளுக்குக்

கீழ்ப்படிவதால் ஒருவர் தன் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறார். இதன் மூலம் புதிய பிறப்பு அல்லது ஆவிக்குரிய பிறப்பை அடைகிறார். இது ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது நடைபெறுகிறது. (யோவான் 3:3-5). தேவனுடைய விதையாகிய சத்தியம் ஒருவருடைய இருதயத்தில் நாட்டப்படும் போது, அது கருத்தரித்து, தண்ணீருக்குள் மூழ்கும்படி வழி நடத்துகிறது. அதாவது, அவர் ஞானஸ்நானம் பெறுகிறான். தேவனுடைய வார்த்தை ஒருவர் *ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கும்படி செய்கிறது.* (யோவான் 3:5; ரோமர் 6:3,4; II கொரிந்தியர் 5:17) இது ஒருவரை கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக்குகிறது.

இயேசு சிலுவையில் மரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று வேதாகமம் போதிக்கிறது (I கொரிந்தியர் 15:1-4). நாம், பாவத்திற்கு மரித்து, கர்த்தரோடு தண்ணீர் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுந்திருக்கும் போது உபதேச சட்டத்திற்கு நாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிறோம். ஆகவே, ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, தன் கீழ்ப்படிகிற செயலின் மூலமாக கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நம்புவதோடு, ஒரு வகையில் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலையும் செயல்படுத்துகிறார். இங்கே, ரோமர் ஆறாம் அதிகாரத்தை மிக கவனமாக வாசிப்பது நல்லது.

அப்படியென்றால், யார் இரட்சிக்கப்பட முடியும்? சத்தியத்தைக் கேட்டு, புரிந்து கொண்டு, அதை முழு இருதயத்தோடும் விசுவாசித்து, பாவங்களை விட்டு விலகி, மனுஷருக்கு முன்பாக கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட முடியும்.

ஆனால், தேவனுடைய கிருபையின் பங்கு என்ன? கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். (எபேசியர் 2:8,9). இதன் பொருள், கர்த்தர் இரட்சிப்பை அருளியிருக்கிறார். நாம் இரட்சிக்கப்படும்படி விசுவாசத்தினால் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். முடிவில், தேவனுடைய கிருபையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நாம் நம்முடைய நற்கிரியைகளினாலோ அல்லது வேறு பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதினாலோ இரட்சிக்கப்பட முடியாது. அதே நேரத்தில் *நாம் தேவனுடைய கிருபைக்கு கீழ்ப்படியத் தவறினாலோ அல்லது மறுத்தாலோ, தேவ கிருபையால் கூட நம்மை இரட்சிக்க முடியாது.* ❋

சிறப்பு ஆசிரியர் உரை

# உங்கள் உதவி எங்களுக்குத் தேவை

# We Need Your Help

*Byron Nichols*

"சத்தியத்தின் குரல்" இலக்கியப்பணி ஒரு வியாபாரப் பணி அல்ல என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இது, சபையின் பணியாகும். சபையின் பெரும்பாலான பணிகளைப் போல இந்த குறிப்பிட்ட பணிக்கும் அநேகருடைய உதவியும், ஒத்துழைப்பும் தேவை.

இந்தப் பணியின் முன்னேற்றத்திற்கு நீங்கள் உதவி செய்யும் படியாக சில வழிகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**1. பத்திரிக்கை உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எவ்விதத்தில் உதவி செய்தது என்பதை எங்களுக்கு தெரியப்படுத் துங்கள்.** இதை நீங்கள் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் செய்யுங்கள். பத்திரிக்கை எந்தெந்த வழிகளில் உங்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது என்று அறிந்து கொள்வது முக்கியமாக இருக்கிறது. இது நாங்கள் பயனுள்ளதை, தேவையானதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள உதவிச் செய்கிறது. எனவே, உங்கள் கடிதங்களை அல்லது தொலைபேசி அழைப்புகளை இவ்விலாசத்திற்கு நாங்கள் வரவேற்கிறோம். **"சத்தியத்தின் குரல்", 288, தாராபுரம் ரோடு, காங்கேயம்-638 701. தமிழ்நாடு. இந்தியா. போன் : 04257-230030.**

**2. பத்திரிக்கை மேம்பட தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.** நிச்சயமாக எல்லோரையும் மொத்தமாக எங்களால் பிரியப்படுத்த முடியாது, ஆனால், நீங்கள் ஆசைப்படுகிற பதிப்பை உங்களுக்கு வழங்க விரும்புகிறோம், அது கிறிஸ்துவினிமித்தம் காரியங்களைத் தொடர்ந்து செய்ய ஏதுவாயிருக்கும். மேம்பாட்டை உண்டாக்கக் கூடிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றால் அவைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். எங்கள் செலவுகளை அதிகப்படுத்த எங்களிடம் போதுமான நிதி இல்லை, செலவுகளை குறைக்க நாங்கள் விரும்புகிறோம்.

**3. சந்தாதாரராக இருங்கள்.** எங்கள் பத்திரிக்கை வாசகர்களாகிய உங்களில் அநேகர் இந்தப் பத்திரிக்கைக்கு சந்தாதாரர்களாக இருக்கிறீர்கள், ஆனால், மற்றவர்கள் அப்படி இல்லை. ஒவ்வொரு வெளியீட்டின் பிரதியையும் வருங்காலத்தில் படிப்பதற்கும், குறிப்பு எடுப்பதற்கும் வைத்துக்கொள்ளலாம் அல்லது பத்திரிக்கை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நீங்கள் கொடுக்கலாம். நீங்கள் சந்தாதாரராக இருப்பதினால் நீங்கள் மாத்திரம் பத்திரிக்கையைப் பெற்றுக் கொள்வதில்லை. உங்கள் சந்தாவின் ஒரு பகுதி ஆயிரக்கணக்கானோருக்கு இலவசமாக பத்திரிக்கை அனுப்ப உதவி செய்கிறது. பத்திரிக்கைகள் "அச்சடிக்கப்பட்ட மிஷனரிகளாக" உலக முழுவதும் அனுப்பப்படுகிறது. தேவனுக்கு உங்கள் ஆத்துமாக்கள் எப்படி விலையேறப்பெற்றதோ அதுபோன்று விலையேறப்பெற்ற அநேகமாயிரம் ஆத்துமாக்களிடத்தில் பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

**4. பிறருக்காக சந்தா அனுப்பிக் கொடுங்கள்.** இன்றைக்கு சத்தியத்தின் குரல் நூலைப் பெற்றுக் கொள்பவர்களில் எத்தனை பேர், பிறர் அனுப்பிக் கொடுக்கும் பரிசு சந்தாக்கள் மூலம் பெற்றுக் கொள்கிறார்கள் என்று கணக்கிடுவது சுவாரசியமாயிருக்கும். எண்ணிக்கை என்பது முக்கியமானது. இந்நூல் தேவைப்படும் பிறருக்கு அனுப்பும்படியாக நீங்கள் ஒருவருக்கோ அல்லது அதிகமானோருக்கோ பரிசு சந்தாக்களை அனுப்ப முடியுமா? உங்கள் பார்வையில் முக்கியமானவராக இருக்கும் ஒருவருக்கு நீங்கள் ஆவிக்குரிய ஆகாரம் கொடுப்பதற்கு இது செலவு குறைந்த ஒரு சுலபமான வழி. இது அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் ஒரு வேறுபாட்டை உண்டாக்கலாம். வெகு சமீபத்தில், ஒரு மாநிலத்தில் வசிக்கும் ஒரு கிறிஸ்தவர், வேறொரு மாநிலத்தில் வசிக்கும் கிறிஸ்தவருக்கு பரிசு சந்தா அனுப்பிக் கொடுத்தார். அப்படிப் பிறர் கொடுத்த சந்தா மூலமாக வந்த சத்தியத்தின் குரல் நூலைப் பெற்றுக் கொண்டவர் மிகவும் மகிழ்ந்து, அடுத்த மாதமே தன்னுடைய எட்டு நண்பர்களுக்கு அந்த நூல் போய்ச் சேரும்படியாக பரிசு சந்தா அனுப்பிக் கொடுத்தார்.

**5. இப்பணியை பொருளாதார உதவிகளினால் தாங்குங்கள்.** இந்தப் போதிக்கும் முயற்சியை பொருளாதார ரீதியாகத் தாங்க மேலுமாக தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள். கொடுக்கப்படும் எந்த தொகையும் முக்கியமற்றதாகக் கருதப்படாது. ஒவ்வொரு ரூபாயும் முக்கியமானது தான். இந்தப் பணிக்கு பொருளாதார உதவிகளைச் செய்பவர்கள் தங்கள் பிராந்திய சபைக்குக் கொடுக்கும் காணிக்கையை குறைத்துக் கொடுப்பதை நாங்கள் உற்சாகப்படுத்துவதில்லை. ஆயினும், அநேகரால் மாதந்தோறும் குறைந்தது சிறு தொகையைக் கொடுக்க

முடியும் அல்லது ஒரே முறையோ, அல்லது அவ்வப்பொழுதோ கொடுக்க முடியும். எங்களின் இந்த இலக்கிய வழிப்போதனை முயற்சி உண்மை யாகவே உங்கள் பொருளாதார உதவிக்குப் பாத்திரமாகத்தான் இருக்கி றது.

**6. இந்தப் பணிக்கு உதவிச் செய்யும்படி உங்கள் சபையாரை உற்சாகப்படுத்துங்கள்.** உலக முழுவதும் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதற்கான இந்த சிறப்பு முயற்சியில், வளர்ந்து கொண்டிருக்கும் சபைகள் அதிகமாக உதவிச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இன்னும் அநேகருடைய உதவி தேவைப்படுகிறது. மாதம் ஒரு ரூ. 100/- கணிச மானதாகவும், ஊக்கமூட்டுவதாகவும் இருக்கும். சபைகள் தங்களுக்கான பிரதிகளுக்கு மாதந்தோறும் பொருளாதார உதவிகளைச் செய்யும் போது அவர்களுக்கு புத்தகங்களை அனுப்பிக் கொடுக்கலாம். இது குறித்து எங்களுக்கு எழுதுங்கள் அல்லது அழையுங்கள்.

**7. ஊழியப் பணித்தளங்களுக்கும், வெளி ஊழியங்களுக்கும், வீடு சந்திப்புகளுக்கும் செல்வோரிடம் இந்நூலைக் காட்டுங்கள்.** தங்கள் ஊழியப் பணியில் பயன்படுத்துவதற்காக இந்தப் புத்தகத்தின் பிரதிகளை பயன்படுத்த இதில் ஈடுபட்டுள்ளவர்களை சபையாரிடம் கேட்கும்படி உற்சாகப்படுத்துங்கள். வித்தியாசமான வழிகளில் வல்லமையாகப் பயன் படுத்தப்படும் வகையில் இந்தப் பத்திரிக்கையின் தன்மை அமைந்துள்ளது.

**8. இலவசமாக பயணச்சீட்டைக்கொடுத்து உதவலாம்.** இந்தப் பணிக்கு அடிக்கடி பயணம் செய்ய வேண்டியதாக இருப்பதால் நீங்கள் சேர்த்து வைத்திருக்கிற திரளான பணத்திலிருந்து அவ்வப்போது பயணச் சீட்டு வாங்கவோ, வாகனங்களுக்கான எரிபொருள் நிரப்பவோ இலவச மாகக் கொடுத்து உதவலாம். இந்த பணியை மேம்படுத்த நாங்கள் பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்வது அவசியமாகிறது. ஆனால், எங்களிடம் இருக்கும் குறைவான தொகை அதற்குத் தடையாக இருக்கி றது. நீங்கள் கர்த்தருக்காக இப்படிச் சிறப்பான வகையில் கொடுக்கும் நிலையில் இருந்தால் உங்களால் அற்புதமான சேவையைச் செய்ய முடியும்.

**9. பேசும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் எங்களுக்கு உதவுங்கள்.** இந்த வேலையைப் பற்றி சபைகளுக்கு நாங்கள் தெரிவிக்க ஆசையாயிருக்கிறோம். இப்படிப்பட்ட வாய்ப்புகளை நிறைய ஏற்படுத்தித் தருவதால் நீங்கள் எங்களுக்கு மிகப்பெரிய சேவையைச் செய்ய முடியும். உலக முழுவதும் ஜனங்களின் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிற இந்த அசாதாரண போதனைக் கருவியைக் குறித்து சபைகள் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும்.

**10. உங்கள் பகுதியில் தன்னார்வ பிரதிநிதியாயிருங்கள்.** அவரவர் பகுதியில் இந்த பத்திரிக்கை ஊழியத்தைப் பற்றி எடுத்துரைக்கத் தங்கள் நேரத்தைச் செலவிடும் சகோதரர்கள் தேவை. இப்பணி பற்றி பெண்கள், பெண்கள் மத்தியிலோ அல்லது பெண்கள் குழுக்களிடத்திலோ பேசலாம். தேவையான தகவல்களுடன் உங்களுக்கு இந்த காரியத்தில் உதவிச் செய்ய நாங்கள் ஆர்வமாயிருக்கிறோம். இவ்விதமாகச் சேவை செய்வது குறித்து ஆழ்ந்து யோசியுங்கள்.

**11. பொதுவான இடங்களில் வைக்கும்படிக்கு பிரதிகளை வாங்குங் கள்.** நீங்கள் இந்தப் பத்திரிக்கைப் பிரதிகளை முன் அனுமதியுடன் மக்கள் வந்து செல்லும் முடித்திருத்தகம், அழகு நிலையங்கள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், நூல் நிலையங்கள் போன்றவற்றில் வைக்க லாம். இதனால் என்ன நன்மை உண்டாகும் என்பதை நாம் ஒருபோதும் கணிக்க முடியாது.

**12. இந்தப் பணிக்காக நீங்கள் ஜெபியுங்கள்.** இந்த சிறப்பு போதனை முயற்சியில் நேரடியாக ஈடுபட்டிருக்கும், இதற்கு பொறுப் பேற்றிருக்கும் எங்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். எழுத்தாளர் களுக்காக ஜெபியுங்கள்; அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இந்த பத்திரிக்கையைப் பெற்றுக் கொள்பவர்கள் எல்லோரும் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்படி ஜெபியுங்கள். இந்த பத்திரிக்கை மூலமாக அநேகர் இதை பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஜெபியுங்கள். இச் செயலில் அநேக சபைகளும், தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் பங்கு பெற ஜெபியுங்கள். இந்த பணிக்காக தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் ஜெபியுங்கள். பொதுவான ஜெபங்களில் நாம் இதற்காக ஜெபிக்கும் போது கேட்கிறவர்கள் இது பற்றித் தெரிந்து கொள்வார்கள்.

**13. " சத்தியத்தின் குரலை "ப் பற்றி மற்றவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.** இந்த பத்திரிக்கை பற்றி கிறிஸ்தவர்களிடம், கிறிஸ்தவர் களல்லாதவர்களிடம் அறிவிக்க வாய்ப்பு கிடைக்கும்போது அதைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். இன்று சபையின் மூலமாக செய்யப்படும் ஒரே நற்கிரியை இது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், தரமான செய்திகள் மூலமாக அநேகருக்கு உதவியாயிருக்கிறதென்றும், அநேக மக்கள் பரிச்சயப்படும்படி விளம்பரப்படுத்தப்படும்படி தகுதியானதென நாங்கள் உண்மையாகவே நம்புகிறோம்.

திரளான மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க இந்த தகுதியுள்ள முயற்சியின் சார்பாக உங்கள் கிறிஸ்தவ செய்வாக்கைப் பயன்படுத்தும்படி மேற்கூறப்பட்ட வழிகளில் ஒன்றையோ அல்லது அதற்கு மேலானவைகளையோ ஜெபத்தோடு தெரிந்தெடுங்கள். ❋

நிர்வாக ஆசிரியர் உரை

# ....நினைத்துக் கொள்ளுங்கள்

***E.Z.S. Rajanayagam***

உலக மீட்பராகிய நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்து, நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து இப்பூமியில் ஊழியம் செய்தார். அப்படி ஒரு சமயம் அவர், கலிலேயா, சமாரியாவின் ஓரங்களில் உபதேசித்த போது, நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். வெறுமனே நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல், லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார் (லூக்கா. 17:32). அவர், அவ்விடத்திலிருந்தபோது, தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்ற ஒரு கேள்வியைப் பரிசேயர் அவரிடம் எழுப்பி னார்கள் (லூக்கா 7:20). அதற்கு, *இதோ தேவனுடைய ராஜ்யம் உங்க ளுக்குள்ளே இருக்கிறதே* என்று அவர்களுக்குப் பதிலளித்து விட்டு, அப்படியே தன்னுடைய சீடர்களை நோக்கி, இரண்டாம் வருகை குறித்துப் பேசத் தொடங்கினார்.

அப்பொழுது, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் என்ன நடக்கும், எப்படி நடக்கும் என்பதை எடுத்துரைப்பதற்கு ஆதாரமாக, பழைய ஏற்பாட்டில் இரண்டு சம்பவங்களை கோடிட்டுக் காட்டுகிறார். ஒன்று, " *நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷ குமாரனுடைய நாட்களிலும் நடக்கும் என்பது*" (17:26). மற்றொன்று, " *லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும் என்பது* " (17:28). இந்த இரண்டு சம்பவங்கள் பற்றியும் குறிப்பிட்ட இயேசுவானவர், வேதாகம சரித்திரத் தில் பிரபலமாயுள்ள ஜலப்பிரளயத்தால் மாண்டு போன நோவா காலத்து ஜனங்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல் அல்லது லோத்துவின் நாட்களில் அழிக்கப்பட்ட சோதோம், கொமோரா பட்டணத்து மனிதர்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்லாமல், "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்*" என்றே சொல்லி யுள்ளார்.

இரண்டாம் வருகைக்காகத் தன்னுடைய சீடர்களை ஆயத்தப்படும் படி எச்சரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் பல சம்பவங்களும், மிகப் பொருத்தமான நபர்களும் உண்டு. ஆயினும், இயேசு " *லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்* ". என்று தமது சீடர்களுக்குச் சொல்லியுள்ளபடியால், அதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கவே வேண்டும். தன்னுடைய சீடர்களாக விரல் விட்டு எண்ணக்கூடிய

அளவிலிருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, பின்னாளில் தனது சீடர்களாக மாறும் எண்ணிலடங்காதவர்களுக்கும், லோத்தின் மனைவி சம்பவம் முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென அவர் விரும்பியிருக்க வேண்டும். இன்னும், சீடர்களின் ஆன்மீக வாழ்வுக்கும், லோத்து மனைவியின் நிலைக்கும் ஒரு சம்பந்த உண்டென்பதை அவர் தனது ஞானத்தால் தெரிந்திருக்க வேண்டும். " *லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்வது* " அன்று அவருடைய சீடர்களுக்கு நன்மை பயப்பதாக இருந்திருக்குமானால், அவருடைய சீடர்களாக இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கும் அது நன்மை கொடுப்பதாகவே இருக்க வேண்டும்.

ஆகையால், திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

**I தப்பும் வழி கிடைத்தும் அழிந்து போனாள் (வ. 15,16)**

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற முதல் பாடம், தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு அவளுக்குக் கொடுக்கப் பட்டிருந்தும் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆம், வசனங்கள் 15,16 ஆகியவைகளைக் கவனிக்கும்போது, தேவன் லோத்தின் குடும்பத்தின் மீது காட்டின பரிவு, கரிசனை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பட்டணத்துக்கு வரும் அழிவிலிருந்து காப்பாற் றப்படுவதற்கு தன்னுடைய தூதர்களைக் கொண்டு துரிதப்படுத்தின தோடல்லாமல், அவர்கள் இன்னும் தாமதித்துக் கொண்டிருந்தபோது, கையைப் பிடித்துக் கொண்டு போய் வெளியே விட்டார். தான் நேசிக்கிற வர்கள் காரியத்தில், தேவன் இதற்குமேல் என்னதான் செய்ய முடியும்? ஆனால், இவ்வளவுக்குப் பிறகும் லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து, அழிந்து போனாள்.

அன்பானவர்களே, இந்த லோத்துவின் மனைவியுடைய நிலை யோடு, இயேசுவின் சீடர்களாக அவரைப் பின்பற்ற விரும்புகிறவர்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். பாவத்தின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த சோதோம், கொமோராவின் அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் தமது மிகுந்த இரக்கத்தின்படியாகத் தந்தது போல, இந்தப் பாவ உலகத்திலி ருந்தும், நரக ஆக்கினையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்துள்ளார். *அவரைப் பின்பற்ற விரும்பும் ஒருவரும் கெட்டுப் போகக்கூடாதென்பதே தேவனின் விருப்பம்* (II பேதுரு. 3:9).

மனிதர்களாகிய நம்மீது, பரலோகத்தின் தேவன் காட்டியுள்ள தயவை இங்கே பாருங்கள். முதலாவது, நம்முடைய பிறப்பே ஆச்சரியமான ஒன்று. தாவீது இது குறித்துச் சொல்லும்போது, *"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்..."* என்று கூறுகிறார் (சங். 139:14). *இப்படி பிரமிக்கத்தக்க அதிசயமாக நம்மைப் படைத்த தேவன், நம்மை அவரது சாயலாக, நித்தியத்தன்மையோடு படைத்துள்ளார்* (ஆதி. 1:26,27). மேலும், அவருடைய சாயலாக, நித்திய தன்மையோடு படைக்கப்பட்ட நாம், அவரோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தைப் பாவத்தினால் இழந்தபோது, நம்மைத் திரும்பவும் தம்மிடம் சேர்க்கும்படியாய், தன்னுடைய ஒரே பேறான குமாரனை இப்பாழும் உலகிற்கு அனுப்பிக் கொடுத்தார். " *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* " (யோவா 3:16). *அந்தக் குமாரனும், தான் கோரச் சிலுவையில் கொல்லப்படுவதற்கு தன்னை அனுமதித்தார். அவருடைய இரத்தத்தினாலே நாம் கழுவப்பட்டு, ஆத்தும இரட்சிப்படைந்து, நாளும் அவருக்குள் வளர்ந்து, கனி தந்து, தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்களாகும்படி பரிசுத்த ஆவியானவராலே வேத வசனத்தைக் கொடுத்தார்* (II தீமோ. 3:16,17; 2பேது 1:4). *அந்த வசனங்கள், உலகெங்கும் பிரசங்கிக்கும்படியாய் அப்போஸ்தலருக்கும், சீடர்களுக்கும் கட்டளை கொடுத்தார்* (மத். 28:18-20). மனிதன் மீது தன்னுடைய அன்பைக் காட்டுவதற்கு, அவனுக்குள்ளாக தான் உண்டாக்கின ஆத்துமாவின் மீது தனக்குள்ள பாரத்தைக் காட்டுவதற்கு, தேவன், இதற்கு மேல் என்னதான் செய்ய முடியும்?.

**II எச்சரிக்கப்பட்டும் அழிந்து போனாள் [வ. 17]**

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற இரண்டாம் பாடம், மிகச் சரியான முறையில் எச்சரிக்கப்பட்டிருந்தும் அவள் அழிந்து போனாள் என்பது.

லோத்தின் மனைவி தப்பிக் கொள்ளும்படியான வாய்ப்புகளைக் கூட்டித் தந்த தேவன், ஒருவேளை அவள் அந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தாமல் போகலாம் என்று எண்ணி, அவளைக் கடுமையாக எச்சரித்தார். இதோ வசனம், "... உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியிலே எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ " என்றார். இந்த எச்சரிப்பு தேவனுடைய தூதனாலே, இப்பெண்ணுக்கு நேரிடையாகக் கொடுக்கப்பட்டது. ஆனாலும், இந்தப் பெண் தேவ எச்சரிப்பை அலட்சியம் செய்தாள். விளைவு அழிவு.

அருமையானவர்களே, லோத்தின் மனைவி நிலையோடு நம்முடைய நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். சர்வ வல்லமையுள்ள நமது பரலோக தேவன், நம்மை எச்சரித்து, நமது ஆத்துமாவை, நித்திய அழிவிலிருந்து காப்பாற்றும்படியாய், நம்மை மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தும்படியாய் ஏராளமான வசனங்களை, நமது வேதாகமத்தில் வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார்.

இவ்வளவு எச்சரிப்பையும் மீறி ஒருவன் கவலையற்றிருந்தால் அவனை யாருக்கு ஒப்பிட முடியும்? கண்டிப்பாக, லோத்தின் மனைவிக் குத் தான். அவள் தேவ தூதனின் வார்த்தைகளாலே எச்சரிக்கப்பட்டி ருந்தும் இழந்து போனாள். என்ன நடக்கும் என்று சொல்லப்பட்டிருந்தும் அலட்சியம் செய்தாள். தன்னைப் பின்பற்றுகிறவர்கள் இப்படி புத்தி யீனமாக நடந்து, தனது நித்திய வாழ்வை இழந்து போகக் கூடாதென்று தான், நமதாண்டவர் "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங் கள்" என்று சொன்னார்.

ஆகவே, வேத வசனங்களின் எச்சரிப்புகளை மதித்து, அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து நாம் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவோமாக!

### III ஒரே ஒரு பாவத்தினால் அழிந்து போனாள் (வ. 26)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற மூன்றாவது பாடம், ஒரு பாவத்தினால், ஆம், ஒரே ஒரு பாவத்தினால் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆதியாகமம் 19:26-ம் வசனத்தைப் படிக்கும்போது, உணர்வுள்ள வர்களுக்குக் கண்டிப்பாகக் கண்ணீர் வரும். வசனம் இவ்விதம் சொல்லு கிறது, "*அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத் தூண் ஆனாள்*" என்று. இங்கே, அவள் செய்த பாவம் என்ன? "பின்னிட்டுப் பார்த்தாள்" அவ்வளவுதான். அடடா, அய்யய்யோ, ச்சேச்சே இதெல்லாம் பாவமா என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. நாம் எப்படி நினைத் தாலும், இது தேவனுடைய பார்வையில் பாவமாகவே கருதப்பட்டு, கடுமையான தண்ட னையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடுமையான தண்டனைக்கு அவள் செய்த பாவங்கள் தான் எத்தனை? அய்யோ பாவம்! அவள் செய்தது ஒரே ஒரு பாவம் மட்டுமே. எவ்வளவு பரிதாபம் பாருங்கள்! இந்தப் பாவத்தின் கொடுமையை நினைத்தால் கோபம் தானாக வருகிறது. இந்தப் பாவம் எவ்வளவு பயங்கரமான ஒன்றாக இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள்.

இங்கே, அவள் அழிந்து போகாமல், காப்பாற்றப்படுவதற்கு அவளுக்கிருந்த அனுகூலமான நிலையை கவனியுங்கள். ஒரு நீதி மானுக்கு மனைவியாயிருக்கும்படியான சிலாக்கியம் அவளுக்குக்

கிடைத்தது (II பேது. 2:7,8). ஆயினும், இழந்து போனாள். தேவனுடைய விருப்பம் என்னவென்பது அவளுக்குச் சொல்லப்பட்டிருந்தது. அவைகளின்படி செய்ய ஒரு வகையாக முடிவெடுத்து சரியான திசையில் பிரயாணத்தை மேற்கொண்டும், ஒரு பாவத்தால், அழிந்து போனாள்.

ஒரே ஒரு பாவத்தினாலே, தேவனாலே, கடுமையாகத் தண்டிக்கப் பட்ட அநேக உதாரணங்கள் பரிசுத்த எழுத்துக்களில் உண்டு. அவைகளைப் படிக்கும்போது, ஒருவேளை, தேவன் தான் தவறு செய்து விட்டாரோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால், சர்வலோகத்தின் தேவன் நீதிபரர் (சங். 48:10) அவர் ஒருபோதும் தவறிழைத்ததில்லை.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், ஒரு பாவம் கூட இல்லாத பரிசுத்த வாழ்வு வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். அப்படியே வாழ்வேன் என்று தீர்மானிப்போம். அதற்கான தீவிர முயற்சியில் வேத வசனங்களின் துணையோடு கருத்தோடும், கண்ணீரோடும், ஜெபத்தோடும் இறங்குவோம். நம்முடைய ஒரே ஒரு பாவம் கூட நம்முடைய நித்தியத்தை விலை பேசக் கூடியதாக இருக்கிறதென்கின்ற உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்வோம். இதைப்புரிந்து கொண்டு, நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிராயாசை எடுப்போம், அவருடைய வருகையில், கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய் அவர் சந்நிதியில் காணப் படுவோம் (IIபேது. 3:14).

பரலோகத்தின் தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப் பாராக! ஆமென் !.

❋

## கிறிஸ்தவனின் ஆசீர்வாதங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆக்கினைத் தீர்ப்பில்லை | (ரோமர் 8:1,2; 1 யோவான் 1:7) |
| 2. | பாவமன்னிப்பு | (கொலோ 1:13,14) |
| 3. | பிதாவோடும், கிறிஸ்துவோடும், விசுவாசிகளோடும் ஆவிக்குரிய ஐக்கியம் | (I கொரி. 12:13, எபே. 5:23 |
| 4. | புதிய ஜீவன் | (II கொரி. 5:17) |
| 5. | எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் | (எபேசியர் 1:3) |
| 6. | பரிசுத்த ஆவியின் வரம் | (கலா. 5:25; 1 கொரி. 3:16; எபே. 1:13,14) |
| 7. | உயிர்த்தெழுதலுக்கான உறுதிமொழி | (I தெச. 4:16,18; ரோமர் 8:11) |
| 8. | பரலோகத்திற்கான உறுதிமொழி | (யோவான் 14:1-3; ரோமர் 6:22) |

# உள்ளடக்கம்

## தேவன்


ஒன்றான மெய் தேவன் ..................... 15

தேவனுடைய வல்லமை ..................... 19


## ஆதாரங்கள்


நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய்
உண்டாக்கப்பட்டிருக்கிறேன் ............... 22

ஆகாயக் கண்காட்சி ....................... 24

வேதாகமம் மிகத் துல்லியமானது ....... 25


## தேவனுடைய வார்த்தை


வேத வாக்கியங்களின்
வேதாகம உபதேசம் ......................... 28


## வாழ்வதற்கான உபதேசம்


எங்களுக்கு சத்தியத்தைத் தாரும் ....... 31

...கர்த்தருடைய சத்தத்தைக்
கேட்டார்கள் ................................. 32

பாவம் செய்வது யார் ? ..................... 34

கள்ளப் போதகர்கள் ......................... 37


## இரட்சிப்பு


கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே
இரட்சிக்கப்படுவார்கள் ..................... 39


## சபை


முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ........ 41

தகுதியுள்ள தலைமைத்துவம் ............... 43

சபையின் முக்கியத்துவம் ..................... 45

கிறிஸ்துவ ஒற்றுமையின் வல்லமை ....... 47


## அனுதின கிறிஸ்தவ ஜீவியம்


உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக .... 51

பிதாவின் சித்தம் செய்யுங்கள் ............. 53

உக்கிராணத்துவம் ............................. 56

வழியிலே சிங்கம் இருக்கும் ............... 58

உன் விசுவாசம் பெரியது .................. 61

வாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள் ..... 65

வசன பஞ்சம் ................................. 68


## ஆராதனை


ஐக்கியத்தில் ஆராதனை ..................... 70

ஆராதனை, ஒரு பழக்கமா? ............... 74

ஆராதனையும், நீங்களும் .................. 76


## கிறிஸ்தவ வீடு


மிகச் சிறந்த நிலையை அடைய
பாடுபடுதல் .................................... 77

அவன் பிள்ளைகளின் மீது அவனுடைய
அதிகாரம் ...................................... 79

மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் ............................................ 82
ஒரு பிள்ளையை நடத்த வேண்டிய வழி .... 84
குடும்ப ஒழுக்க நெறிகள் ..................... 86
குடும்பத்தை அழகாக அலங்கரித்தல் ...... 88
ஒரு குழந்தையின் ஆத்துமா ................ 92

## செயலில் கிறிஸ்தவம்

கிறிஸ்து சொன்னது ............................ 93
சுவிசேஷ ஜோடி ................................ 94

## வேதாகம தாசர்கள்

யோபுவின் சிறந்த முன் மாதிரி ........... 98
யூதாஸ் .............................................. 100
மத்தேயு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் ............................................ 102

## வசனப்பகுதி பாடங்கள்

தேவனால் கைவிடப்பட்டவர்கள் .......... 105
ஆகையால் ........................................ 107
ஞானமுள்ள பிள்ளைகள் ..................... 109

## வேதாகமக் கேள்விகள்

தேவன் இன்று நம்மோடு எப்படிப் பேசுகிறார்? ...................................... 111

## கிறிஸ்து ஏன் பிறந்தார்?

★ பாவிகளை இரட்சிக்க (மத்தேயு 9:13)

★ இளைப்பாறுதல் தர (மத். 11:28-30)

★ மகிழ்ச்சியை கொண்டு வர (லூக்கா 2:10)

★ இராஜ்ஜியத்தை பிரசங்கிக்க (லூக்கா 4:43)

★ மரணத்தை வெல்ல (எபிரெயர் 2:14)

★ தேவ வார்த்தையை வெளிப்படுத்த (யோவா 1:14)

★ மனிதனை மீட்க (எபேசியர் 1:7)

★ நித்திய ஜீவனைக் கொடுக்க (மத். 11:28-30)

★ சிறந்த முன்மாதிரியாய் இருக்க (யோவா 13:15)

★ நியாயதிபதியாய் இருக்க (யோவா 6:38)

★ இராஜாதி இராஜவாக, கர்த்தாதி கர்த்தாவாக இருக்க (வெளி. 17:14)

★ நம்முடைய மத்தியஸ்தராய் இருக்க (I தீமோ. 2:5)

★ நியாயதிபதியாய் இருக்க (யோவா. 6:38)

தேவன்

# ஒன்றான மெய்த்தேவன்

# *There Is But One True God*

*Maxie B. Boren*



பழைய ஏற்பாட்டின் முதல் வசனத்திலிருந்து, நாம் காண்கின்ற எல்லாவற்றையும் சர்வவல்லவர் தம்முடைய வல்லமையினால் சிருஷ்டித்தார் என எல்லாப் புகழையும் தேவனுக்கு வேதாகமம் உரித்தாக்குகிறது. "*ஆதியில் தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்* " (ஆதியாகமம் 1:1). மேலும், வேதவாக்கியங்கள் எவைகளை அறிவிக்கிறது என கவனியுங்கள். " *கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது*". அவர் " *சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான ஜலங்களைப் பொக்கிஷ வைப்பாக வைக்கிறார், பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக: உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக* ".(சங். 33:6,8) கர்த்தர் *ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லா வற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்* (யாத்திராகமம் 20:11) "*கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப் படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்* " (நீதி 3:19). இப்படிப்பட்ட மகாபெரியவர் பற்றி சிந்தித்துப் பாருங்கள். சிருஷ்டிப்பின் எல்லா வற்றிலும், இத்தகைய அறிவு ஞானம், புரிந்து கொள்ளுதல் மற்றும்

வல்லமை போன்றவை ஈடுபடுத்தப்பட்டிருப்பதை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. இது, நாம் ஆழ்ந்து யோசிப்பதற்கு எவ்விதத்திலும் குறைந்தது அல்ல! தேவனுடைய முடிவில்லாத ஞானத்தையும், வல்லமையையும் மனித அறிவால் புரிந்து கொள்ளவே முடியாது. ஆனால், ஒன்று நிச்சயம். மெய்யான ஜீவனுள்ள தேவன் உண்மையாகவே மனிதர்களுடைய இருதயங்களில் உயர்த்தப்பட வேண்டும்! இந்த முழு பிரபஞ்சத்திற்கும் ஏக சக்கரவர்த்தியாயிருக்கிற, என்றென்றும் ஜீவிக்கிற தேவனுக்கு முன்பாக எல்லா தேசத்து ஜனங்களும் பயபக்தியோடு நிற்க வேண்டும்.

சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். "*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை* " (சங்கீதம் 19:1,3). உலகெங்கிலும் இருக்கும் ஜனங்களைச் சுற்றி இருக்கும் அழகையும், வடிவமைப்பையும் கவனித்தால் உண்மையாகவே ஒரு வடிவமைப்பாளர் சிருஷ்டிகர் இருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்காது. இப்பேருண்மையின் சாட்சி இயற்கை உலகத்தின் ஒவ்வொரு பகலிலும், இரவிலும் காணப்படும். இது தற்செயலாக நடந்தது என்று சொல்வதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. எரேமியா தீர்க்கதரிசி இந்த வார்த்தைகளை எழுதினார். "*ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும் நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை* " (எரேமியா 32:17). "*அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது, அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது* " (சங்கீதம் 148:5,13).

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவரான பவுல், அவர்களுடைய கொடிய இருதயங்களுக்காக புறஜாதி தேசங்களைக் கடிந்து கொண்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை. " *எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை*

*தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர் களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமை யை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினி மித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோ டொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்"* (ரோமர் 1:20-24).

அநேக வருடங்களுக்கு முன்பாக தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகள், உலகின் அநேக பகுதிகளில் இன்றும் பொருந் துகிறதாக இருக்கிறதென்பது வேதனையான ஒன்று. ஏனென்றால், அநேகர் மெய்யான ஜீவனுள்ள தேவனை விசுவாசிக்காமலிருக்கிறார்கள், ஆனால், கைகளால் செய்யப்பட்ட விக்கிரகங்களை, இன்னும் மாடு மற்றும் பாம்பு போன்ற படைப்புகளை வணங்குவதைத் தெரிந்து கொண் டிருக்கிறார்கள்! முதல் நூற்றாண்டில் பவுல் எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் எல்லா வகையான விக்கிரகங்களையும் கடிந்து கொண்டார்: அத்தனே பட்டணத்தாரை நோக்கி பவுல் இவ்விதமாகச் சொன்னார்.

" *அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்க ளென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக் கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லா ருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணி விடை கொள்ளுகிறதுமில்லை. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும் படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமான வரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம்,*

*இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததி யாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பா யிருக்குமென்று நாம் நினைக்கலாகாது".* (அப். 17:22-29).

இன்னும் எபேசுவிலும், துருக்கியின் மேற்குப் பகுதி முழுவதிலும் இதே அப்போஸ்தலர் இவ்விதமாக அறிவித்தார், " கைகளினால் செய்யப் பட்ட தேவர்கள் தேவர்களல்ல " (அப்போஸ்தலர் 19:26).

மேற்சொல்லப்பட்ட காரணங்களால், எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் எல்லா வகையான விக்கிரக ஆராதனைகளை விட்டு, சகலத் தையும் படைத்த மெய்யான, ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்ப வேண்டுமென்று நான் மன்றாடுகிறேன். உலக முழுவதிலுமுள்ள எல்லா மனிதர்களுக்கும் எல்லா காலத்திற்கும் தேவன் தம்முடைய சித்தத்தை வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அதை நீங்கள் வாசித்துப் படியுங்கள். உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இதுவே ஆதாரமாயிருக் கும்; வாழ்வில் இதுவே உங்கள் வழிகாட்டியாகவும், ஆலோசனையாகவும் இருக்கட்டும். இது தேவனுடைய வார்த்தை! இது தேவனுடைய சிருஷ்டிப் பின் வல்லமை பற்றி மட்டும் சொல்லாமல் பாவத்திலிருந்து உங்கள் ஆத்துமாவை இரட்சிக்க தேவபெலனாயிருக்கிற அவருடைய குமாரனா கிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை பற்றியும் பேசுகிறது! இதே அப்போஸ்தலன் இவ்விதமாகவும் எழுதினார். *கிறிஸ்துவின் சுவிசேஷத் தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக் கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது* (ரோமர் 1:16). *கிறிஸ்து தமக்குக் கீழ்ப் படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராக இருக்கி றார்.* (எபிரெயர் 5:9).

❋

**உங்களால் சிலரைக் காட்டிலும் அதிகமாக செய்ய முடியுமென்றாலும் கூட**

**அவர்களைக் காட்டிலும் அதிகமாக செய்ய முடியாமற் போகலாம்.**

**ஆனால், நிச்சயமாக உங்களால் முடிந்ததை, சிறப்பாகச் செய்ய முடியும்.**

# தேவனுடைய வல்லமை

# THE POWER OF GOD

*Frances Parr*

**தே**வன் படைத்தவைகளில் எது அதிக வல்லமையுள்ளது? ஒருவர் உலகம் என்றும் மற்றவர்கள் நீர் வீழ்ச்சி, சூரியன் அல்லது சந்திரன், நீலத்திமிங்கலம் என்றெல்லாம் கூடச் சொல்லலாம். மனித உடல் செயல்படுகிற விதத்தையும் அவைகளின் இணக்கத்தையும் கவனித்துப் பாருங்கள். இப்படி இந்தப் பட்டியல் நீண்டதாயிருக்கிறது.

அழிவுள்ள மனிதர்கள் அழிவில்லாத தேவனுடைய வல்லமையின் அளவை கற்பனை செய்து பார்க்க முடியாது. ஆயிரக்கணக்கான வருடங்களாக அறிவுள்ள விஞ்ஞானிகள் நம் பிரபஞ்சத்தையும், பூமியையும், மிருக ஜீவன்களையும், மனித உடல் பற்றியும் படித்திருக்கிறார்கள். அவைகள் ஏராளமான புத்தகங்களாக உள்ளது. இருப்பினும், அவர்கள் கற்றுக் கொண்டவைகள், இன்னும் ஏராளமானவைகள் மறைந்திருக்கிறது என்கிற யதார்த்தத்தைக் காட்டுகிறது.

நாம் வாழ்க்கையில் காண்கின்ற, இன்னும் அறிந்திருக்கிற அநேக காரியங்கள் நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. சக்தி வாய்ந்த கடல் அலைகள் பலமான கட்டிடங்களை நொறுக்கிப் போடுகிறது. வியாதிகள் பலசாலிகளை கீழேத் தள்ளிப் போடுகிறது. புயல், சூறாவளி போன்றவை எவ்விதத் தடைகளையும் தகர்த்துப் போடுகிறது. ஆனால், நம் தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வல்லவராயிருக்கிறார்.

மனிதன் கொஞ்சநேரம் மாத்திரம் இருந்து பிறகு காணாமல் போகும் ஒரு தூசியைப் போன்று, ஒரு புகையைப் போன்று இருக்கிறான். சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம் 8:4-ல் இவ்விதமாகச் சொல்கிறார். "*மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்று. உண்மையாகவே, தேவன் ஏன் இப்பிரபஞ்சத்தை எப்படி இவ்விதம் உண்டாக்கினார் என்பது* நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆனால், நம் தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வல்லவராயிருக்கிறார்.

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில், அவர் தேவனுடைய குமாரன் என்று காட்டுவதற்காக அநேக அற்புதங்களைச்

செய்தார். அப்படியிருந்தும், பெரும்பாலானோர் அவரை விசுவாசிக்கவில்லை. ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் கொண்டு 4000 பேரை இயேசு போஷித்ததைக் கண்ட பரிசேயர்கள் வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் கேட்டனர். மாற்கு 8:12ல், இயேசு தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு; *இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

அவர்களுக்கு ஏற்கனவே அநேக அடையாளங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தாவீது சங்கீதம் 19:1ல், இவ்விதமாக எழுதினார். "*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.* என்று. தேவனுடைய வல்லமைக்கு அத்தாட்சி தேடும் ஒருவர் அவருடைய சிருஷ்டிப்பை உற்றுக் கவனித்தாலே போதும்.

தேவனுடைய மகத்துவம், மிகப்பெரிய மற்றும் வல்லமையானவைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சிறிய காரியங்களையும் பாருங்கள். இயேசு சிறிய கடுகு விதையை, இரண்டு உவமைகளைச் சொல்லும்படியாக பயன்படுத்தினார். அவர் இவ்விதமாகச் சொன்னார். "*அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்*" (மத்தேயு 13:32). வறண்டு செத்துப்போயிருக்கிற ஒரு விதையில், தேவனுடைய வல்லமையை உற்றுக் கவனியுங்கள். அந்த விதைக்கு தண்ணீர் ஊற்றப்படும் போதும், மண்ணிலிருந்து அதற்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும் போதும் அது உயிருள்ள செடியாக மாறுகிறது. சிருஷ்டிப்பின் போது தேவன் ஒவ்வொரு செடியிலும், மிருகத்திலும் அதினதின் விதையை வைத்தார். *நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்* என்று ஆதியாகமம் 1 ஆம் அதிகாரத்தில் சொன்னார். இப்படிப்பட்ட விவேகமான திட்டத்தை தேவனால் மட்டுமே தீட்ட முடியும்.

தேவன், மனித உடலை கோடிக்கணக்கான கண்ணுக்குத் தெரியாத செல்களால் உருவாக்கியிருக்கிறார். இந்த செல்களின் பல்வேறு கலவை தான் சுவாசத்தையும், இதயத் துடிப்புகளையும், ஜீரணத்தையும் கட்டுப்படுத்துகிறது. தேவனுடைய வல்லமை உடலில் உள்ள மிகச் சிறிய உறுப்புகளில் கூடத் தெரிகிறது.

இப்படி சர்வ வல்லவரான தேவன், மனிதர்கள் மீது காட்டிய அன்புக்குப் பதிலாக, அதே அன்பை மனிதர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். பழைய ஏற்பாடு முழுவதும் அநேக முறை தேவன்,

" நான் உங்கள் தேவனாயிருப் பேன்; நீங்கள் என் ஜனங்களாயி ருப்பீர்கள் " என்று சொன்னார். தேவன், சிருஷ்டிப்பு எல்லாவற் றையும் முழுமையாக உண்டாக் கியிருக்கிறார். ஒருவர் தேவனிடத் தில் அன்பாயிருக்க விரும்பினால், அதற்கு ஒரே வழி, அவர் கட்டின சபையை நேசிப்பது தான்.

தேவன் தம்முடைய வல்ல மையை மிகப் பெரிய அளவில் ஊற்றியது, நம் பாவங்களை மன் னிப்பதற்காகத்தான். தேவனால் பாவத்தைப் பார்க்கக் கூட முடியாத பட்சத்தில், நம் அக்கிரமங்களை யெல்லாம் சுமக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை அனுப்பி வைத்தார். பவுல் ரோமர் 1:16-ல், இவ்விதமாகச் சொன்னார். "*கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரி லும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவ தற்கு அது தேவபெலனாயிருக்கி றது என்று*".

பவுல், மறுபடியும் எபேசியர் 3:20,21 வசனங்களில் இவ்விதமாகச் சொல்கிறார். "*நாம் வேண்டிக் கொள் ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படி யே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலை முறை தலைமுறைக்கும் சதாகா லங்களிலும் மகிமை உண்டாவ தாக ஆமென்*".

தேவனுடைய வல்லமை உங்களுக்குள்ளேயும், எனக்குள் ளேயும் கிரியை செய்ய முடியும். இயேசுவை அவருடைய குமார னென்று ஏற்றுக் கொண்டு, நம் சுயத்தை ஒதுக்கி வைத்து நாம் வாழும் போது, அந்த வல்லமை நம்மில் உட்பிரவேசிக்க நாம் வழி யைத் திறந்து வைக்கிறோம். அப்பொழுது, நம் எதிர்பார்ப்பு களுக்கு மேல் பலன்களை அறுப் போம். லூக்கா. 6:38ல் நாம் கொடுப்பது நமக்கு திருப்பிக் கொடுக்கப்படுகிறது என்று வாக்க ளிக்கப்பட்டிருக்கிறோம். "*கொடுங் கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக் கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடு வார்கள்...என்று*"

"*தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண் ணினவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருத யத்தில் தோன்றவுமில்லை*" (1கொரிந்தியர் 2:9). தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட காரியத்தை யோவானைக் கொண்டு எழுதினார் "*ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றை யும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன்; அவன் என் குமாரனாயிருப்பான்*" (வெளி. 21:7).

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின அதே வல்லமை யுள்ள தேவன், நான் அவரை என் தேவனாக இருக்க அனுமதித்தால், நாம் அவருடைய பிள்ளையாக இருக்க விரும்புகிறார். ❋

# நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறேன்



## Fearfully And Wonderfully Made

*Gene Carrell*

நாங்கள் வீடு சந்திக்கப் போனபோது ஓர் அழகான குழந்தையைப் பார்த்தோம். எங்கள் சந்திப்பு முழுவதும் அந்த அறிவுக் குவியல் தூங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை விழித்திருந்தால் கொட்டாவியைத் தவிர வேறு எதினாலும் எங்களை வாழ்த்தியிருக்க முடியாது. அந்தக் குழந்தைக்கு கிறிஸ்தவப் பெற்றோர்கள் இருப்பதால் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய அறிவில் அது வளரும். குழந்தைப் பருவத்திற்குப் பிறகு வாலிபப் பருவத்தை அடையும்போது அந்தக் குழந்தையே மற்றொரு சந்ததிக்குத் தகப்பனாகும்.

ஒரு சிறு கருவிலிருந்து உருவாகும் குழந்தை மிகப்பெரிய மக்கள் தொகைக்கு அடிகோடிடுகிறது. மக்கள் தொகை நிறைந்த இந்த உலகில் ஒவ்வொரு உயிரும் ஒரு மென்மையான கருவியைப் போன்றதாகும். அதற்கு இணையாக இந்த பிரபஞ்சத்தில் எதுவுமே இல்லை. ஒவ்வொருவரும் செயல்பாடுகளை, கைகளை, கால்களை, கண்களை இயக்கக்கூடிய ஆச்சரியமான மூளையால் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு உடலும் காயங்கள் ஏதாவது ஏற்பட்டால் குணமடையும் தன்மையோடு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, ஒவ்வொரு உடலும் மற்றொரு உயிரை உருவாக்கும் திறனுடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, சங்கீதக்காரன், "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறேன் என்று சொன்னதில் ஆச்சரியமில்லை " (சங்கீதம் 139:14)

ஒரு வேலையாளின் திறமைக்கு சிறந்த ஆதாரம் அவருடைய கைவேலைதான். சிருஷ்டிப்பை உற்று கவனித்து சிருஷ்டிகர் என்பவரில்லை என்று மனிதர்கள் சொல்வதை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. பெருவாரியான கட்டிட மூலப் பொருட்கள் ஒரு வீடு கட்டுவதற்குத் தேவையானவைகளைக் கொடுக்குமானால், இந்த உலக

மக்கள் தொகைக்குத் தேவையான வைகளை சிறிய அளவிலான மூலப் பொருட்கள் எப்படி சந்திக்கின்றன? என்னை ஒன்றும் அறியாதவன் என்று வேண்டுமானால் அழைத்துக் கொள்ளுங்கள். ஆனால், என் மனது சர்வ வல்லமையுள்ள தேவன் தான் இந்த உலகத்தை உண்டாக்கினார் என்கிற முடிவுக்கு ஆதரவாகத் தான் இருக்கும்.

Albert Einstein ஒரு முறை இவ்விதமாகச் சொன்னார் " நாம் பார்க்கின்றவைகளில் மிக அழகானது புரியாத புதிராக இருக்கிறது. இந்த உணர்வு ஒருவனுக்கு புதுமையாக இருக்கிறதென்றால் ஒருவன் இந்த சிருஷ்டிப்பைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, பரவசமாகாவிட்டால் அவன் செத்தவனைப் போன்றவன். அவனுடைய கண்கள் மூடப்பட்டிருக்கிறது ". மேலும் அவர் சொல்லும் போது, "மதம் இல்லாமல் விஞ்ஞானம் நொண்டியாயிருக்கிறது; அதுபோல விஞ்ஞானம் இல்லாத மதம் குருடாயிருக்கிறது". இங்கே அவர் என்ன சொல்கிறார் என்றால் இருக்கின்ற காரியங்களைக் குறித்து நம் கண்களை நாம் குருடாக்க வேண்டாம். இருக்கின்றவைகளை நம் கண்களால் எதிர் கொள்ள வேண்டும்.

Dr. O.A. Battista என்னும் விஞ்ஞானி நன்றாய்ச் சொன்னார். "தேவனுடைய கரங்களின் கிரியையை நான் எவ்வளவு சோதித்துப் பார்க்கிறேனோ, அந்தளவு இப்பிரபஞ்சம் பற்றிய மேலுமான உண்மைகளை நான் வெளிக் கொணர்ந்து, அவர் இருக்கிறாரென்றும், அவர் கிரியை நடப்பிக்கிறார் என்றும் உணர்கிறேன். என் முழு இருதயத்தோடும், நான் தேவனை விசுவாசிக்கிறேன் என்றும், வானத்தையும் பூமியையும் அவர் தான் உண்டாக்கினாரென்றும் பெருமையோடு அறிவிக்கிறேன்.❀

"நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள் அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப் பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும் போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன் " (சங். 139:13-18).



# ஆகாயக் கண்காட்சி
# The Air Show
*David Deffenbaugh*

கடந்த வாரம் ஆச்சரியமூட்டும் சாகசம் நிறைந்த ஆகாயக் கண் காட்சி யைப் பார்த்தேன், அது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இறக்கைகளின் விரிப்பு, துல்லியமான ஒருங்கி ணைந்த அசைவுகள், சரியான திருப்பங்கள், கரணம் அடிப்பதும், மேலெழும் புவதுமாக அமர்க்களமாக இருந்தது, இவைகளெல்லாம் தனியாக, ஜோடி யாக நிகழ்த்தப்படவில்லை. மாறாக, ஒரு பெரும் கூட்ட மாகச் செய்யப்பட்டது.

இங்கே, நான் சொல்வதற்கும், விமானத்துக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை. நான் பறவைகளின் சாகசங்களை பார்த்துக் கொண்டிருந்தேன். சில கருப்புநிற பறவைகள் பெருங்கூட்டமாக (அநேக மாக ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கலாம்). அவைகள் வெறுமனே கடந்து போகவில்லை, அவைகள் வட்டமிட்டுக் கொண்டி ருந்தன, கீழ்நோக்கிப் பறந்து கொண்டிருந்தன, அவைகள் சிறுகூட்ட மாகப் பிரிந்து பறந்து கொண்டிருந்தன, மறுபடியும் ஒன்றிணைந்தும், மரங்களி லிருந்து ஏறுவதும், இறங்குவதுமாக இருந்தன. அந்தப் பறவைகள் நெருக்கமாக பறந்தும், திசைகளை மாற்றியும், பலவிதமாக திரும்பியும் பறந்து கொண்டிருந்தன, ஆனாலும், ஒரு விபத்துக்கூட நேரிடவில்லை. இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இன்னும் மக்கள் பல்வேறுப்பட்ட விமானக்கண்காட்சிகளைக் கண்டு ஆச்சரியப்படலாம். ஆனால், எந்த ஒரு சாகசக் காட்சியும் பறவை களின் துல்லியமான பறக்கும் திறனுக்கு அருகில் கூட வரமுடியாது. இது எப்படி விளக்கப்படும்? பரிணாம வளர்ச்சிக்கு லட்சக்கணக்கான வருடங்கள் ஆனது என சிலர் சொல்வது போலிருந்தால் பறவைகள் இப்படிப்பட்ட துல்லியமான பறக்கும் திறமைகளை வளர்த்துக் கொள்வ தற்கு முன்பாகவே தங்களைத் தாமே மாய்த்துக் கொண்டிருக்கும். ஆனால், இது தேவனுடைய படைப்புகளில் தேவன் இருப்பதற்கான ஆதாரமாகத் தெரிகிறது (ரோமர் 1:20). ❋



# வேதாகமம் மிகத் துல்லியமானது

## The Bible Is Accurate

**Don Hatch**

**வே**தாகமத்தில் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறவைகளை பரிசோதித்துப் பார்ப்பது மிகவும் அவசியமாகும். காலம், ஆசிரியர், வாக்கிய அமைப்பு, பெயர்கள், தோல்சுருள்கள், அறிவு சார்ந்த தன்மை, ஒழுக்க நெறிகள், தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், மனிதனுடைய கடமை, தேவனின் கடமை, சக மனிதர்களுக்கான கடமை, நபர்கள், இடங்கள், எண்ணிக்கைகள் மற்றும் நேரம் போன்றவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நியன்டர் என்பவர் தேவன் தம்மை தம்முடைய கிரியையில் வெளிப்படுத்துகிறபடியே தம்முடைய வார்த்தையிலும் வெளிப்படுத்துகிறார் என்று கூறியுள்ளார். இவ்விரண்டிலும் தேவன் தம்மை உண்மையாக தேடுபவர்களுக்கு வெளிப்படுத்தும்படி தம்மை வெளிப்படுத்துகிறவராகவும், தம்மை மறைத்துக் கொள்ளுகிறவராகவும் இருக்கிறார். இவ்விரண்டிலும், நம் விசுவாசத்தை ஊக்கப்படுத்துகிற காரியத்தையும், அவிசுவாசத்திற்கான சந்தர்ப்பங்களையும் நாம் காண்கிறோம். இவ்விரண்டிலும் நாம் முரண்பாடுகளைக் காண்கிறோம், வார்த்தையிலும், கிரியையிலும் எந்த ஒரு மனிதன் தன் முழு மனதைச் செலுத்துகிறானோ அவனைத் தவிர இதிலுள்ள ஒற்றுமை மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பெற்றுக் கொள்வதற்கு மனிதனுடைய இருதயம் சோதிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் மனிதன் தன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்க வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட வாக்கியம் வேதாகமத்தைத் துல்லியமாக புரிந்து கொள்ளும் வழியைத் தொட்டுச் செல்கிறது. சந்தேகப்படுகிறவன் வேறுபாடுகளை யூகிப்பான். ஆனால், ஒரு விசுவாசி

தன் அறிவைக் கொண்டு வேத வாக்கியங்களின் ஒற்றுமையைக் காணத் தேடுவான். வேத வாக்கியங்கள் மனிதனுடைய அறிவிலிருந்து வித்தியாசமாகத் தெரிந்தால், மனிதனல்ல, வேத வாக்கியங்களே நம்பத்தகுந்தது.

வேதாகமம் தெய்வீகப் புத்தகமாக இருக்க வேண்டுமென்றால், அது மிகத் துல்லியமானதாக இருக்க வேண்டும். அதன் நம்பகத் தன்மை, அறிந்த உண்மைகளின் மீது நிலை நாட்டப்படுகிறது. இதை எவ்வித சந்தேகமும் இல்லாதபடி சரி பார்த்துக் கொள்ள முடியும். துல்லியமான தகவல்கள் மாத்திரமே வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்காது. ஆயினும், வேதாகமம் வரலாற்றுப் பூர்வமாக மனித இனத்துக்குத் தெரியாத காரியங்களை துல்லியமாகக் கொடுப்பதன் மூலம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதை நிரூபிக்கிறது. வேதாகமத்தின் எதிரிகள் பல காரணங்களைக் கொண்டு வேதாகமத்தைத் தாக்கியிருக்கிறார்கள். காலம் காலமாக வேதாகமம், தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலமாக சரி என்று நிரூபிக்கப்பட்டு வருகிறது. வரலாற்றுப் பூர்வமாக வேதாகமம் சரி என்று நிரூபிக்கப்பட்டால் பரீட்சிக்கப்படும் எல்லா இடங்களிலும் இது நிலைத்து நிற்கும். இச்சோதனையில் அது தோற்றுப் போனால், அது எல்லா பகுதிகளிலும் விழுந்து போகும்.

வேதாகமம் ஒவ்வொரு முறை தாக்குதலுக்குள்ளாகும் போதும் பிழையில்லாதது என நிரூபிக்கப்பட்டு வருகிறது. இந்த உதாரணத்தை எண்ணிப்பாருங்கள். வேதாகமத்தில் நாம் காணும் " ஏத்தியர்கள் " நீண்ட காலமாக சரத்திர ஆசிரியர்களால் மறுக்கப்பட்டார்கள். சிலர் இப்படிப்பட்ட மக்களே இருந்ததில்லை என்றார்கள். அதனால், வேதாகமத்தை அவர்கள் பரிகாசம் பண்ணினார்கள். வேதாகமம் இந்த தேசத்தாரை 48 முறை குறிப்பிட்டிருக்கிறது. இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமிக்குள் பிரவேசித்த போது, அவர்கள் பெரும் தடையாக இருந்தார்கள். தாவீது ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை விவாகம் பண்ணினான். இருப்பினும், கிடைத்திருக்கும் சரித்திரச் சான்றுகள், இப்படிப்பட்ட தேசம் குறித்து மவுனம் சாதிக்கிறது. வேதாகமத்தை விமர்சிப்பவர்கள் அது இஸ்ரவேலின் கற்பனையென்றும், பாரம்பரியக் கதை என்றும் சொன்னார்கள். சுமார் 1876ல் டாக்டர் ஜார்ஜ் ஸ்மித் என்பவர், ஆசிய மைனரில் ஜெராபிஸ் என்னும் இடத்தில் ஒரு கல் நினைவுச் சின்னத்தை கண்டெடுத்தார். அது ஏத்திய தேசத்தின் தலைநகராக கர்கெமிஷ் இருந்தது என உறுதி செய்தது. டாக்டர் A.H. ஸ்பென்ஸ், பிற்பாடு இந்த தேசம் எகிப்து மற்றும் அசிரீயாவுக்கு இணையாகப் போட்டிப் போட்டிருக்கிறது என்பதை நிரூபித்தார்.

ஆக, சந்தேகத்திற்கிடமின்றி ஏத்தியர்களின் தேசம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.


இன்னும், தட்பவெப்ப நிலை மற்றும் வேறு காரணிகள் காரணமாக, சிலர் எகிப்தில் திராட்சை இருந்ததைக் குறித்து கேலி செய்தனர். யோசேப்பு பான பாத்திரக்காரரின் தலைவனுடைய சொப்பனத்தில் திராட்சைச் செடி வந்ததையும், அதற்கான அர்த்தத்தையும் தெரிவித்ததையும் நாம் அறிவோம். ஏரோடொடஸ் (Herodotus) என்னும் பேர் கொண்ட ஒரு வரலாற்று ஆசிரியர் எகிப்தில் திராட்சை இருந்திருக்க வாய்ப்பில்லை என்று அடித்துக் கூறினார். ஆகவே, வேதாகமம் ஒரு ஏமாற்றுப் பொருள் எனக் கருதப்பட்டது. ஆயினும், எகிப்தில் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களில் திராட்சை செடியைப் பயிரிடுவது, சுத்தப்படுத்துவது, பின்பு திராட்சை ரசமாக மாற்றுவது போன்றவைகளைக் காண முடிகிறது.

சர்கோனைப் பற்றி அதிகமாகச் சொல்ல முடியும். டாக்டர். P.E. போத்தா (Botta) நினிவேயைத் தோண்டிய போது இது உண்மை எனக் காட்டினார். 1883ல் Edouard Naville என்பவரால் பித்தோமின் செங்கற்கள் நிரூபிக்கப்பட்டன அதன் கீழ் தட்டில் வைக்கோல்கள் இருந்தன, மேல் தட்டில் ஒன்றுமில்லாமல் இருந்தது. இதைத் தான் வேதாகமமும் சொல்கிறது. ஜலப்பிரளயம் பழங்கால மக்களின் எண்ணற்ற பாரம்பரியத்தாலும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களாலும் துல்லியமாக நிரூபிக்கப்பட்ட உலகளாவிய நிகழ்வாகும். உண்மையான மற்றும் நம்பத் தகுந்த ஆராய்ச்சிகளால் வேறுபாடுகள் திரும்பத் திரும்ப தெளிவுப்படுத்தப்பட்டன. ஆக, ஒவ்வொரு காலத்திலும் வேதாகமத்தை சந்தேகப்படுகிறவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். வேதாகமம் மிகத் துல்லியமானது. அதை வாசித்து, நம்பி, பயன்படுத்தி, அதின் வாக்குத்தத்தங்களைச் சார்ந்து அதின் நித்திய கோட்பாடுகள் மற்றும் பிரமாணங்களின்படி வாழுங்கள். ❋

> **வே**தத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.
>
> தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.
>
> II பேதுரு 1:20,21

## தேவனுடைய வார்த்தை

*" **நீ** கற்று நிச்சயத்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறது மல்லாமல் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது* " (II தீமோத்தேயு 3:14- 17).




தேவன் பற்றி, கடைசி காரியங்கள் பற்றி, சபை பற்றி, வேதாகம கொள்கை இருப்பது போல, வேத வாக்கியங்கள் பற்றியும் வேதாகம கொள்கை இருக்கிறது.

**வேதவாக்கியங்கள் புரிந்து கொள்ளக் கூடியது**

தீமோத்தேயு தன் சிறுவயதிலிருந்தே தாயாலும், பாட்டியாலும் போதிக்கப்பட்டபடியால் வேத வாக்கியங்களை நன்கு அறிந்திருந்தார். வேத வாக்கியங்கள் தீமோத்தேயுவின் மனதை சுவிசேஷத்திற்கு ஆயத்தமாக்கும் அளவிற்கு இரட்சிப்பிற்கு ஞானவானாக்கும் அளவிற்கு அவர் வேத வாக்கியங்களைப் புரிந்திருந்தார். வேத வாக்கியங்களைப் புரிந்து கொள்ள முயற்சி அவசியப்படுகிறது.

தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள நாம் விரும்ப வேண்டும் (யோவான் 7:17). நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப். 17:11). நாம் வேத வசனங்களை விருப்பு, வெறுப்போடும், முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட எண்ணங்களோடும் அணுகுகிறோம். இதை நாம் உணர்ந்து, இக்குறையை ஆர்வத்தோடு சரி செய்ய வேண்டும். வேத காரியங்களில்

ஒவ்வொருவரும் விருப்பு வெறுப்போடு நடந்து கொள்வதால், அது, வேதாகமத்தை ஒருவராலும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது என்ற நிலையை ஏற்படுத்தி விடாது.

தேவனுடைய திட்டம் "இரகசியமாயிருக்கிறது" அது மறைக்கப் பட்டிருக்கிறது, புரிந்து கொள்ள முடியாதது. இதை நம்மால் என்னவென்றே கண்டிருக்க முடியாது. ஆனால், தேவன் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் "*அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்ற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்* (எபேசியர் 3:3-5).

இரண்டு பேர் வேதாகமத்தை ஒரே மாதிரியாக புரிந்து கொள்ளாத போது, குறைந்தது ஒருவராவது அதைத் தவறாக புரிந்து கொள்கிறார்.

**வேதவாக்கியங்கள் வல்லமையுள்ளது.**

வேதவசனம், தீமோத்தேயுவை இரட்சிப்பிற்கேற்ற ஞானவானாக்குகியது. அது நம் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளது (யாக்கோபு 1:21). அது நம்மை பக்தி விருத்தி அடையச் செய்கிறது, பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் நமக்குச் சுதந்திரத்தைக் கொடுக்க வல்லது (அப். 20:32), அது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16).

தேவன் தம்முடைய வார்த்தையைப் பேசினார். அங்கே வெளிச்சம் உண்டானது (ஆதியாகமம் 1:3). அவர் மறுபடியும் பேசினார் அங்கே ஜீவன் உண்டானது (ஆதியாகமம் 1:11, 20, 24, 26) *கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது* (சங்கீதம் 33:6)

தேவனுடைய வார்த்தை நம்மை தேவனிடத்தில் இழுத்துக் கொள்கிறது (யோவான் 6:44,45), தேவனுடைய வார்த்தை விசுவாசத்தை உண்டாக்குகிறது (ரோமர் 10:17), தேவனுடைய வார்த்தை புத்தி சொல்கிறது, கண்டனம் பண்ணுகிறது (தீத்து 1:9). இன்னும், தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய ரீதியில் மரித்தவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறது (யோவான் 5:24).

**வேதவாக்கியம் பிரயோஜனமுள்ளது**

ஒரு நபர், அறியாமையுள்ளவராக இருந்தால், அவருக்கு போதனை தேவைப்பட்டால், வேண்டுமென்றே பாவம் செய்தால், தவறான வழியில் போனால், சீர்திருத்தம் தேவைப்பட்டால் அல்லது சரியான காரியங்களில் வளர்வதற்குத் தேவையான போதனைகள் அவசியப்பட்டால், இவைகள் எல்லாவற்றிற்கும் வேத வாக்கியங்கள் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

தேவனுடைய வார்த்தையைப் போதிக்க உதவி செய்யும் எந்த ஒரு நல்ல முறையையும் கையாள நாம் திறந்த நிலையில் காணப்பட வேண்டும். ஆலோசனை நுணுக்கங்கள், தகவல் முறைமைகள், தேவனுடைய வார்த்தையை நாம் அறிவிக்க உதவும். ஆனால், மனோதத்துவம், கேளிக்கை நிகழ்ச்சிகள், இதமான பேச்சுகள் போன்றவை தேவன் தம்முடைய வார்த்தைகளால் உண்டு பண்ணுகிற இரட்சிப்பையோ அல்லது மாற்றத்தையோ கொண்டு வராது. நாம் உண்மையாக நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு தேவனுடைய வார்த்தையை அறிவிக்க வேண்டும்.

**வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது.**

ஆகவே தான், அது புரிந்து கொள்ளத்தக்கதாகவும், வல்லமையுள்ளதாகவும், பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது. ❋

**தேவனுக்குச் சொந்தமானவர்கள்**

**நாம்** தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தால் நம்முடைய மதிப்பும், பிற காரியங்களும் நமக்குச் சொந்தமாகாது. அவருடைய அளவுகோலின் படியாக அவைகள் தீர்மானிக்கப்படுகிறது. அவைகள் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்கிறது.


" கிறிஸ்தவ ஜீவியத்திற்கு சமநிலை வகிப்பது அவசியம். ஒவ்வொரு எதிர்மறையான செல்வாக்கும் அச்சுறுத்தலானது. தடுமாறாமல் இருக்க தேவனுடைய வார்த்தையைப் பிடித்து உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். உங்களுக்கான இலக்கை நோக்கி நிலைத்திருங்கள் ".

## வாழ்வதற்கான உபதேசம்

# எங்களுக்கு சத்தியத்தைத் தாரும் – முழுமையாக!

# Give Us Truth - All Of It!

*Carroll Sites*



"*இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி; நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்*" (யோவான் 8:31,32).

"அநேக இடங்களில் சுவிசேஷம் தவறாகப் பிரசங்கிக்கப்படுகிறது. அது இலவசக் கிருபையை முக்கியப்படுத்துகிறது. ஆனால், முழுமையான கீழ்ப்படிதலை முக்கியப்படுத்துவதில்லை என்று ஒருவர் கூறியுள்ளார்". பாவமன்னிப்பு மட்டுமல்லாமல், பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை போன்றவைகளை உள்ளடக்கிய முழுமையான செய்திகளை பிரசங்கிக்கத் தவறியதால் பல தலைமுறை கிறிஸ்தவர்கள் தேவனுடைய காரியங்களில் முழுமையாகவும், முறையாகவும் வளராமல் இருப்பதற்கு காரணமாகிவிட்டது.

ஆமென்-ஆமென்!! தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் இலவச ஈவு கிறிஸ்து மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பாயிருக்கிறது (ரோமர் 6:23). ஆனால், இது மனிதனுடைய பங்கில் கீழ்ப்படிதலைத் தடை செய்வதில்லை. கீழ்ப்படிதலில்லாமல் தேவனுடைய கிருபையால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் எனப் போதிக்கும் எந்த ஒரு மனிதனும் தேவ கிருபையை எள்ளி நகையாடுகிறவனாக இருக்கிறான். நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 2:8). நாம் கீழ்ப்படிதலினாலும் இரட்சிக்கப்படுகிறோம் (மத். 7:21; எபி. 5:9). கிருபை கீழ்ப்படிதலைத் தடைசெய்வதில்லை, அது போலவே, கீழ்ப்படிதலும் கிருபையைத் தடைசெய்வ தில்லை. கிருபை தேவனுடைய பங்கு - கீழ்ப்படிதல் மனிதனுடைய பங்கு. நாம் ஒன்றுமே செய்யாமல் தேவன் நமக்கு எதையாவது தருவதாக ஒருபோதும் வாக்குத்தத்தம் செய்யவில்லை.

நமக்குத் தேவை சத்தியம் - முழு சத்தியம் - சத்தியத்தைத் தவிர வேறொன்றுமில்லை. நம்முடைய பக்தியின் வளர்ச்சிக்காக நாம் கண்டனம் பண்ணப்பட வேண்டும், கடிந்து கொள்ளப்பட வேண்டும், புத்தி சொல்லப்பட வேண்டும் (II தீமோ. 4:2). நமக்கு தேவனுடைய வார்த்தை தேவை. நாம் தேவனுடைய வார்த்தையால் இரட்சிக்கப்பட வேண்டும், வார்த்தையால் வளர வேண்டும் - வார்த்தையின்படி வாழ வேண்டும். ஏனென்றால், அவருடைய வார்த்தையால் தான் நாம் நியாயந்தீர்க்கப்படப் போகிறோம். (யோவா 12:48) எங்களுக்கு சத்தியத்தைத் தாரும் – முழு சத்தியத்தைத் தாரும் – சத்தியமில்லாமல் வேறொன்றும் தேவை இல்லை!.

# அவர்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள்

# AND THEY HEARD THE VOICE (SOUND) OF THE LORD GOD

*Hollis Miller*

"ஆதாமும், ஏவாளும் பாவம் செய்ததைத் தொடர்ந்து, தேவன் ஆதாமைப் பார்த்து "*நீ எங்கே இருக்கிறாய்*"? என்று கேட்டார். சர்வவல்ல தேவன் இப்படிக் கேட்டதின் நோக்கம், அவன் செய்த பயங்காரமான செயலின் விளைவை உணர வேண்டுமென்பதற்குத் தானே தவிர, சில விமர்சனங்கள் சொல்வதுபோல், அவன் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அல்ல. அது, தேவன் ஆதாமை நோக்கி " நீ என்னிடமிருந்து திரும்பி விட்டாய், இப்போது உன்னால் தாங்க முடியாததை அறுவடை செய்துவிட்டாய்; அது, மரணம் மற்றும் பாவத்தின் அறுவடை " என்று சொன்னது போல் தெரிகிறது.

தேவன் ஆதாமோடு கேட்ட கேள்வி ஒவ்வொரு மனிதனிடத்திலும் கேட்கப்பட வேண்டும். இக் கேள்வியை ஒருவன் எதிர் கொள்ளும் வரை, ஒருவருடைய வாழ்க்கையை தேவனுடைய சித்தத்தோடு இசைவாக்கும் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாது. நாமும் ஆதாமைப் போல கலகம் செய்து, மரணத்தை நம் வாசலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்; தேவனுடைய கிருபை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மூலமாக பிரசன்னமானது. எனவே தான், ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாகச் சொன்னார். "*கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்* " என்று. (ஏசாயா 53:6).

வெகுகாலத்திற்கு முன்பாக சங்கீதக்காரர் இவ்விதமாக எழுதினார். " *இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்* " (சங்கீதம் 95:8). அதுபோலவே எபிரெய எழுத்தாளரும், பின்வரும் சந்ததியாருக்கு இதே எச்சரிப்பைத் திரும்பவும் விடுத்தது எவ்வளவு முக்கியமானது! (எபிரெயர் 3:7).

*பவுல், எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையுள்ளவர்களாகி என்றும், அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை;* (ரோமர். 3:10,23) என்றும் கூறியுள்ளார்.

ஆயினும், அப்போஸ்தலர்களின் சிறந்த வெளிப்பாடு எல்லோருக்கும் ஏற்புடையதாக இல்லை. ஒருவர் தன்னிடத்தில் பாவமே இல்லை, தேவனுக்கு முன்பாக எவ்வித குற்ற உணர்வோடும் தானில்லை என்று நினைத்தால். அப்படிப்பட்டவன் பாவத்திற்கான விடுதலையை நாடமாட்டான். பெந்தெகொஸ்தே நாளில் இருதயத்தில் குத்தப்பட்டவர்கள் தான் "*சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் கேட்டார்கள்*" (அப்போஸ்தலர் 2:37).

தேவனுடைய கிருபை இயேசு கிறிஸ்துவுக்குள் வெளிப்பட்டது என்ற உண்மையை ஏற்க மறுக்கும் கடின மற்றும் உணர்வற்ற இருதயம் உண்மையிலேயே மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. ஆனபோதிலும், தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, செவியை விலக்குவது இருதயக் கடினத்தின் ஆரம்பமாயிருக்கிறது. இந்த வரிகளை வாசிக்கும் யாருக்கும் இப்படிப்பட்ட கடின இருதயம் வேண்டாம். நீங்கள் அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுப்பதாக இருந்தால், இன்றே அவரிடம் திரும்புங்கள் ! ❋

## *நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்களா?*

1. நீங்கள் வருடத்தில் இருமுறை வீட்டு வாடகை கொடுக்கத் தவறினால், வீட்டு உரிமையாளர் உங்களை உண்மையுள்ளவரென்று எண்ணுவாரா?
2. நீங்கள் மாதத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வேலைக்கு வராமலிருந்தால் உங்கள் முதலாளி உங்களை உண்மையுள்ளவரென்று எண்ணுவாரா?
3. உங்கள் தொலைக்காட்சிப் பெட்டி ஒழுங்காக வேலை செய்யவில்லையென்றால், அது நன்றாக வேலை செய்கிறது என்று பாராட்டுவீர்களா?

***அது போல,***

நீங்கள் மாதத்தில் ஒருமுறையோ அல்லது இருமுறையோ ஆராதனையிலும், வேத பாட வகுப்பிலும் கலந்து கொள்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை உண்மையுள்ளவர்களென்று எண்ணுவாரா?

### வாழ்வதற்கான உபதேசம்

# பாவம் செய்வது யார்?

# Who Commits The Sin?

***Don W. Walker***

**யா**த்திராகமம் 32 ஆம் அதிகாரத்தில் பொன் கன்றுக் குட்டி பற்றிய சம்பவத்தை வாசிக்கிறோம். " மோசே இல்லாதபோது ஜனங்கள் ஆரோனிடம் *எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும்" என்றார்கள்* (யாத்திராகமம் 32:1). அதற்கு ஆரோன் அவர்களிடமிருந்த பொன்னணிகளைக் கழற்றித் தன்னிடத்தில் கொண்டு வரும்படி சொன்னான். அவர்கள் கொண்டு வந்த பிறகு அதை ஆரோன் சிற்பக் கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான் (யாத்திராகமம் 32:4). *ஆரோன் அந்த பொன் கன்றுக்குட்டிக்கு முன்பாக ஒரு பலி பீடத்தைக் கட்டினான், பின்பு ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்* (யாத்திராகமம் 32:5,6).

முப்பத்திரெண்டாம் அதிகாரம் நிறைவடையும் போது, முப்பத்தைந்தாம் வசனத்தில், *ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் செய்வித்ததின் நிமித்தம் கர்த்தர் அவர்களை உபாதித்தார் என்று வாசிக்கிறோம்.* " ஜான்னி ராம்சே" என்ற வேத விற்பன்னர் நடைமுறை வேதாகம பாடங்கள் என்ற புத்தகத்தின் பகுதி 1ல் இவ்விதமாக எழுதுகிறார். "தீமையான ஒரு செயலில் நாம் பங்கு பெறும்போது, அந்த வெட்கத்திற்குரிய காரியத்தில், நாம் தலைவர்களாக இருந்தாலும், இல்லா விட்டாலும் தெய்வ பக்தியற்ற அக்காரியத்தில் நாமும் பங்கு பெற்றவர்களாகவே இருப்போம்" என்கிறார். துன்மார்க்கமான காரியங்களில் பங்கு பெறுவதோ, அதற்கு உதவிச் செய்வதோ, அல்லது அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதோ அதைச் செய்வதற்கு சமமானதே.

இந்தக் கோட்பாட்டு நாம் II மற்றும் III யோவான் நிருபங்களில் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும், பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடியும். இந்த இரு சம்பவங்களையும் நாம் கவனித்து சில நடைமுறை பயன்பாடுகளை நாம் பார்ப்போம். II யோவான் 9-11 வசனங்களில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். *கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல;*

*கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.*

கள்ளப் போதகர்களுக்கு நாம் வாழ்த்துதல் சொன்னால் கூட அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கு நாம் பங்குள்ளவர்களாகிறோம் என்கிற உபதேசத்தோடு நம்மை நாம் சம்மந்தப்படுத்திப் பார்க்க வேண்டும். ஆனால், நேர்மறையாகப் பார்த்தால் III யோவான் 6-8 வசனங்களில், நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் "*அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்" தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழி விட்டனுப்பினால் நலமாயிருக்கும். ஏனெனில், அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப் போனார்கள். ஆகையால், நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.*

இங்கே, இதன் கருத்து என்னவென்றால், தேவச் சித்தம் செய்வதினால் தேவனோடு கொள்ளும் ஐக்கியம், இயல்பாகவே நம்மை தேவச் சித்தம் செய்யும் பிறரோடு ஐக்கியம் கொள்ளச் செய்கிறது. தேவச் சித்தம் செய்வதற்கான நம்முடைய திறமைகளும், ஊழியப் பாணியும் வேறுபாட்டாலும் இது சாத்தியமே. இது, உபதேசிக்க நம்மால் முடியாவிட்டாலும், போதிக்கப்படுகிற காரியங்களில் பங்கு பெற்று, அதன் மூலம் போதிக்கப்படுகிறவைகளுக்குக் கணக்குக் கொடுக்கிறவர்களாகயிருக்கிறோம் என்று சொல்லுகிறது. அதுபோலவே, தேவபக்தியற்ற காரியங்களில் சம்பந்தப்படுவதும், அந்தப் பொல்லாத காரியங்களுக்கு நாம் பங்குள்ளவர்களாகிறோம் என்பது தெளிவாகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், 1 தெசலோனிக்கேயர் 5:22 மற்றும் எபேசியர் 5:11 வசனங்களில் இவ்விதமாக எழுதியுள்ளார். "*பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்*" "*கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்*" என்று.

கள்ள உபதேசத்திற்கும், துன்மார்க்கத்திற்கும் நம் பொறுப்பு இரண்டு விதமாயிருக்கிறது. முதலாவது, அதோடு நாம் ஐக்கியம் வைத்துக்கொள்ளக் கூடாது, இரண்டாவது, நாம் அதைக்

கடிந்து கொள்ள வேண்டும். நாம் தலைவர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், பொல்லா தலைவகளோடு ஐக்கியம் வைத்து அவைகளோடு சமரசம் ஆகும் போது, நாமும் பாவம் செய்கிறவர் களாகிறோம். இதை மனதில் கொண்டவர்களாக நாம் ஒவ்வொரு வரும் வேதாகமத்தை அதிகம் அதிகமாகப் படிப்போம். ❋

## சிந்தனைக்கு

- ஒரு கவலை ஜெபத்தில் வைப்பதற்குச் சிறியதாக இருந்தால், அது சுமப்பதற் கும் சிறிதாகத் தான் இருக்கும்.
- ஒரு நிமிடம் வாயை மூடுவது ஒரு மணி நேர விளக்கம் கொடுப்பதற்குச் சமம்.
- நீங்கள் எதற்காக வாழ்கிறீர்களோ அது, அதற் காக நீங்கள் மரிப்பதற்கும் தகுதியானது தானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

– தெரிந்தெடுக்கப்பட்டது.

## மௌன சமரசம்

நீங்கள் குற்றம் செய்ததாக சுட்டி காட்டப்பட்டால் அதை எழுந்து கேட்கா விட்டால் அது கோழைத்தனமாகும். நீங்கள் ஒன்றை சரியென்றும், உண்மை யென்றும் நம்பினால், நிச்சயமாக அதை அப்படியாகத்தான் என்று சொல்ல வேண்டும்! அமைதியாயிருக்கும் பெரும் பான்மையினர் தைரியமாக எழுந்து பேசினாலொழிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

*மௌனத்தின் மூலம் சமரசம் செய்த யூதத் தலைவர்களைப் பற்றி யோவான் சொல்வதைக் கவனியுங்கள் "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்" (யோவான் 12:42).*

அந்த யூதத் தலைவர்கள் இயேசுவில் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், அவர்கள் தங்கள் விசுவாசம் பற்றி ஒன்றுமே சொல்லாமல் விசுவாசத் தோடு சமரசம் செய்தார்கள். அவர்கள் பரிசேயர்களால் நிராகரிக்கப்படுவதை யும், ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப் படுவதையும் விரும்பாதபடியினால், அவர்கள் மௌனமாயிருந்தார்கள், அவர் கள் பயந்தார்கள்.

தவறு தலைவிரித்தாடுவதற்கு ஒரே காரணம், உண்மையை அறிந்தவர் கள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமலி ருப்பது தான்.

- JIMMY JIVIDEN



# கள்ளப் போதகர்கள்

# False Teachers

*Wayne Barrier*

*எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன் (அப். 20 : 28-30).*

கள்ளப்போதகர்கள், சில வேளைகளில் மந்தைக்குள்ளிருந்தே எழும்புவது, முதல் நூற்றாண்டிலும் பிரச்சனையாக இருந்தது, இன்றும் பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் தங்களுக்குத்தாமே சேவை செய்து கொள்ளுகிறவர்களும், அதிகாரத்தை நாடுகிறவர்களும், ஏமாற்றுபவர்களும், சாத்தானின் திறமையுள்ள கைக்கூலிகளாகவும் இருக்கிறார்கள். இன்று இவர்கள் சபைகளில் பிரிவினைகளுக்கும், விசுவாச இடறல்களுக்கும் காரணமாயிருந்து. கொடுக்கப்பட்டுள்ள மூல உபதேசங்களை ஒரு புதிய கண்ணோத்துடன் பார்க்க வேண்டும் எனத் தூண்டிவிடுவார்கள். அவர்கள் வேத வாக்கியங்களை புதுவிதமாக வியாக்கியானம் பண்ணலாம் என்பதோடு, வேத வாக்கியங்களை வியாக்கியானம் செய்வதில், தாங்கள் ஏனைய எல்லோரைப் பார்க்கிலும் வல்லவர்கள் என்றும் கூறுவார்கள்.

"கள்ளப்போதகர்களுக்கு செவி சாய்ப்பதின் ஆபத்துக்கள் பற்றி வேதாகமம் அநேக எச்சரிக்கைகளைக் கொண்டுள்ளது. பவுல் எபேசு பட்டணத்தை விட்டுச் செல்வதற்கு முன்பாக, கள்ளப் போதகர்கள் பற்றி எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

*ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர்*

அப்போஸ்தலனாகிய பேதுருவும் கள்ளப் போதகர்களைக் குறித்து முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களை எச்சரித்தார்.

" *கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகால முதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது* " (II பேதுரு 2:1-3).

"*இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண் வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும், காம விகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள். தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே*" (II பேதுரு 2:17-19).

கள்ளப்போதகர்கள், வேத வசனங்களில் பரிச்சயம் இல்லாதவர்கள் மற்றும் வசனங்களைக் கொண்டு தங்கள் நிலையை உண்மையாகச் சோதித்து அறிய விரும்பாதவர்களைச் சுலபமாக வசப்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் கவரக் கூடியவர்களாக இருந்து, அதிக அறிவுள்ளவர்களாகவும், விசேஷித்த ஞானமுடையவர்களாகவும் தோற்றமளிப்பார்கள்.

நாம் கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டு கொள்வதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தவறினால், நாமும், அநேகரைப் போல் விழுந்து போவோம். பேதுரு கள்ளப்போதகர்களின் நிலைமையையும், அவர்களைப் பின்பற்றுபவர்களின் நிலைமையையும் பற்றிக் கூறுவதை கவனியுங்கள் "*அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்*" (II பேதுரு 2:21). ❋

## இரட்சிப்பு

# கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள்

## *Only the obedient will be saved*

***Rick Cunningham***

"ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எப்போதுமே இரட்சிக்கப் பட்டவர்கள் " என்று ஒரு பொதுவான நம்பிக்கை இன்று இருக்கிறது. ஒருவர் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருந்தால், தேவனுடைய ஆவியை உண்மையாகவே பெற்றிருந்தால், அவர் விழுந்து போக முடியாது, விழுந்து போக மாட்டார்.

மக்கள் உண்மையாக இரட்சிக்கப்படுவதும், இழந்து போவதும், மறுபடியும் பழைய நிலைமைக்கு வருவதும், மறுபடியும் இழந்து போவதும் சகஜமான ஒன்று தான், சாத்தியமான ஒன்று தான். உண்மையில், நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு வழி விலகக் கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் நம்மை எச்சரித்திருக்கிறார். *"ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே; இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்; அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் காண்டார்கள். ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார். சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் (எபிரெயர் 3:7-12).*

நாம் தேவனை எந்த அளவு ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை நம் வார்த்தைகளும், செயல்பாடுகளும் நிர்ணயம் செய்யும். எனவே தான், இயேசு,

" *ஒருவன் என்னில் அன்பாயிருந் தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் என்றும், என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான்* " என்றும் சொன்னார் (யோவான் 14:23,24). இதே போத னையைத் தான் பரிசுத்த ஆவி யானவரும் அப்போஸ்தலர்க ளுக்கு நினைப்பூட்டினார் (யோ வான் 14:26).

நண்பர்களே, நம்முடைய செயல்பாடுகள் எப்படியிருந்தா லும், ஒருமுறை பெற்றுக் கொண்ட இரட்சிப்பு எப்பொழுதும் நிலைத் திருக்கும் என்கிற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இதற்கு மாறான எந்த ஒரு உபதேசமும் கர்த்தருடைய உபதேசம் அல்ல. ❋

## ஞானஸ்நானத்தின் நோக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பாவங்கள் கழுவப்பட | (அப். 2:38, 22:16) |
| 2. | கிறிஸ்துவுக்குள்ளாக | (கலா. 3:27) |
| 3. | கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள | (கலா. 3:27) |
| 4. | சபைக்குள்ளாக | (அப். 2:47, 1 கொரி. 12:13) |
| 5. | புதிய வாழ்க்கை துவங்க | (ரோம 6:3,5) |
| 6. | பழைய மனிதனைக் களைந்து போட | (ரோம 6:3,5) |
| 7. | இரட்சிக்கப்பட | (1 பேதுரு 3:21) |
| 8. | பரிசுத்த ஆவியின் வரம் பெற | (அப். 2:38, ரோமர் 8:9,11) |
| 9. | கிறிஸ்துவின் ரத்தத்தோடு தொடர்பு கொள்ள | (ரோமர் 5:9) |
| 10. | எல்லா நீதியையும் நிறைவேற்ற | (மத். 3:15) |

# முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள்

## The First Century Christians

*Kenneth McClain*

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாக இருந்து, தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்தார்கள். (அப். 20:7); கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றிருக்கிறார்கள் (அப். 2:42; 1 கொரிந்தியர் 11:17-34); துதிப்பாடல்களைப் பாடியிருக்கிறார்கள் (எபேசியர் 5:18-20, கொலோ. 3:16,17); கூடி ஜெபித்திருக்கிறார்கள் (அப். 2:42); (1தெச. 5:17). உலகத்திலேயே மிகப் பெரிய வேலையாகிய ஊழியத்திற்கு உதவும்படி காணிக்கை கொடுத்திருக்கிறார்கள் (1 கொரி. 16:2; 2 கொரி. 9:6,7); மனிதனால் பெற்றுக் கொள்ளக் கூடிய மிகப்பெரிய செய்தியாகிய தேவனுடைய வார்த்தையைக் கேட்டிருக்கிறார்கள் (அப். 2:42; 20:7).

இந்தக் கிறிஸ்தவர்கள் ஒன்றாக இணைந்து பிராந்திய சபையில் தேவனை ஆராதித்திருக்கிறார்கள்; அவர்கள் சுய ஆளுகை உடையவர்களாயிருந்தார்கள். அவர்களை ஆளுகை செய்ய எந்த மைய அமைப்பும் இல்லாதிருந்தது. ஒவ்வொரு உள்ளூர் சபையும் மூப்பர்களால் ஆளுகை செய்யப்பட்டது (அப். 14:23; பிலி. 1:1; தீத்து 1:5). இந்த உள்ளூர் சபைகளெல்லாம் சபைக்கு தலையாயிருக்கிற கிறிஸ்துவினிமித்தம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன.

நாமும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல அதே சபையின் அங்கத்தினர்களாக இருந் தால், நாமும் அதே செய்தியை அறிவிக்கிறவர்களாக இருக்க வேண் டும். அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த் தெழுதலை அறிவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். மனிதர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அந்த விசுவாசத்தை அறிக்கை செய்ய நாம் போதிக்க வேண்டும். மனிதர்கள் தங்கள் பாவங்களிலிருந்து திரும்பி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்படி போதிக்க வேண்டும் (கலா. 3:26,27). மனிதர்கள் கிறிஸ்துவினிடத்தில் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல் ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும் எனப் போதிக்க

வேண்டும். அதுபோலவே, கர்த்தருடைய சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட வேண்டும் (அப். 2:47).

நாம் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்தால் புதிய ஏற்பாட்டு மாதிரியை நோக்கத்திலும், உபதேசத்திலும், ஆராதனையிலும், ஆளுகை அமைப்பிலும், வாழ்க்கையிலும், மகிழ்ச்சியிலும் மீட்டமைக்க நாடுவோம். கிறிஸ்துவின் சபைக்கு அன்றும், இன்றும் ஒரே நோக்கம் தான் இருக்கிறது. இழந்து போன உலகின் ஆத்துமாக்களைத் தேடுவதும் இரட்சிப்பதும் தான். ❋

# சபை

1. சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல. (எபே. 3:10,11, ஏசா. 2:1–4)

2. சபை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமானதல்ல (மாற். 16:15; மத். 28:18–20)

3. சபை சமூக நிலையை உயர்த்துவதற்கான ஸ்தாபனமல்ல (மத். 25:31–46)

4. சபை மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடம் அல்ல. (அப். 5:11)

5. சபை ஒரு மார்க்க பிரிவினைக் கூட்டமல்ல (அப். 20:29,30; 1 தீமோ. 4:1,3)

6. சபை தனக்குத் தானே சொந்தப் பிரமாணத்தை அளிக்கக் கூடியதல்ல (யாக்கோபு 4:12)

சபை

# தகுதியுள்ள தலைமைத்துவம்

## QUALIFIED LEADERSHIP

*Tom Kelton*

சபையில் மூப்பர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகுதியாம்சங்கள் 1 தீமோத்தேயு 3:2-7 மற்றும் தீத்து 1:7-10 வசனப்பகுதிகளில் இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பண்புகள் பற்றிய வியாக்கியானங்கள் சம்மந்தமாகவும், அவைகள் எந்த அளவுக்கு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பது சம்மந்தமாகவும், அநேக ஆண்டுகளாக அதிகமாக பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது.

சிலர், மூப்பர்களின் தகுதியம்சங்கள் குறித்து மிகக் கடுமையாக, பிடிவாதமாக இருக்கிறார்கள். அதாவது, மூப்பகளாக நியமிக்கப்படுகிறவர்கள் எல்லாவற்றிலும் பூரணமாக இருக்க வேண்டும் என வாதிடுகின்றனர். ஏதாவது குறையில்லாதவர்கள், தவறு செய்யாதவர்கள் யாருமே இல்லாதபடியால், எங்குமே மூப்பர்களாக சேவைச் செய்ய யாருமே இல்லை என்கின்றனர்.

ஒரு சிலர் வேறுவிதமாக சிந்திக்கிறார்கள். வேதாகமத்தின் நிபந்தனைகளுக்கு முழுமையாக உட்படுவது சற்று கடினம். எனவே, சிலவற்றை ஏற்றுக் கொள்ளலாம் சிலவற்றை மாற்றலாம், சிலவற்றை விட்டு விடலாம் என்கின்றனர். மூப்பர்களின் தகுதியாம்சங்களில் பெரும்பாலானவைகள் கடுமையாகவும், கடினமாகவும் இருப்பது உண்மை தான். ஒரு மூப்பர் ஒரே மனைவியை உடைய புருஷனாயிருக்க வேண்டும். இல்லையென்றால் மூப்பராகும் தகுதியை ஒருவர் இழந்து விடுகிறார். “ ஒருவர் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவராயிருக்க வேண்டும்; தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவருமாயிருக்க வேண்டும், அவர் மதுபானம் பண்ணுகிறவருமாயிருக்கக் கூடாது. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.

இன்னும், சில தகுதியாம்சங்கள் சற்று கடினமாயிருக்கிறது. ஒரு மூப்பர் தன் இஷ்டப்படிச் செய்யாதவராயிருக்க வேண்டும். முற்கோபமில்லாதவராக இருக்க வேண்டும். தெளிந்த புத்தியுள்ளவராக இருக்க வேண்டும். ஆனால் எந்த அளவுக்கு? எப்படி அவர் உபசரிக்கிறவராக இருக்க வேண்டும்? எப்படி விழித்திருக்க வேண்டும்?.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், ஒருவருடைய வழிநடத்தும் திறமையும், நல்ல முன்மாதிரியைக் காட்டுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். சபையில் மேய்ப்பர்களாக இருப்பவர்கள் மந்தைக்கு மாதிரிகளாக இருக்க வேண்டும் (1பேதுரு 5:3). மேற்சொல்லப்பட்ட பகுதிகளில் ஒருவர் பூரணமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், சபைக்கு அவர் சிறந்த முன் மாதிரியாக இருக்கிறாரா? மூப்பர் கிறிஸ்தவத்திற்கு பொருத்தமான மாதிரியாக இருக்கிறாரா? இப்படிப்பட்ட மனிதனை சபை சுலபமாக எவ்வித பிரச்சனையுமின்றிப் பின்பற்ற முடியுமா? மூப்பர் கிறிஸ்தவத்திற்கு பொருத்தமான மாதிரியாக இருக்கிறாரா? அவர் கிறிஸ்தவத்திற்குத் தகுதியான ஒருவராகக் காணப்படாவிட்டால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கண்காணிக்கவும், வழிநடத்தவும் அவருக்கு என்ன உரிமை இருக்கிறது?

மூப்பர்களுக்கான சில அவசியமான தகுதிகள் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்கள் மரியாதையை சம்பாதிக்கத்தக்க முதிர்ச்சி அடைந்தவர்களாக, வயதில் முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் வழி நடத்தும் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களை விருப்பத்தோடு பின்பற்ற ஆட்கள் இருக்க வேண்டும். விருப்பத்தோடு பின்பற்ற ஆட்களில்லாத தலைமைத்துவம் பயனற்ற ஒரு சர்வாதிகாரமே. ❋

## நீங்கள் எதை விதைக்கிறீர்கள்?

- ❖ நேர்மையை விதைத்தால் நம்பிக்கையை அறுவடை செய்யலாம்
- ❖ நற்தன்மையை விதைத்தால் நண்பர்களை அறுவடை செய்யலாம்
- ❖ விடாமுயற்சியை விதைத்தால் திருப்தியை அறுவடை செய்யலாம்
- ❖ கடின உழைப்பை விதைத்தால் வெற்றியை அறுவடை செய்யலாம்
- ❖ மன்னிப்பை விதைத்தால் ஒப்புரவாகுதலை அறுவடை செய்யலாம்
- ❖ தாழ்மையை விதைத்தால் உயர்வை அறுவடை செய்யலாம்
- ❖ ஒற்றுமையை விதைத்தால் நற்பலனை அறுவடை செய்யலாம்
- ❖ ஒழுக்கத்தை விதைத்தால் நற்பெயரை அறுவடை செய்யலாம்
- ❖ பாசத்தை விதைத்தால் ஆதரவை அறுவடை செய்யலாம்
- ❖ சகிப்புத்தன்மையை விதைத்தால் பாராட்டை அறுவடை செய்யலாம்

# சபையின் முக்கியத்துவம்

# The Importance of the Church

*William Woodson*

ஒரு தனிப்பட்ட நபர் ஒரு குறிப்பிட்ட செயலில் விருப்பத்தையும், ஈடுபாட்டையும் காட்டுவதற்கு, அந்தச் செயலின் முக்கியத்துவம் பெரும் பங்கு வகிக்கிறது. பள்ளிப் பணியில், திருமணத்தில், குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கும் ஈடுபாடு மற்றும் விருப்பம் அவைகளில் அவர் வைத்திருக்கும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இது குறிப்பாக சபையிலும் உண்மையாயிருக்கிறது. எந்த ஒரு உலக சக்தியும் தவறாத வருகையையும், ஈடுபாட்டையும் வற்புறுத்துவதில்லை; இதற்கு பொருளாதார ஊக்கத்தொகை எதுவுமில்லை. சபையில் ஒருவருக்கு இருக்கும் விருப்பமும், ஈடுபாடும் அவர் சபையின் மீது வைத்திருக்கும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் சபையின் முக்கியத்துவத்தை எப்படித் தீர்மானிக்கிறார். வேத வாக்கியங்களில் சபையின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு விவரிக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனியுங்கள்.

**1. சபை தேவனுக்கு முக்கியமாக இருந்தது.** சபையைக் குறித்த நோக்கம் தேவனுக்கு நித்திய நித்திய காலமாக இருந்திருக்கிறது. " *உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக " என்றுள்ளது.* (எபேசியர் 3:10). அந்த நோக்கமானது படிப்படியாக தீர்க்கதரிசிகள் மூலமாகவும், இயேசுவின் ஊழியத்திலும் மகத்தான அளவில் வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய திட்டத்திலும், நோக்கத்திலும் சபை இருந்தபடியால், சபை தேவனுக்குச் சொந்தமானது, சபை தேவனுக்கு முக்கியமாக இருந்ததென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

**2. சபை இயேசுவுக்கு முக்கியமாக இருந்தது.** சபை ஸ்தாபிக்கப்படும்படியாக இயேசு தம் ஜீவனையே விட்டார். சபை இயேசுவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்டது. (அப். 20:28; எபேசியர் 5:25,26). அவர் சபைக்கு தலையாயிருக்கிறார். (கொலோ. 1:18; எபேசியர் 1:22). கிறிஸ்து தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதலை சாத்தியப்படுத்துகிற மத்தியஸ்தராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5; எபேசியர் 2:6). இந்த

உலகில் உள்ள எல்லாவற்றிற்கும் முடிவு உண்டாகும் வரை அவர் சபையில் ஆளுகை செய்வார் (1கொரி. 15:24-28). சபை இயேசுவுக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது.

**3. சபை தேவனுடைய ஜனங்களுக்கு முக்கியமாக இருந்தது.** அவர்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகிறார்கள் (எபேசியர் 2:16). அவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதித்து தேவ குமாரர் பரலோகத்திலிருந்து வருவதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். (1தெச. 1:9,10). கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் நம்பிக்கை சபையில் காணப்படுகிறது (1பேதுரு 1:3). சபையில் தேவ பக்தி வளர்ச்சி அடைவதற்கும், தேவ சாயலை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பும், ஆதாரமும் இருக்கிறது (II கொரி. 3:18) தேவன் மற்றும் கிறிஸ்துவின் எண்ணங்கள், மற்றும் செயல்பாடுகளில் சபை கொண்டிருக்கும் முக்கியத்துவத்தின் காரணமாகவும், நம் சொந்த ஜீவியங்களில் சபை கொண்டிருக்கும் முக்கியத்துவத்தின் காரணமாகவும், நாம் சபையில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவதற்கும், ஈடுபாடு கொள்வதற்கும் அது தகுதியானதாக உள்ளது. ❋

## சபை கூடிவருதல்

மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும்
நாம் ஏவப்படும்படி
ஒருவரையொருவர் கவனித்து;


சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.

(எபிரெயர் 10:24,25)

# கிறிஸ்தவ ஒற்றுமையின் வல்லமை

## *The Power of Christian Unity*

***Reuben Emperado***



ஒற்றுமை என்கிற எண்ணம் புதியதல்ல. இது மனித எண்ணமுமல்ல. இது நம்முடைய ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்து வின் இதயத்துக்கு மிக நெருக்கமான ஒன்றாயிருக் கிறது. இயேசு மனப்பூர்வ மாக, ஊக்கமாக ஒரு காரியத் திற்காக ஜெபித் திருக்கிறா ரென்றால் அது தம்மைப் பின்பற்றுகிறவர் களுடைய ஐக்கியத்திற்கா கத்தான். அது தான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் கூக்குர லாகவும், ஆதிக் கிறிஸ் தவர்களின் செய்தியாகவும் இருந்தது (எபே. 1:9,10; 1 கொரி. 1:10; பிலிப். 1:27).

உலகம் பதட்டத்தாலும், யுத்தத்தாலும், பிளவுகளாலும் நிறைந்திருக் கிறது. வெளிச்சத்தின் சக்திகளுக்கும், அந்தகாரத் தின் சக்திகளுக்கும் இடை யில் தொடர் யுத்தம் நடந்து வருகிறது. தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் பிணக்கமும், ஐக்கியமின் மையும், பிரிவும் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்குள் ளும் போராட்டம் இருக்கிறது. மாம்சத்திற்கும், ஆவிக் கும் இடையில் தொடர் போராட்டம் நடந்து கொண் டிருக்கிறது. மனிதன் தொடர்ந்து சரியானதைச் செய்யும் ஆசைக்கும், மாம்சப் பசியைத் திருப்திப்படுத்தும் ஆசைக்கும் இடையில் நொறுக் கப்படுகிறான். கிறிஸ்து இல்லாமல் இந்த உலகமும், மனித இனமும் உடைக்கப்படுகிறது, இழந்து போகிறது, பிரிக்கப்படுகிறது. கிறிஸ்துவால் மட்டுமே மறுபடியும் முழுமையைக் கொண்டு வரமுடியும். ஆதியில் தேவன் இப்பிரபஞ்சத்தை குழப்பமான ஓர் இடமாகப் படைக்கவில்லை. உலகத்தில் அழகு, ஒற்றுமை, இசைவு போன்றவைகள் காணப்பட்டன. ஆனால், பாவம் இந்த உலகில் பிரவேசித்த போது இப்பிரபஞ்சத்தி லிருந்த அழகும், ஒற்றுமையும் அழிக்கப்பட்டது. பாவத்தைத் தொடர்ந்து மரணம், பிரிவு மற்றும் ஊழல் போன்றவைகள் உலகில் பிரவேசித்தது. முழு சிருஷ்டியும் தாங்க முடியாத பாவப்பாரத்தால் துடிக்கிறது. இந்த உலகில் முழுமையையும், ஒழுங்கையும், ஒற்றுமையையும், இசைவையும்

மீட்டமைக்கும்படி கிறிஸ்து வந்தார். இப்போது கிறிஸ்துவின் நோக்கத்தை அறிவிப்பதும், நிரூபிப்பதும், அதை மேம்படுத்துவதும், அதை நீடித்திருக்கச் செய்வதும் அவருடைய சபையின் பொறுப்பாயிருக்கிறது.

யோவான் பதினேழாம் அதிகாரம் புதிய ஏற்பாட்டில் மிகப்பெரிய அதிகாரங்களுள் ஒன்றாக இருக்கிறது. இந்த அதிகாரத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தை எதிர்கொள்வதற்கு முந்தைய இரவு செய்த ஜெபம் இடம் பெற்றுள்ளது.

இந்த அதிகாரத்தில் இயேசு அநேக காரியங்களுக்காக ஜெபித்தார். தாம் மகிமைப்படும்படி ஜெபித்தார் (வசனம் 5) அவர் தன்னுடைய பதினொரு சீடர்களும் காத்துக் கொள்ளப்படும்படியாக ஜெபித்தார் (வசனம் 11,12). அவர் தன்னுடைய பதினொரு சீடர்களின் ஒற்றுமைக்காக ஜெபித்தார் (வசனம் 11). சீடர்கள் பரிசுத்தப்படுத்தப்படும்படியாக ஜெபித்தார் (வசனம் 17). அவர் சீடர்களின் சந்தோஷத்திற்காக ஜெபித்தார் (வசனம் 13). கடைசியாக, அவர் தம்முடைய வருங்கால சீடர்களுக்காக ஜெபித்தார் (வசனங்கள் 20-23).

நம்முடைய விவாதம் கடைசிக் கருத்தாகிய கிறிஸ்துவின் வருங்கால சீடர்களின் ஒற்றுமையை மையமாகக் கொண்டுதான் இருக்கிறது (வசனம் 20-26).

இருபதாம் வசனத்தில் இயேசு நிகழ்கால மற்றும் வருங்கால விசுவாசிகளுக்காக ஜெபிக்கத் தொடங்கினார். அவர் இவ்விதமாக ஜெபித்தார். “ *நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்*" என்று (யோவான் 17:20,21).

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், கிறிஸ்துவில் விசுவாசியாக இருந்தால் உங்கள் பெயர் யோவான் பதினேழாம் அதிகாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர்களுடைய வார்த்தையினால் இயேசுவை விசுவாசிக்கும் நம்முடைய பெயரும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இயேசு நமக்காக ஜெபித்திருக்கிறார். அவர் நம்முடைய ஒற்றுமைக்காக ஜெபித்திருக்கிறார். இந்த ஒற்றுமைக்கு மையமாக இருப்பது யார்? இயேசு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவம் மட்டுமே நாம் உண்மையான ஒற்றுமையை அடைவதற்கு ஒரே வழி. கிறிஸ்து இல்லாமல் நாம் அடையும் எந்த ஒற்றுமையும் அவருடைய அதிகாரத்திற்கு விரோதமாக நாம் செய்யும் கலகமாயிருக்கும்.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம் விசுவாசம் நம்மை தேவனிடத்திற்கும், கிறிஸ்துவினிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்திருக்கிறது. நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, கிறிஸ்துவால் அவருடைய சரீரமாகிய

சபைக்குள் சேர்க்கப்பட்டோம் (அப். 2:47; 1 கொரி. 12:13). தேவன் இந்த பூமியிலே விரும்புகின்ற பரலோக ஒற்றுமையை விசுவாசம் கொண்டு வருகிறது!.

கிறிஸ்துவுக்குள் ஒற்றுமை என்பது தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பதை உள்ளடக்குகிறது. "*கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்* " (II யோவான் 9). " கிறிஸ்துவின் உபதேசம் " என்கிற சொற்றொடர் " கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம் " என்றும், " கிறிஸ்துவிடமிருந்து வரும் உபதேசம் " எனவும் பொருள்படும். அந்த வாக்கியத்தில் இரண்டு பொருள்களுமே பொருந்துகிறது என நான் நம்புகிறேன். கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தை நம்புகிற ஒருவர் அவருடைய வார்த்தைகளை நம்புவது அவசியமாகிறது. (லூக்கா. 6:46)

தேவனுடைய வார்த்தை இணைக்கிறது. ஆனால், மனிதனுடைய உபதேசம் பிரிக்கிறது. மனிதர்கள் தங்கள் கருத்துகளையும், கொள்கைகளையும் உயர்த்தி அதைப் பின்பற்றும் போது, விசுவாசிகளுக்கிடையே தடைகளை ஏற்படுத்தி விடுகிறார்கள். தேவனுடைய வார்த்தைகளின் கீழ் நாம் இணைக்கப்பட்டு, அவருடைய வார்த்தைகள் நம்மை வழிநடத்த அனுமதிக்கும் போது மட்டுமே இயேசு ஜெபித்த ஒற்றுமையை நாம் காண முடியும்.

*ஒற்றுமையில் மிகப்பெரிய வல்லமையும், பலமும் இருக்கிறது "ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலமுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத்தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டு பேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது* ". (பிர. 4:9-12).

கிறிஸ்தவர்கள் ஐக்கியமாயிருக்கும் போது அவர்கள் பெற்றுக் கொள்கிற நன்மைகளை கவனியுங்கள். ஞானி ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்று நமக்கு சொல்லியிருக்கிறார். ஒற்றுமை நம் பிரயாசத்திற்கு நல்ல பலனைக் கொடுக்கிறது.

யாத்திராகமம் பதினேழாம் அதிகாரம், தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புக்குச் சிறந்த முன் மாதிரியாக இருக்கிறது. அமலேக்கியர்கள் இஸ்ரவேலர்களைத் தாக்க வந்தார்கள். சத்துருக்களுக்கு விரோதமாகப் போர் செய்ய ஆட்களைத் தெரிந்துகொள்ளும்படி மோசே யோசுவாவிடம் சொன்னார். அடுத்த நாள் மோசே மலையுச்சியில் தேவனுடைய கோலோடு நின்று சத்துருக்களோடு போர் செய்து கொண்டிருந்த யோசுவா மற்றும் அவர்களுடைய மனிதர்களுக்காக பரிந்து பேசிக் கொண்டிருந்தார். மோசே தன் கையை ஏறெடுத்

திருக்கையில் இஸ்ரவேலர்கள் மேற்கொண்டார்கள்; அவர் தன் கையைத் தாழ விடுகையில் அமலேக்கு மேற்கொண்டான். ஆரோனும், ஊரும் அவருடைய கைகளைத் தாங்கினார்கள், யோசுவா யுத்தத்தில் வெற்றி பெற்றார். ஒவ்வொருவருக்கும் செய்வதற்கு வெவ்வேறுப்பட்ட வேலைகள் இருந்தன, ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை வெளிப்படுத்தினார்கள், அதன் விளைவாக மிகப்பெரிய வெற்றியை ருசிபார்த்தார்கள் (யாத். 17:8-12).

மத்தேயு 18:19-ல் இயேசு நம்முடைய ஜெபங்களுக்கு ஒற்றுமை பலம் சேர்க்கிறது என்று சொல்கிறார். நம் கர்த்தர் இவ்விதமாகச் சொன்னார். " *அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒரு மனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர் களுக்கு உண்டாகும்* ".

தேவனுடைய ஜனங்கள் இருதயத்திலும், மனதிலும் இணைந் தால், அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவர்கள் வேண்டுவதை அருள்வதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். என்ன ஓர் அருமை யான வாக்குத்தத்தம்! ஒற்றுமையில் எவ்வளவு பெரிய வல்லமை இருக் கிறது பாருங்களேன்.

ஒற்றுமை கர்த்தருடைய சரீரமாகிய சபையில் மிகப்பெரிய வளர்ச்சி யை ஏற்படுத்துகிறது. விசுவாசிகள் ஒன்றாயிருக்கும் போது அங்கே ஆவிக் குரிய மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சி ஏற்படும். இந்த உண்மை அப்போஸ்தலர்களுடைய நடபடிகளில் நிரூபிக்கப்பட்டி ருக்கிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் வேத வகுப்புகளிலும், ஜெபத்திலும் அனுதினமும் ஐக்கியப்பட்டதாக அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு உண்டானவைகளை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொண்டார்கள். இதன் காரணமாக அவர்கள் தேவனிடத்திலும், மனிதர்களிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள் (அப். 2:42-47). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். ஒற்றுமை தேவனை மகிமைப்படுத்தி அநேகரை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருகிறது (யோவான் 17:21). நமக்குள்ளிருக்கும் ஒற்றுமை சுவிசேஷச் செய்தியை நிலைப்படுத்தி, இயேசு சொன்னவைகளை உறுதிப்படுத்துகிறது. எனவே, ஒற்றுமை தான் ஊழியத்தின் சிறப்பு என்பதை நீங்கள் காண முடியும்.

சபையினிடத்தில் ஒப்புரவாகுதலின் ஊழியம் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது (II கொரி. 5:18-21). சண்டையிடுகிற ஒவ்வொருவரையும் ஒன்றிணைப்பதற்கு சுவிசேஷம் தேவனுடைய வல்லமையாயிருக்கிறது. பாவியை தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வரும் வல்லமையை சுவிசேஷம் மட்டுமே பெற்றிருக்கிறது.

" சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வ தற்கு எல்லா முயற்சிகளையும் எடுப்போம் ". (எபே. 4:3

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக

## *Let Not Your Heart Be Troubled*

### *Tom Holland*

**ந**ம் கர்த்தர் இந்த பூமியில் இருந்தபோது, இப்பூமிக்குரிய சரீரத்தில் ஜனங்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வலி, வேதனைகளைக் குறித்து இரக்க உணர்வுடையவராகக் காணப்பட்டார். யவீருவின் வீட்டிற்குப் போக அவருக்கு நேரமிருந்தது, ஏனென்றால், அவருடைய பன்னிரெண்டு வயது மகள் மரித்துப் போனாள். இயேசு கரிசனையுள்ளவராக இருந்தார். அவர் லாசருவின் கல்லறைக்குப் போய் துக்கத்தின் மத்தியில் நின்றார். இயேசு அழுதார். எருசலேம் பட்டணத்துக்குள் வெற்றி வாகை சூடி பிரவேசிக்க முற்பட்ட போது அங்கே குருட்னைப் பார்த்து நின்றுவிட்டார், அவன் தனக்கு கண் பார்வையை அளிக்கும்படி வேண்டிக் கொண்டான். இயேசு கண் பார்வையைக் கொடுத்தார்.

இயேசு தான் படப்போகிற பாடுகள், துன்பங்கள், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் முடி சூட்டப்படுதல் போன்ற காரியங்களை எதிர் நோக்கியிருந்தபடியால், இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை நம்பிக்கையின் வார்த்தைகளைக் கொண்டு தேற்றினார். அவர்கள் எதிர் கொள்ள வேண்டிய துக்கங்களை அவர் நன்றாக அறிந்திருந்தபடியால் அந்த சூழ்நிலைக்கு அவர்களை ஆயத்தப்படுத்த விரும்பினார். எனவே, அவர்களைப் பார்த்து " உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக " என்று கரிசனையோடு சொன்னார் (யோவான் 14:1).

உங்கள் இருதயம் எப்போதாவது கலங்கியிருக்கிறதா? சரீர வியாதிகள் உங்கள் இருதயங்களை கலங்கச் செய்யும். நமக்குப் பிரியமானவர்களின் வியாதி நம் இருதயங்களை கலங்கச் செய்யலாம். வாழ்க்கைப் பிரச்சனைகளாகிய பொருளாதாரம், திருமணம், தனிப் பட்டப் பிரச்சனைகள், வேலை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சனைகள் நமக்கு ஏமாற்றத்தை, சோர்வை, நம்பிக்கையற்ற நிலையைக் கொண்டு வரும். இந்த உலகத்தில் யாராவது வேதனை, துக்கம், ஏமாற்றம் போன்ற இவைகளுக்குத் தப்பி நீண்ட நாட்கள் வாழ்கிறார்களா?.

நம்மிடத்தில் அக்கறையாயிருக்கிற கர்த்தர் பிரச்சனைகளை எப்படிக் கையாள வேண்டும் என்று நமக்குச் சொல்கிறார் (1 பேதுரு 5:7). ஒருவருடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் இருக்கும் போது, “ஒன்றுமில்லை, எல்லாம் நன்றாக இருக்கிறது” என்று நேர்மையற்ற முறையில் பாசாங்கு செய்வதைக் கர்த்தர் ஆதரிக்கிறாரா? பிரச்சனைகளிலிருந்து விடுபட போதைப் பொருள்கள், மதுபானம், சிற்றின்பம் அல்லது தற்கொலை போன்றவைகளை நாட வேண்டும் என இயேசு வலியுறுத்துகிறாரா? நம்பிக்கையற்றவராகவோ, வாழ்க்கையைப் பற்றி சந்தேகப்படுகிறவராகவோ மாறி, கசப்புணர்வுடையவராக, விமர்சனம் செய்பவராக,


புண்படுத்தும் வகையில் கேலி செய்ப வராக, குற்றம் சாட்டுபவராக இருக்க வேண்டும் என்று சொல்கி றாரா?

நம் அன்புள்ள ஆண்டவர் பிரச்சனையைக் கையாளும் வல்ல மையை அதாவது, விசுவாசத்தைத் தந்திருக்கிறார். *தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்தி லும் விசுவாசமாயிருங்கள்* (யோவான் 14:1) நாம் நம் இரட்சகரின் வழியைப் பின்பற்றும் போது நம் பிதாவாகிய தேவனை விசுவாசிக்கி றோம் (யோவான் 14:2). நம் பிதா வாகிய தேவன் தம் ஜனங்களை நேசித்து, அக்கறை கொண்டு, தம் முடைய பிள்ளைகளுடைய வாழ்க் கையில் இடைப்பட்டு, தம் பிள்ளை கள் இந்த உலகத்தில் அனுபவித்து வருகின்ற பாடுகளை எடுத்துப் போட்டு, கவலைகளை நீக்கிப் போடுவார் (யோவான் 16:33). தேவன் தம் பிள்ளைகளை பராமரித்து அவர் களுக்கு சகலமும் நன்மைக்கேது வாக நடக்கும்படி செய்வார் (ரோமர் 8:28). இளம் வாலிபனாகிய யோசேப்பு அனுபவித்துக் கொண்டிருந்த பாடு களை தேவன் அவருக்கும் அவரு டைய குடும்பத்தாருக்கும் ஆசீர்வாத மாக மாற்றிக் கொடுத்தார். தேவ னால், அந்த கொல்கொதா பாடு களை, அவமானத்தை எடுத்துப் போட முடிந்ததென்றால், தம் குமார னுடைய மரணத்தை மனித இனத் திற்கு இரட்சிப்பாக மாற்றித் தர முடியுமென்றால், தம் பிள்ளைகளின் பிரச்சனைகளையும் மிக நேர்த்தி யாக மாற்ற அவரால் முடியும். தேவ ஆவியினால் ஏவப்பட்ட மனிதன் தேவனுடைய ஜனங்களுக்கு இவ் விதமாக அறிவுரை கூறியதில் ஆச்சரி யம் ஏதுமில்லை. அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் "அவர் மேல் வைத்து விடுங்கள்" (1 பேதுரு 5:7).

## அமைதியான நேரங்கள்

வாழ்க்கைப் பதற்றங்கள் என்னை மேற்கொள்ளும் போது,
என் ஆத்துமா அமைதியை நாடுகிறது.
என் மனம் அழுத்தத்தால் நிறையும் போது
வாரம் முழுவதும் என்னை வாட்டுகிறது.
என் இருதயம் திருப்தியடைய
பாதுகாப்பான இடம் ஒன்று தான் உள்ளது,
என்னைச் சுற்றிலும் இருக்கும் அமைதி
மெய்யாகவே பரத்திலிருந்து அனுப்பபட்டது தான்.
நம்மெல்லாருக்கும் ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும்
அமைதியான நேரங்கள் தேவை,
மனதில் சிதறிக்கிடக்கின்ற சிறுசிறு கோபங்கள்
கசப்புகள் பறந்து போக அமைதியான நேரங்கள் தேவை.
அமைதியான வேளையிலே ஏகாந்தத்தில் தேவனோடு
நெருக்கமாக இருப்பதாக நான் உணர்கிறேன்.

- **Jean E. Moore**



# பிதாவின் சித்தம் செய்யுங்கள்

## Do the Father's Will

*Don L. Norwood*

**( மத்தேயு 7:21; யாக்கோபு 2:10-12; யாக்கோபு 1:18-21 )**

ஒருவர் தன்னை கிறிஸ்தவனென்று அழைத்துக் கொண்டு பிதாவின் சித்தத்தை கற்றுக்கொள்ளத் தவறுகிறவனாகவும், பிதாவின் சித்தத்தை செய்யத் தவறுகிறவனாகவும் இருந்தால் அது அவனுக்கு எந்த நன்மையும் செய்யாது என்பதை இயேசு மத்தேயு 7:21-23 வசனங்களில் தெளிவுப்படுத்தி விட்டார். பிதாவின் சித்தம் என்பது கிறிஸ்துவின் உபதேசமும், அப்போஸ்தலர்களின் உபதேசமுமாயிருக்கிறது, இந்த அப்போஸ்தலர்கள் தேவ சித்தத்தை வெளிப்படுத்த, தேவ ஆவியினால் ஏவப்பட்டார்கள் (எபிரெயர் 1:1,2; யோவான் 14:26; யோவான் 16:13; 2 பேதுரு 1:20,21) இன்று மனித இனத்துக்கான தேவ சித்தம் முழுமையாகப் புதிய ஏற்பாட்டில், அதாவது, புதிய ஏற்பாட்டு வசனங்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது 2 பேதுரு 1:3,4; 2 தீமோத்தேயு 3:16,17; (ரோமர் 1:16,17).

கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிப்பது மட்டும் போதுமானதல்ல, அதுபோல, அவருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதும் போது மானதல்ல; நாம் அவருடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ள

ஆசையாயிருந்து வசனங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று போதிக்கிறாரோ அவைகளுக்குக் கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும் (எபிரெயர் 5:8,9) யாக்கோபு 2:14-24; லூக்கா 14:33; மத்தேயு 10:34-39; மாற்கு 10:28-30).

இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது எப்போதுமே கர்த்தருடைய சித்தம் செய்வதைத் தன் இருதயத்தின் நோக்கமாக வைத்திருந்தான் (1 ராஜாக்கள் 14:8; 1 ராஜாக்கள் 15:5). தாவீது தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் தடுமாறி சில பயங்கரமான பாவங்களைச் செய்தது உண்மைதான். ஆயினும், அவர் மனந்திரும்பியபோது தேவன் அவரை மன்னித்தார். ஏனென்றால், தாவீது எல்லாவற்றையும் விட தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசைப்பட்டார்.

கிறிஸ்தவர்களாகிய நீங்களும், நானும் தாவீதைப் போல சில வேளைகளில் தவறி விழுகிறோம், பாவம் செய்கிறோம். ஏனென்றால், மாம்சீக இச்சைகளுக்கும், வேத வாக்கியங்களில் பரிசுத்த ஆவியானவர் தந்திருக்கும் போதனைகளுக்கும் இடையே போராட்டம் நடைபெறுகிறது (ரோமர் 7:14-25; 8:1,14; கலாத்தியர் 5:13-18). தாவீதைப் போல தேவசித்தத்தை அறிவதையும், எல்லாவற்றையும் விட தேவசித்தம் செய்வதையும் வாழ்நாளில் ஆசையாகக் கொண்டிருக்க வேண்டும் (கொலோ. 3:1-4).

தாவீது மரித்து ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு கூட வேத வசனங்கள் அவரைப் பற்றிச் சொல்லும்போது தாவீது தேவனுடைய இருதயத்துக் கேற்ற தாசன் என்று சொல்கிறது (அப். 13:22).

இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நம் அனுதின நடைமுறை வாழ்க்கைக்கு எடுத்துக்கொண்டால், தேவன் கிறிஸதவர்கள் செய்யும்படியாகப் போதித்திருக்கிற சில காரியங்களை நாம் எண்ணிப் பார்ப்போம். ஆரம்பத்திலிருந்தே கர்த்தருடைய சபையைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் படியாகவும், கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் நினைவு கூரும்படியாகவும், தாங்கள் வாழ்கின்ற இடங்களில் சபை கூடி வரும் படியாக போதிக்கப்பட்டிருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 2:42; அப்போஸ் தலர் 20:7; மத்தேயு 26:26-29; 1 கொரிந்தியர் 11:23-30; 1 கொரிந்தியர் 10:16,17). இவ்விதமாக சபை கூடிவருதல் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கிய மானது, அவர்கள் மனப்பூர்வமாக கூடிவரத் தவறினால், மனப் பூர்வமாக அவர்கள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள், தங்கள் ஆத்துமாக்களையும் ஆபத்திற்குள்ளாக்குகிறார்கள் (எபிரெயர் 10:23-30)

வசனங்களைக் கவனமாக வாசியுங்கள். மனப்பூர்வமாகப் பாவம் செய்வது, ஒருவரைப் பாவங்களை கழுவிச் சுத்திகரிக்கிற கிறிஸ்துவின் இரத்தத்திலிருந்து பிரிக்கிறது (எபிரெயர் 10:26; 1 யோவான் 1:5-7).

கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிய அறிவு ஒருவருடைய விசுவாசத்திற்கு ஆதாரமாயிருக்கிறபடியாலும் (ரோமர் 10:17) விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியமாக இருக்கிறபடியாலும் (எபிரெயர் 11:6), தேவனுடைய போதனைகளைக் கேட்கும் சந்தர்ப்பங்களை நாம் முறையாகப் பயன்படுத்தாவிட்டால் ஆவிக்குரியப் பிரகாரமாக நாம் பலவீனப்பட்டு, கள்ளப் போதனைகளால் நாம் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப்படுவோம் (1யோவான் 4:1,6). சபை கூடி வரத் தவறுவதும், வேத பாட வகுப்புகளில் பங்கேற்கத் தவறுவதும் குறைந்தபட்சம் நாம் இரண்டு தேவனுடைய பிரமாணங்களை மீற வழிவகுக்குகிறது (எபிரெயர் 10:24,25); எபேசியர் 5:15-17; II பேதுரு 3:18). நீங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யாவிட்டால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்கிறீர்கள் (யாக்கோபு 1:18,21; மத்தேயு 7:21).

ஒருவேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவை நினைவில் கொள்ளுங்கள்; நாமும் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிவதை அற்பமாக எண்ணி, நம் சேஷ்டபுத்திரப் பாகத்தை (பரலோகில், தேவனோடு நித்திய ஜீவனை) இழந்து போகக் கூடாது (எபிரெயர் 2:1-4; 12:11-7). இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது இந்த வசனப் பகுதிகளை வாசிக்க நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.! ❋

**அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**

**என்னதினாலெனில், ஒருவன் வசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்;**

**அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்.**

(யாக்கோபு 1: 22–24)

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை


# உக்கிராணத்துவம்

## *Stewardship*

### *W. Douglass Harris*

**உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம் (1 கொரிந்தியர் 4:2).**

வெகுசிலரே, தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் உட்பட, தாங்கள் தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டும் என்கிற உக்கிராணத்துவ எண்ணம் கொண்டிருக்கிறார்கள். உக்கிராணத்துவம் அடிக்கடி வேத வசனங்களில் பயன்படுத்தப் படுகிறது. இவ்வசனப் பகுதிகளின் போதனையை நாம் சற்று ஆழமாக சிந்திப்போமா.



ஓர் உக்கிராணக்காரன் என்பவன் மற்றவர்களுக்காக நிதி மற்றும் ஆஸ்திகளை மேற்பார்வை செய்பவன் அல்லது நிர்வகிப்பவன். ஒரு நல்ல உக்கிராணக்காரன் தன் எஜமானுக்கு நம்பகமான ஊழியக்காரனாக இருக்கிறான், அவனிடத்தில் அவன் எஜமான் தன்னுடையவைகளைக் கொடுத்து அவைகளைப் பெருக்கும் பொறுப்புகளைக் கொடுக்கிறான். இப்படித்தான் தேவனிடத்தில் நம் உறவும் இருக்கிறது; நம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்டிருக்கிற எல்லாவற்றிற்கும் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். அது நம்மில் அநேகர் உணர்வதை விட அதிகமானது.

எங்கே உக்கிராணத்துவம் இருக்கிறதோ அங்கே உரிமையும் இருக்கிறது. நாம் தேவனுடைய உக்கிராணக்காரர்களாக நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளை வைத்துக் கொள்கிறோம். சிருஷ்டிப்பால் நாம் தேவனுடைய சொத்தாக இருக்கிறோம் (ஆதியாகமம் 1:26); நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால் மீட்புரிமையால் தேவனுக்குரியவர்களாக இருக்கிறோம். (யோவான் 3:16; எபேசியர் 1:7); மேலும், அவருடைய பராமரிப்பால் நாம் அவருடையவர்களாயிருக்கிறோம். (அப். 14:7; 17:25,28; மத். 6:26-30) பவுல் கொரிந்து பட்டணத்தாரிடம் இவ்விதமாகச் சொன்னார். " நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா? கிரியத்துக்குக்

கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள் (1 கொரி. 6:19,20). உண்மையாகச் சொல்லப்போனால், நமக் கென்று சொந்தமாக ஒன்றுமில்லை (சங்கீதம் 24:1). எல்லா காலத்திலும் திறமைகளும், வளங்களும் அவருடைய சேவையில் பயன்படுத்தப்படும் படி கர்த்தரால் நம்மிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. நேரத்தை கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். அது எவ்வளவு சீக்கிரமாய் கடந்து போகிறது (யாக்கோபு 4:13,14; யோபு 1:21). திறமைகளெல்லாம் தேவனிடத் திலிருந்து தான் வருகிறது (உபாகமம் 8:18; மத்தேயு 25:14,15; யாக்கோபு 1:17). வளங்களெல்லாம் பரத்திலிருந்து வருகிறது (உபாகமம் 8:18; மத்தேயு 25:14,15; யாக்கோபு 1:17). அந்த பணக்கார முட்டாள் எனக்கு விளைந்த தானியம் என் பொருள்கள் என்று சொன்னான். ஆனால், தேவன் அவனிடம் *நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்? என்று கேட்டார்* (லூக்கா 12:16-20).

தாமஸ் ஹார்ன் என்பவர் இவ்விதமாக வெளிப்படுத்துகிறார் :

நம் பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள், காடு, வீடு, தோட்டம் பெற்றோர் விட்டுச் சென்ற உடைமைகள், இயற்கையின் பொருள்கள், செல்வங்கள், இன்னும் கிருபை உட்பட இவைகளெல்லாம் நமக்கு கடனா கக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கடன் நம்மிடம் திரும்பவும் கேட்கப்படும் போது நாம் கோபப்படுகிறோம். நம்மை நாம் எஜமான் களாக எண்ணிக் கொள்கிறோம். ஆனால், நாம் வெறும் உக்கிராணக் காரர்கள் தான். ஒரு நாளில் நம் உக்கிராணத்துவத்திற்கான கணக்கைக் கொடுக்க வேண்டும்.

உக்கிராணத்துவம் எவைகளையெல்லாம் உள்ளடக்கியிருக்கிறது என்று கவனியுங்கள். 1. உண்மை (II கொரி. 4:2) 2. கீழ்ப்படிதல் (உபாகமம் 10:12,13; 11:26-28; மத்தேயு 7:21-23) 3. நம் குடும்பம், நண்பர்கள் மற்றும் சக குடிமக்களோடு நமக்குள்ள கடமைகளை விட கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவைகள் அடங்கும். (மத்தேயு 10:37-39; லூக்கா 5:10,11; அப். 5:29). ❊

---

எந்த ஈவாக இருந்தாலும் உம்முடையதை
உமக்குக் கொடுக்கிறோம்; நாங்கள் பெற்றிருப்பதெல்லாம்
உம்முடையது மட்டுமே; ஓ கர்த்தாவே,
அவைகளெல்லாம் உம்மால் ஒப்புக்கொடுக்கப்பட்டவைகள்தான்.

நீர் கொடுக்கும் அபரிதமானவைகளை
உக்கிராணக்காரர்களாக நாம் பெற்றுக்கொள்கிறோம்.
மகிழ்ச்சியோடு நீர் எங்களை ஆசீர்வதிப்பதினால்
உமக்கே எங்கள் முதற்பலன்களைக் கொடுக்கிறோம்.

**- W.W. How**


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# வழியிலே சிங்கம் இருக்கும்!

# A Lion in the Way!

***P.K. Varghese***

தங்கள் கடமைகளை நிறை வேற்றாத மக்களிடமிருந்து அநேக சாக்குப் போக்குகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். தங்கள் அஜாக்கி ரதையை நியாயப்படுத்த மக்கள் சரீரப்பிரகாரமான காரியங்களி லும், ஆவிக்குரிய காரியங்களிலும் பெரும்பாலும் சாக்குப் போக்குக ளைப் பயன்படுத்துகிறார்கள். நீங்கள் ஏன் சுவிசேஷத்திற்கு கீழ்ப் படியவில்லை அல்லது ஏன் சபை கூடி வரவில்லை என்று நாங்கள் கேட்கும் போது அவர்கள் தங்கள் பிரச்சனைகளில் சிலவற்றை அல்லது கஷ்டங்களில் சிலவற்றை சொல்லத் தொடங்குவார்கள். உண்மையில், தங்கள் அசிரத் தைக்கும், கீழ்ப்படியாமைக்கும் தேவனுக்கு முன்பாக எந்தச் சாக்கு போக்கையும் சொல்ல முடியாது. "*வழியிலே சிங்கம் இருக்கும், நடு வீதியிலே சிங்கம் இருக்கும் என்று சோம்பேறி சொல்லுவான்* " (நீதி மொழிகள் 26:13).



வீதியில் ஒரு சிங்கம் வந் தால் எவ்வளவு பயமாக இருக்கும்! சில வேளைகளில், இந்தியாவில் சிங்கம் காட்டிலிருந்து வெளியே வந்து பீதியை உண்டாக்குகிறது. ஆனால், அந்த சோம்பேறி என்ன சொன்னான் என்பதை சிந்தித்துப் பார்ப்போம். அவன் எதையும் செய்யாமலிருந்ததற்கு, அறைக் குள்ளேயே முடங்கிக் கிடந்ததற்கு சிங்கத்தைச் சாக்காக பயன்படுத்தி னான். அவனுடைய இந்த எண் ணப் போக்குக்கு நாம் எப்படி பதில ளிக்கலாம்?

வீதியிலே சிங்கம் இருந் தால் நாம் என்ன செய்வோம்? நாம் மறைந்து கொள்ளலாமா? நாம் ஓடி விடலாமா? இல்லை, நாம் அதை மேற்கொள்வதற்கான பெலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், கேள்வி, எப்படி? என்பது தான்.

ஒரு சிங்கம் சமுதாயத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்தால், நாம் அதைப் பிடித்து, தேவைப் பாட்டால் கொல்ல வேண்டும். ஆபத்தைப் பார்த்து ஒளிந்து கொள்வதோ, ஓடுவதோ பிரச்ச னைக்கு தீர்வாகாது. இத்தகைய

ஆபத்தான நேரத்தில் நாம் எழுந்து சரியாக செயல்பட வேண்டும். அது நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் சவாலாக இருக்கிறது. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வசனப்பகுதி சோதனை காலத்தை அல்லது பயத்தை ஏற்படுத்துகின்ற ஒரு பிரச்சனையை விளக்குகிறது. நம் வாழ்க்கையில் நாம் கண்களை மூடினால் கூட பிரச்சனைகள் இருக்கும். அதை யாரும் தவிர்க்க முடியாது. வாழ்க்கை பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளும் போது, மூடப்பட்ட கதவுக்குள் இருந்து கொண்டு அந்த சோம்பேறியைப் போல பேசக்கூடாது. வெற்றி பெற வேண்டுமானால் முயற்சிகளும், பிரயாசைகளும் அவசியம். ஆகையால், நாம் செயல்படுவதற்குத் தீர்மானிக்க வேண்டும்.

தாவீது தன்னை கோலியாத் அச்சுறுத்தி விரட்டிவிட அனுமதிக்கவில்லை. சகேயு தான் குள்ளனாயிருந்தபடியால், இயேசுவை தன்னால் பார்க்க முடியாது என்று சாக்குப் போக்கு சொல்லியிருக்கலாம். ஆனால், அதற்குப் பதிலாக அந்த பிரச்சனையை மேற்கொள்ள காட்டத்தி மரத்தில் ஏறினான். பவுல், தன் மாம்சத்திலிருந்த முள் கர்த்தருடைய ஊழியத்தில் தன்னை தோற்கடிக்க அனுமதிக்கவில்லை. பேதுரு, யோவான் இன்னும் மற்ற அப்போஸ்தலர்கள் யூதர்களோடு கடினமான வேளைகளை சந்தித்தார்கள். ஆனாலும், அவர்கள் சுவிசேஷத்தை தைரியமாக, துணிந்து பிரசங்கித்தார்கள். பாடுகள் ஆதிக்கிறிஸ்தவர்களை கலக்கமடையச் செய்யவில்லை அல்லது அவர்கள் விசுவாசத்தை விட்டுவிடச் செய்யவில்லை. சிலுவை மரணம் இயேசுவை எவ்விதத்திலும் அச்சுறுத்தவில்லை.

வேதாகம வரலாற்றில் அநேகர் வீதியிலே இருக்கும் சிங்கத்தைக் கண்டு (தடைகள் அல்லது பிரச்சனைகள்) சோர்வடையாமலிருந்த அநேக சம்பவங்கள் உண்டு. சர்வ வல்லவர் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையையும் நம்மால் எதிர்கொள்ள முடியும். ஆனால், நாம் அவருடைய வல்லமையை சார்ந்திருக்க வேண்டும். கிறிஸ்துவால் இந்த உலகத்தை ஜெயிக்க முடிந்திருக்கிறபடியால், கிறிஸ்தவர்களாகிய நம்மாலும் அவருடைய வல்லமையால் இந்த உலகத்தை ஜெயிக்க முடியும்.

உண்மையாகவே, சிங்கத்தை கொல்லக்கூடிய வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன அவற்றை கவனியுங்கள்.

"*இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத்*

*தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக் கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக் காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.*

*கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவர் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாண மோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே, மரணமானா லும், ஜீவனானாலும், தேவதூதர்க ளானாலும், அதிகாரங்களானா லும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், உயர்வானா லும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவி லுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டா தென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:31-39).*

மேற்கூறப்பட்ட வசனங்கள் நம்மை பலப்படுத்துகின்றன. நாம் ஒருபோதும் நம் பயம், அல்லது சாக்குபோக்குகள் நம்மைத் தோற் கடிக்க அனுமதிக்கக்கூடாது. நிச்ச யமாக சோம்பேறித்தனத்திற்கு எந்த இடத்தையும் கொடுக்கக் கூடாது. தேவனுடைய சித்தத்திற் கான நம்முடைய அணுகு முறை யில் நாம் எப்போதும் நேர்மறை யாக இருக்க வேண்டும். தேவன் விரும்புகிறபடி நாம் நடந்து கொண்டால் பரலோகத்தில் நம் பலன் மிகுதியாயிருக்கும். ❋

## என் பிள்ளையே...

- உலகம் செய்கிறது போல
நீ நடக்கவும், பேசவும், சிந்திக்கவும்
பார்க்கவும் வேண்டாம்.
- வித்தியாசமாக இரு,
அவர்களிடமிருந்து பிரிந்திரு,
வேறுபட துணிந்து கொள்.
- உன்னுடைய வரங்களின் படி
உன்னை ஆராய்ந்து பார்.
- கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்;
அவர் உன்னை ஆசீர்வதிப்பார்
என்பதை அறிவேன்.
- அவர் சிலகாலம் மட்டுமே உன்னை
எனக்குக் கடனாகக் கொடுத்தார்.
- நான் உன்னை என் உயிரை விட
அதிகமாக நேசிப்பேன் என்பதை
அவர் அறிந்திருந்தார்.
- உன்னால் என் இருதயமும்,
ஆத்துமாவும் வளர்ந்தது.
- ஒரு குழந்தையாக என் வார்த்தை
களுக்கு நீ கீழ்ப்படிந்தாய், அவை
களை கனம் பண்ணினாய்.
- கர்த்தர் நமக்கு அவருடைய சட்டங்
களை, அவருடைய போதனைகளை,
அவருடைய வழி நடத்துதல்களை
தந்திருக்கிறார், அவைகள் அவருடைய
புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.
- அவருடைய புத்தகம் உனக்கு
ஒரு கடிதமாயிருக்கிறது.
- நீ அவரை கனம் பண்ணி
அவருக்குக் கீழ்ப்படியத் தவறினால்
நான் தவறியிருப்பேன்.

**- Alemia Spradley**

# உன் விசுவாசம் பெரியது

*B. Aruchunan*

உன் விசுவாசம் பெரியது - Youth Faith Is Great என்று தீரு சீதோன் கடற்கரை பட்டணங்களில் குடியிருந்த கானானிய ஸ்திரீயைப் பார்த்து கர்த்தர் சொன்னார். அப்படியானால் அவளுடைய விசுவாசம் அந்த அளவு பெரியதாக இருந்தது. இச்செய்தியை வாசிக்கிற உங்களுடைய விசுவாசம் எத்தகையதாயிருக்கிறது? இந்த கானானிய ஸ்திரீ ஒரு புறஜாதிப் பெண். இவளுக்கு எப்படி இப்படிப்பட்ட விசுவாசம் வந்தது? என்று நீங்கள் நினைக்கலாம். ஆண்டவரைப் பற்றியும் அவருடைய உபதேசத்தைப் பற்றியும் தீரு, சீதோன் பட்டணத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். எப்படியெனில் கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லி யிருக்கிறார் (மத். 11:21). ஆகையால், இப்பட்டணத்தைச் சேர்ந்த இந்த கானானிய ஸ்திரீ இயேசுவிடம் வந்து ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள் (மத். 15:22). இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்ட இவள்; தன்னுடைய மகளை பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கும்படியாக இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டாள். உலகத்திலே பிசாசு எதற்கு வருகிறானென்றால் திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறா னேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார் இயேசு (யோவா. 10:10). பிசாசு ஆதிமுதல் மனித கொலை பாதகனாயிருக்கிறான். அவனிடத்தில் சத்தியமில்லை. பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கி றான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். ஆகையால் அவர் ஒருவரால் மட்டுமே பிசாசின் கிரியைகளை அழிக்க முடியும். இதை அறிந்த கானானிய ஸ்திரீ, பிசாசினால் மிகவும வேதனைப்படுகிற தன்னுடைய மகளை குணமாக்கும்படி இயேசுவிடம் வந்தாள். நாமும் கூட சில காரியங்களுக்காக தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தில் மன்றாடுகிறோம். அவைகளுக்கு உடனே பதில் கிடைத்துவிடுகிறதா? இல்லையே அதைப்போல இந்தப் பெண்ணுக் கும் நடந்தது.

அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்ல வில்லை. அப்பொழுத அவருடைய சீஷர்கள் வந்து; இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள் (மத். 15:23). அவள் இயேசுவை தொடர்ந்து கேட்டுக்கொண்டே வந்தபடியால் சீஷர்கள் கானானிய ஸ்திரீக்காக பரிந்து

பேசினார்கள். சீஷர்களுக்கு இருந்த இரக்கம் கூட இயேசுவுக்கு இல்லையா என்பதைப்போல ஒரு நிலை ஏற்படுகிறது. இயேசு ஒருவேளை, அவளுடைய விசுவாச பரீட்சைக்கு, அவளை ஒப்புக்கொடுத்திருக்கலாம். இந்த இஸ்ரவேலரை யாக்கோபின் நாட்கள் தொடங்கி அவர்களை அற்புதவிதமாக வழிநடத்திக் கொண்டு, தம் தோளில் சுமந்து வந்தார். ஆனால் அவர்களோ வணங்கா கழுத்துள்ளவர்களாக போனார்கள். ஆண்டவர் இயேசு இந்த மக்களைப் பார்த்துச் சொல்லும்போது எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கு மனதில்லாமற் போயிற்று என்று சொல்லுகிறார் (லூக். 13:34). இப்படி கீழ்ப்படியாமற்போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப் பட்டேனேயன்றி மற்றபடியல்ல என்று ஆண்டவர் இயேசு சொன்னதைக் கேட்ட கானானிய ஸ்திரீக்கு கோபம் ஏற்படவில்லை.

ஒருவேளை, நீங்களாகவோ, நானாகவோ இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். இவரை பின்தொடர்ந்து கூப்பிடுவதில் பிரயோஜனமில்லை என்று சொல்லி, ஆனபடி ஆகட்டும் என்று வீட்டுக்கு சென்று இருப்போம். ஆனால், கானானிய ஸ்திரீயோ அப்படியல்ல தன்னுடைய நம்பிக்கை யில், அதாவது விசுவாசத்தில் தளர்ந்துபோகாதிருந்து இயேசுவை பணிந்து கொண்டாள். எப்படியென்றால், அவள் வந்து; ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள் (மத். 15:25). அவளுடைய பணிந்து கொள்ளுதலைப் பார்த்த கர்த்தர் அவளுக்கு உடனே இரங்கவில்லை. சிலர் என்ன நினைக்கிறார்கள், சபைக்கு சென்ற வுடன் நன்மைகள் வீடு தேடி வரவேண்டும், அவரை விசுவாசித்த வுடன் அற்புதங்கள் நடைபெற வேண்டுமென நினைக்கின்றனர். அது தவறு அன்பானவர்களோ, இந்த மகள் தொடர்ந்து ஓயாமல் கூப்பிட்டுக் கொண்டே வருகிறாள். அவள் இயேசுவை நோக்கி கூப்பிடுவதில் சலித்துப் போகவில்லை. ஆனால், ஆண்டவருடைய பதில் என்னவாயிருந்தது; பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார் இதைக் கேட்ட அவளுக்கு எப்படியிருந்திருக்கும். அவள் கடுகளவும் கோபப்பட வில்லை. சிலருக்கு இப்படிச் சொன்னால் போதும், என்னை என்ன நாய் என்றா சொல்லிவிட்டீர்கள். நீங்களும் வேண்டாம், நீங்கள் கொடுக்கும் சுகமும் வேண்டாம் என்று வெறுப்பாய் சென்றுவிடுவார்கள். இந்த பெண்ணோ மிகவும் ஞானமுள்ளவள், பொறுமையானவள், இயேசுவின் பாதத்தை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டு மரியாளைப் போல இவள் இயேசுவை விடாது பற்றிக் கொண்டாள்.

ஆகையால் ஆண்டவரைப் பார்த்து மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள் (மத். 15:27). தன்னை நாய்க் குட்டி என்று ஆண்டவர் சொல்லியிருந்தும் இவளும் தன்னை நாய்க்குட்டி போல தாழ்த்தி மெய்தான் ஆண்டவரே, நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான் களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே, அப்படி விழும் துணிக்கையளவுள்ள ஆசீர்வாதத்தையாவது எனக்கு தாருங்கள் என்று தன் மனதில் நினைத்து அதற்காக காத்திருந்து ஆண்டவரோடு பேசினாள். எத்தனை ஆச்சரியமான காரியம் என்று பார்த்தீர்களா? முடிந்தவரை முயற்சிப்பார்கள் கிடைக்காத வேலையில் ஒன்று தூஷித்து விட்டு சென்று விடுவார்கள் அல்லது மறுதலித்து விட்டு சென்று விடுவார்கள். இவளோ, தன் மகள் எப்படியாவது இயேசுவினால் சுகமாக்கப்பட வேண்டும் என்ற விசுவாசத்தோடு இயேசுவைப் பின் தொடர்ந்து அவருடைய ஆசீர்வாதத்தை பெற காத்திருந்தாள். யாக்கோபு என்ற தேவ மனிதனை ஆதி. 32-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அவன் தேவனோடு போராடி, அவனை அவர் மேற்கொள்ளாததை கண்டு, அவனு டைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகை யில் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று. அவர் நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்; நீர் என்னை ஆசீர்வாதித்தா லொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர் உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்; உன் பேர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் எனப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். இப்படியாக யாக்கோபு தேவனுடைய ஆசீர்வாதத்தை போராடி பெற்றுக் கொண்டான்.

மேலும், கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைப் போல விசுவாசத்தை உடைய நூற்றுக்கு அதிபதி பற்றி லூக். 7-ம் அதிகாரத் தில் படிக்கிறோம். இவன் தன்னுடைய வேலைக்காரனுக்காக கர்த்தரை நோக்கி மன்றாடியவன் அவன் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்ட போது, அவர் வந்து தன் வேலைக்காரனை குணமாக்க வேண்டுமென்று, அவரை வேண்டிக் கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக் கொண்டு நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனா யிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்க ளுடனே கூடப் போனார் வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி; நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்,

அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத் திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகரு முண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான் மற்றொருவனை வா என்றால் வருகிறான்; என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர் களை அனுப்பினான். இயேசுவை இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி தமக்குப் பின்செல்லகிற திரளான ஜனங்களை நோக்கி; இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் செல்கிறேன் என்றார். இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற அன்பு வாசகரே, ஆண்டவர் நூற்றுக்கு அதிபதியைக் குறித்து கொடுத்த சாட்சியை பார்த்தீர்களா? அதைப் போல கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைக் கண்ட கர்த்தர் உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். ஆசீர்வதாம் உடனே வந்து விடாது. நம்முடைய நம்பிக்கை அதாவது விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இந்த கானானிய ஸ்திரீயின் விசுவாசத் தைப் போலவும், யாக்கோபு, மரியாள் மற்றும் நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைப் போலவும் இருக்கிறதா? கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் போது நாமும் கர்த்தரிடம் கேட்டவைகளைப் பெற்றுக்கொள் வோம் என்ற நம்பிக்கையோடு இருங்கள்.

## தம்மிடம் வந்த எல்லோரையும் கர்த்தர் ஏற்றுக்கொண்டாரா?

ஆம், அவர் ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை. அவரிடம் வந்த அனைவரும் சுகம் பெற்றுச் சென்றனர். அவர் ஒருமுறை கெனேசரேத்து நாட்டில் சேர்ந்த போது அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல் லாரையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள். தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் என்று மத்தேயு 14:35,36 வசனங்களில் வாசிக்கிறோம். அவரிடம் வந்த அனைத்து நோயாளிகளும் பிசாசு படித்தவர்களும் சுகமானார்கள் என்று நான்கு சுவிசேஷ புத்தகங்களின் வாயிலாக அறிகிறோம். இயேசு சொல்கிறார்; பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத் தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்றார் (யோவா. 6:37). உங்களையும் ஆண்டவர் நேசிக்கிறார். நீங்கள் அவரை ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்ளும்போது மெய் யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்வீர்கள். அவர் ஒருபோதும் உங்களை கைவிடார். கானானிய ஸ்திரீயைப் போல அவர் உங்களை ஆசீர்வதிக்கும் வரை அவருடைய சமூகத்தை விட்டு எடுபடாதிருங்கள். கானானிய ஸ்திரீக்கு இரங்கின கர்த்தர் உங்களுக்கும் இரங்கத்தக்கதாக உங்களுக்காக ஜெபிக்கிறோம். ❋

# வாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள்

# Pray for Open Doors

*DayTon Keesee*



பவுல் சிறைச்சாலையில் இருந்து கொண்டு, " *கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாகப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்*" என்று மன்றாடுவது நம்ப முடியாததாக உள்ளது. (கொலோ. 4:34).

ஏன் அது நம்ப முடியாதது? முதலாவது, பவுல் சிறையிலிருந்து கூட கதவுகள் திறக்கப்பட வேண்டுமென்று தாகமாயிருந்திருக்கிறார். ஆனால், அநேக சகோதரர்கள் சுவிசேஷத்தை சுதந்திரமாக அறிவிக்க வாய்ப்பிருந்தும் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என ஜெபிப்பதே இல்லை. சுதந்திரமாக வெளியிலிருக்கிற நீங்கள் கதவுகள் திறக்கப்பட ஜெபிக்கிறீர்களா?.

இரண்டாவது, இங்கே பவுல் தான் கிறிஸ்துவின் இரகசியத்தைப் பேசும்படியாக வாசல்கள் திறக்கப்பட வேண்டும் என விரும்புகிறார், அதன் காரணமாகவே, பவுல் சிறையில் அடைக்கப்பட்டார். பவுல் எந்த காரணத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டாரோ அந்த காரணத்திற்காகவே அவர் ஜெபிக்கிறார். இப்படி யாரால் ஜெபிக்க முடியும்? நிச்சயமாக பவுலால் தான் முடியும்! அடுத்தது, கிறிஸ்துவின் செய்தியை ஏற்றுக்கொள்ளுகிற இருதயங்களுக்காக (வாசல்கள் திறக்கப்பட) அவர் ஜெபித்தது அவர் அதை எவ்வளவு முக்கியமாக கருதியிருக்கிறார் என்பதற்கு சான்றாக உள்ளது. இயேசுவைப்

பற்றி, ஏற்றுக் கொள்ளுகிற இருதயங்களுக்கு அறிவிப்பது உங்களுக்கு முக்கியமாகத் தெரிகிறதா? அதற்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா? அது சம்மந்தமாக உங்களுக்காக ஜெபிக்கும்படி மற்றவர்களை கேட்டுக்கொள்கிறீர்களா?

மூன்றாவது, "எருசலேம் தொடங்கி இல்லிரிக்கும் வரை அநேக ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தைப் பரப்பிய அதே. மனிதன் தான் அநேக வாசல்கள் திறக்கப்பட வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்" (ரோமர் 15:19). ஊழியத்தில் ஒரு இடைவெளி இருக்கட்டும் என்று யாராவது நினைக்க விரும்பியிருந்தால், அந்த உரிமை சிறையிலடைக்கப்பட்ட பவுலுக்கு இருந்தது. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் சபைகளை ஸ்தாபித்த பிறகு இயேசுவைப் பற்றி பிறரிடம் சொல்ல பவுலுக்கு இருந்த ஏக்கம் நம்மெல்லாருக்கும் முன்மாதிரியான ஒரு சவாலாக இருக்க வேண்டும். பவுல் உண்மையாகவே, "மற்றவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதை தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார்" (ரோமர் 15:21). சத்தியத்தைக் கேள்விப்பட்டிராத யாரோ ஒருவரை சந்திக்கும்படியாக நீங்கள் ஜெபிப்பதுண்டா?

நான்காவது, புதிய ஏற்பாட்டில் பாதி நிருபங்களை எழுதின பவுல் தான், சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய பிரகாரமாக அறிவிக்க தேவனிடம் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறார் (கொலோசெயர் 4:34). சத்தியத்தைப் போதித்த போது, அவருக்கே தேவனுடைய உதவி தேவைப்படுகிறதென்றால், தேவனுடைய உதவியைத் தேடாமல், பிறரோடு வேதாகமத்தைப் படிக்க நாம் துணியக் கூடாது.

பவுலின் ஜெபமும், வேண்டுகோளும் வாசல்கள் அவருக்குத் திறந்திருப்பதை அவர் உணர்ந்து கொண்டார் என்பதற்கான அத்தாட்சியாக இருக்கிறது. " போதிக்கத் தக்க நேரத்தில் நாம் ஜனங்களை சந்திப்பது முக்கியமாக இருக்கிறது ". லூக்கா பதினைந்தாம் அதிகாரத்தில், அந்த இளைய குமாரன் "புத்தி தெளிந்த போது " சரியானதைச் செய்ய ஆயத்தமாயிருந்தான் (லூக்கா 15:17-21). அந்த எத்தியோப்பிய மந்திரி தனக்குப் புரியாததை வாசித்துக் கொண்டிருந்த போது, பிலிப்பால் போதிக்கப்பட ஆயத்தமாயிருந்தான் (அப். 8:29-39)

நார்மன் கிப்ஸன் என்பவர், ஏற்கனவே ஆயத்தமாயிருந்த ஒரு மனிதனுக்குப் போதித்தது பற்றி இவ்விதம் சொல்கிறார். அவர்கள் வசனங்களை படித்துக் கொண்டிருந்தபோது, அந்த மனிதன் கேட்ட ஒரு கேள்வி, நார்மன் கிப்ஸனை, இருதயத்தை வேதனைப்படுத்துகிற ஒரு பாடலை இயற்ற காரணமாகி விட்டது. " இத்தனை நாட்கள்

நீங்கள் எங்கே இருந்தீர்கள்"? ஒரு முறை நானும் Larry Bilingsley என்பவரும் ஒரு தாயாரோடு படித்துக் கொண்டிருந்த போது கண்களில் கண்ணீருடன் சத்தியத்தின் மீது அவர்கள் கொண்ட அக்கறை, ஆர்வம் நாங்கள் அந்த தாயாரை விட்டுப் பிரிய முற்படும் போது எங்களிடம் கேட்ட கேள்வியில் தெரிய வந்தது. " என்னைத் தனியாக விட்டுச் செல்ல நீங்கள் துணிந்து விட்டீர்களா? ஒரு திறந்த வாசலாக தேவனுடைய வார்த்தையிலிருந்து அந்த தாய்க்கு மற்றுமொரு பாடம் தேவையாயிருந்தது".

எல்லாவற்றுக்கும் போதுமான தேவ வார்த்தை இப்படிப்பட்ட ஆத்துமாக்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென நீங்கள் ஏங்குகிறீர்களா? (Iதீமோத்தேயு 3:16,17).

திறந்த வாசல்கள் எங்கே இருக்கிறதென்பதை தேவன் அறிந்திருக்கிறார் (யோவான் 2:25) (எபிரெயர் 4:13). மேலும், அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ என்று சோதித்தறித்து கொள்வான் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (யோவா 7:17). தேவனுடைய மகிமையான அன்பு, மனித ஆர்வம் மற்றும் வாசல்கள் திறக்கும்படியாக ஜெபம் போன்றவைகள் ஒன்று சேர்ந்தால் தான் சுவிசேஷ முக்கோணத்தை அமைக்க முடியும். வாசல்கள் திறக்கும்படியாக நீங்கள் ஜெபித்ததை தேவன் கேட்டிருக்கிறாரா? நீங்கள் எதற்காக காத்திருக்கிறீர்கள்?

சகோதரனே, சகோதரியே நீங்கள் எதற்காக நீண்ட நாட்கள் காத்திருக்கிறீர்கள்? ❋

## கிறிஸ்துவில் வெற்றி

☆ வாழ்க்கையில் வெற்றி

(கொலோ. 1:27 ; எபே. 6:17)

☆ மரணத்தில் வெற்றி

(மத். 16:19 ; 2 தீமோ. 1:10)

☆ நித்தியத்தில் வெற்றி


(எபே. 4:8 ; 2 தீமோ. 4:8)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**வே**தாகமத்திலிருந்து நீங்கள் அதிகமாக கற்றுக் கொள்ள முடியும்; ஆம், நீங்கள் இன்னும் அதிகமாக அவைகளை நடைமுறைப்படுத்துவதினால் கற்றுக் கொள்ள முடியும்.

# வசனப் பஞ்சம்

## (ஆமோஸ் 8:11)



**Seed Famine**

**(Amos 8:11)**

***Danny Cline***

**இ**தற்கான பின்னணி : பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மெலிந்த ஆப்பிரிக்கா பெண்ணொருத்தி, உப்பிப்போன தன் குழந்தையை முதுகில் போட்டுக் கொண்டு விதை போடும்படி குனிந்தாள், பின்பு களை எடுத்தாள், கண்ணுக்குத் தெரியாத அந்தப் பயிரைப் பராமரித்தும் பயனில்லை. வருடந்தோறும் மறுபடியும் மறுபடியும் களை எடுத்தும், பராமரித்தும் எதையாவது அறுவடை செய்வோம் என்கிற நம்பிக்கையே அற்றுப் போயிற்று.

ஆனால், இந்த வருடம் மழைப் பெய்தால்... "*உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது*" (Iகொரிந்தியர் 9:10).

இருப்பினும், அதே நேரத்தில் பெரும்பாலான நேரங்களில் சர்வ வல்லவருடைய வார்த்தையை விதைக்க வேண்டிய நாம், விதைத்தது முளைக்கும் என்கிற நம்பிக்கையற்றவர்களாகவும், அறுவடை சம்மந்தமாக எண்ணமற்றவர்களாகவும் உள்ளோம்.

தடுமாற்ற நிலை : விதைப்பதையே நாம் விட்டுவிட வேண்டுமா?

விதைக்கவில்லை என்றால் மழை பெய்தாலும் அதுபற்றி ஒன்றுமில்லை.

ஆனால், விதைத்த பிறகு, மழை பெய்தால்?

நாம் நடுவோம், நாம் நீர்ப் பாய்ச்சுவோம் ...... ஆனால் விளையச் செய்கிறவர் தேவனே (I கொரிந்தியர் 3:6)

"*சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு*" (II தீமோத்தேயு 4:2) ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, தண்ணீர் குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம் எல்லா பஞ்சங்களை விட மிக மோசமான பஞ்சமாகும் " (ஆமோஸ் 8:11). நடுகிற பஞ்சம் வளர்கிற பஞ்சத்தோடு ஒப்பிடும் போது ஒன்றுமில்லை. அதாவது நடுகிற பஞ்சம் கடுமையாக இருக்கும்.

எனவே நாம் விதைத்துக் கொண்டே இருப்போம். ஒருவேளை மழை பெய்யக் கூடும் ! ❋

## கர்த்தருடைய வார்த்தையின் நன்மைகள்

**(சங்கீதம் 119 லிருந்து.....)**

| | | |
|---|---|---|
| 1. | நமது வழிகளை சுத்தப்படுத்துகிறது | (9,101) |
| 2. | பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது | (11,101) |
| 3. | ஊக்கப்படுத்துகிறது | (14,16,25) |
| 4. | தேவ பயத்தை தருகிறது | (38) |
| 5. | நம்பிக்கை அளிக்கிறது | (43,49–50) |
| 6. | நன்றியுணர்வைத் தருகிறது | (62) |
| 7. | ஞானத்தைக் கொடுக்கிறது | (98,100) |
| 8. | வழி நடத்துகிறது | (24,105) |
| 9. | ஜீவனைக் கொடுக்கிறது | (25,37,40) |

# ஐக்கியத்தில் ஆராதனை

## Worship in Communion

*David W.Chadwell*

ஒருவர் கிறிஸ்தவராகும் போது, உண்மையாகவே அவர் புதிதாகப் பிறக்கிறார். ஆவிக்குரிய பிறப்புக்கும், சரீரப்பிரகாரமான பிறப்புக்கும் இடையே மாபெரும் ஒற்றுமை இருக்கிறது. சரீரப்பிரகாரமான பிறப்பில் குழந்தை பிறந்த உடனே ஒரு குடும்பத்தில் அங்கமாகிறது. ஆவிக்குரிய பிறப்பின் போதும் ஆவிக்குரிய குழந்தை உடனே தேவனுடைய குடும்ப மாகிய சபையில் அங்கமாகி விடுகிறது.



ஞானஸ்நானத்தின் மூலமாக ஆவிக் குரிய பிரகாரமாகப் பிறக்கும் ஒருவர் அதாவது, அந்த கிறிஸ்தவர் இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொள்கிறார். அவர் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு ஆவிக் குரிய ஆசீர்வாதம், பெற்றுக் கொள்ளப் போகிற ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர் வாதமும் கிறிஸ்துவின் மூலமாகத் தான் கிடைக்கிறது. (எபே. 1:3). அந்நேரத்திலிருந்து, இயேசு அவருக்கு ஆண்டவரா கிறார். அதாவது, உண்மை யாகவே அந்த கிறிஸ்தவரு டைய வாழ்க்கையை ஆளு கிறவராகிறார் (I தீமோ. 6:13-16) இயேசு, ஒரு கிறிஸ்த வனுடைய இரட்சகராயிருக் கிறார் (அப். 4:12) அது மட்டு மல்ல, மீட்பராக மற்றும் (எபேசியர் 1:7) தேவனிடத் தில் தனிப்பட்ட ரீதியில்

பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார். (எபி. 7:25). இயேசு அவரைப் பரிசுத்தப்படுத்தி, நீதிமானாக்குகிறார் (1 கொரி. 1:2). இயேசுவினால் தான் ஒருவர் தேவனுடைய குமாரனாக, குமாரத்தியாக இருக்கிறார். இயேசுவினால் மட்டுமே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும். இயேசுவினால் தான், ஒருவர் கிறிஸ்தவராயிக்கிறார். இயேசு இல்லாமல் ஒருவர் கிறிஸ்தவராகவோ அல்லது தேவனுடைய குடும்பத்தில் அங்கம் வகிக்கவோ முடியாது. ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்தவரும் தொடர்ந்து தனிப்பட்ட ரீதியில் இயேசுவைச் சார்ந்திருப்பது குறித்து உணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசு தனக்குச் செய்த, செய்கின்ற எல்லாவற்றுக்காகவும் தொடர்ந்து நன்றி உள்ளவராக இருக்க வேண்டும். இயேசு, ஒரு கிறிஸ்தவர் தன்னை தொடர்ந்து நினைவு கூரும்படியாக, ஒரு குறிப்பிட்ட வழியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்த நினைவு கூருதல் தான், கர்த்தருடைய பந்தி எனப்படுகிறது.

**அமைப்பும், நோக்கமும்:**

கிறிஸ்தவர்களாயிருக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்ட எல்லோரும் கர்த்தருடைய பந்திக்கான அமைப்பு பற்றிய புதிய ஏற்பாட்டு போதனையைப் புரிந்து கொள்வார்கள். கிறிஸ்தவராக ஒருவர் இருப்பதற்கான அர்ப்பணிப்புக்கு, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்காக போதனைகளை மிக ஜாக்கிரதையாக சிந்திப்பது அவசியமாயிருக்கிறது.

இருப்பினும், கர்த்தருடைய பந்தி மூலமாக இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியப்படுவது என்பது, கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை சரியாகக் கடைபிடிப்பதை விட சற்று அதிகமான முக்கியத்துவம் பெறுகிறது.

இயேசுவோடு ஐக்கியம் கொள்வதென்பது, தனிப்பட்ட கிறிஸ்தவர்களுடைய இருதயத்திலும், மனதிலும் சரியான நோக்கத்தை அடைகிறதாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தி சரியான முறையில் அனுசரிக்கப்பட்டால் கூட அனுசரிப்பவரின் இருதயத்தில், மனதில் இயேசுவின் நோக்கத்தை நிறைவேற்றவில்லையென்றால், அது அர்த்தமற்றதாகி, ஆசீர்வாதத்தை இழக்கச் செய்துவிடும். கர்த்தருடைய பந்தியை ஒரு சடங்கு போல் அனுசரிக்கக் கூடாது. ஆராதனையின் ஒரு பங்காகிய மிக ஆழமான இந்த செயல், ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாசத்தை அறிவிக்கிறது, சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவுக்கு ஒரு கிறிஸ்தவன் நன்றியை வெளிப்படுத்தும் விதமாகவும் இருக்கிறது.

**கர்த்தருடைய பந்தியின் சரியான நோக்கங்கள் என்ன?**

1. கர்த்தருடைய பந்தி, இயேசு தியாக மரணத்தில் தன் சரீரத்தையும், இரத்தத்தையும் ஒப்புக்கொடுத்தார் என்பதை ஒரு கிறிஸ்தவன் நினைவு கூரச் செய்கிறது. (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:14-20; 1 கொரிந்தியர் 11:24-25). அப்பத்தைப் புசிப்பது, ஒரு கிறிஸ்தவனை இயேசு தன் பாவமற்ற சரீரத்தை ஒப்புக் கொடுத்ததை நினைவுகூரச் செய்கிறது. திராட்ச இரசத்தை குடிப்பது ஒரு கிறிஸ்தவனுக்கு இயேசு தன் பாவமற்ற இரத்தத்தை சிந்தினார் என்பதை நினைவு படுத்துகிறது.

1கொரி. 11:23,24 வசனங்கள் கர்த்தருடைய பந்தி பற்றி மிகச் சிறந்த ஆழமான அறிவைக் கொடுக்கிறது. கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியை தவறாகப் பயன் படுத்தினார்கள். அது சபையில் பிரிவினையை உண்டாக்கியது (1 கொரி. 11:18-22). அவர்கள் கர்த்தருடைய பந்தியின் அமைப்பையும், நோக்கத்தையும் தவறாகப் பயன் படுத்தியதால், பவுல் அது எந்த நோக்கத்திற்காக, எப்படியாக அனுசரிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்.

2. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்துவின் மரணத்தில் தனக்கிருக்கும் விசுவாசத்தை அறிவிக்கிறார் (வசனம் 26). தேவனுடைய குமாரன் மாம்சத்தில் வந்து தன் சரீரத்தை தியாகம் பண்ணினார் என்பதை ஒரு கிறிஸ்தவர் பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

3. கர்த்தருடைய பந்தியில் ஒரு கிறிஸ்தவர், சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதையும் அவர் மறுபடியும் வரப்போகிறார் என்கிற தன் நம்பிக்கையையும் தெரிவிக்கிறார் (வசனம் 26). தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார். அவர் நிச்சயமாகவே திரும்ப வருவார். கர்த்தருடைய பந்தி மூலமாக ஒரு கிறிஸ்தவர், இயேசுவின் மரணத்தையும், இயேசுவின் வருகையையும் நிச்சயத்தோடு திரும்பிப் பார்க்கிறார்.

4. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக, ஒரு கிறிஸ்தவன் சக கிறிஸ்தவர்களோடு ஆவிக்குரிய குடும்ப உறவைப் பகிர்ந்து கொள்கிறார் என்பதை உறுதி செய்து கொள்கிறார் (வசனம் 33). கர்த்தருடைய பந்தி மூலமாக, ஆராதனையை ஏறெடுக்கும் ஒருவர், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடனும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் எல்லோரிடமும் உறவை உறுதி செய்து கொள்கிறார். ஒரு கிறிஸ்தவன் இயேசுவோடு ஐக்கியத்தை வைத்துக் கொள்ளும் போது, கர்த்தருடைய பந்தி என்பது ஆராதனையின் தனிப்பட்ட செயலாக இருக்கிறது. இது சபையார் அனைவரும் கலந்து கொள்ளும் ஆராதனையின் ஒரு பங்காயிருக்கிறது.

ஏனென்றால், அதில் பங்கு பெறும் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் இருக்கும் உறவை உறுதி செய்து கொள்கிறார்கள்.

பவுல், ஐக்கியப் பந்தி மூலமாக ஏறெடுக்கப்படும் ஆராதனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஒரு கிறிஸ்தவன், கர்த்தருடைய பந்தியின் நோக்கத்தை மீறி அதில் பங்கு பெற்றால், அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான் (வசனம் 27) பந்தியில் பங்கு பெறுகிறவர் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தன்னைத் தானே சோதித்தறிந்து பங்கு பெற வேண்டும். அவர் தன் இருதயத்தை, தன் மனநிலையை, ஆவிக்குரிய கவனத்தை, மற்றும் அப்பத்தைப் புசிப்பது, பாத்திரத்தில் பங்கு பெறுவதற்கான காரணங்களை சோதித்தறிய வேண்டும். (வசனம் 28). அபாத்திரமாய் பந்தியில் பங்கு பெறும் போது அது ஆவிக்குரிய பெலவீனம், ஆவிக்குரிய வியாதி மற்றும் ஆவிக்குரிய மரணத்தில் கொண்டு போய் விடுகிறது (வசனம் 30).

கர்த்தருடைய பந்தி வழக்கமான ஒன்றாக மாறிவிடக் கூடாது. அது ஆராதனையின் அர்த்தமற்ற ஒரு செயல் அல்ல. மாறாக, ஆழமான அர்த்தம் கொண்ட வெளிப்பாடு. ஒரு கிறிஸ்தவன் சரியான முறையில் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்க வேண்டுமென்றால், அதன் அமைப்பையும், நோக்கத்தையும் நிறைவேற்ற வேண்டும். ஒரு சபையானது, கர்த்தருடைய பந்தியை கடைப்பிடிக்கிற காரியத்தில் மிகச் சிறந்த அக்கறை செலுத்தினாலும், அங்கத்தினர்கள் இதில் சரியான நோக்கத்தோடு பங்கு பெறாவிட்டால், கிறிஸ்து இதில் பிரியப்படமாட்டார். கர்த்தருடைய பந்தி, சபையின் ஆராதனையாகவும், தனிப்பட்டவரின் ஆராதனையாகவும் இருக்கிறதென்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது. கூடி வந்திருக்கும் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவோடு தனிப்பட்ட ரீதியில் ஐக்கியம் கொள்ளாவிட்டால், ஐக்கியம் பந்தியின் மூலமாக, அதன் நோக்கத்தை நிறைவேற்றாவிட்டால் கிறிஸ்து புண்படுத்தப் படுகிறார்.

கர்த்தருடைய பந்தி சபையின் ஆராதனைக்கும், தனிப்பட்ட நபருடைய ஆராதனைக்கும் சமமானது என்பதை கிறிஸ்தவர்கள் ஒரு போதும் மறந்து போகக் கூடாது. ஒரு கிறிஸ்தவன் தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்துவோடு ஐக்கியப்படவில்லையென்றால் கர்த்தருடைய பந்தி மூலமாக சபையாரால் ஏறெடுக்கப்படும் ஆராதனை பொருளற்றதாக இருக்கும்.

❋ ❋



# ஆராதனை, ஒரு பழக்கமா?

## Worship, a Habit?

*Ron Stough*

ஓர் உண்மையற்ற கிறிஸ்தவனை பரிசுத்தவான்களோடு சேர்ந்து ஆராதிக்கும்படியாக நாம் அழைத்து, அதற்காக அந்த நபரை உற்சாகப்படுத்தும் போது, "ஓ, நான் அங்கே இருக்க வேண்டும் என்பதை அறிவேன்". ஆனால் சபை கூடும் பழக்கத்தை நான் விட்டுவிட்டேன் என்று பெரும்பாலும் பதில் வருகிறது. ஒருவேளை நான் அதை திரும்பத் தொடங்கலாம்.

ஆராதனையை நாம் ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தால், பல் துலக்குதல் அல்லது காலையில் நடைபயணம் மேற்கொள்ளுதல் போன்று ஆராதனை மாறிவிடும். ஆராதனையை நாம் வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகப் பார்க்காவிட்டால், அதை விட்டுச் செல்வதும் சர்வ சாதாரணமான ஒன்றாக மாறிவிடும்.

நம் ஆராதனையின் நோக்கம் பிதாவாகிய தேவனை கனப்படுத்துவதும், மகிமைப்படுத்துவதுமாகும். இதற்கு வாரத்தின் எல்லா நாட்களிலும் நம் இருதயங்களில் அன்பு, மரியாதை மற்றும் பக்தி அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் தேவனோடு வாழ்ந்து, அவரை இன்னும் நெருக்கமாக அறிந்தால் தான், கர்த்தருடைய நாளிலே அவரை உயர்த்தி, துதிப்பதற்கு நாம் ஆசைப்படுவோம். நம் பாவங்களுக்காக இயேசுவை சிலுவைக்கு அனுப்பிய அன்பை ஆழமாகப் புரிந்து கொண்டால் தான் நாம் ஆராதனை ஒரு பழக்கம் என்றெண்ணுவதை விட்டு

விட்டு, அதை ஒரு சிலாக்கியமாக எண்ணுவோம்.

சந்தோஷத்தினால் நிறைந்த சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதியுள்ளார். " நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர் " (சங். 99:5). நாம் பரிசுத்தமான தேவனை சேவிக்கிறோம்! நம் ஆத்துமா நம் சிருஷ்டிகரோடு ஆவிக்குரிய ஐக்கியம் கொள்ள கதறுகிறது. ஏனென்றால், அவருடைய சாயலில் தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அறிவு, சுயக்காட்டுப்பாடு மற்றும் பயிற்சியோடு தேவனைக் கனப்படுத்துவது அவசியம் என்னும் உண்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நாமும் தாவீதைப் போல, "*கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன் என்று சொல்ல முடியும்* " (சங். 122:1).

❋

**எபிரெயர் நிருபத்திலிருந்து....**
**" கடவோம் "**

1. ...பின் வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்க கடவோம். (4:1)
2. .... இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் (4:11)
3. ... உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம் (4:14)
4. ...கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (4:16)
5. ... பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம் (10:22)
6. ...ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம் (10:25)
7. ... பொறுமையோடே ஓடக்கடவோம் (12:1)
8. ... கிருபையைப் பற்றிக் கொள்ளக் கடவோம் (12:28)
9. ... அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம் (13:13)
10. ....தேவனுக்கு ஸ்தோத்திர பலியை செலுத்தக்கடவோம் (13:15)

# ஆராதனையும், நீங்களும்

## *Worship And You*

***Bill Mcfarland***

நம்மெல்லாருக்கும் தேவனை சேர்ந்து ஆராதிப்பதினால் கிடைக்கும் பெலன் அவசியப்படுகிறது. அதில் ஏதோ ஒன்றிருக்கிறது. அது நாம் அவருடைய பாதையில் செல்லவும், அன்பு மற்றும் நற்கிரியைகள் செய்ய நம்மை ஏவுகிறது.

ஆனால், நம் ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டுமென்று நாம் ஏங்குகிறோம். சோம்பலும், வெறுமையுமான சடங்கு அல்லது வைபவங்கள் தேவனை கனப்படுத்துவதுமில்லை, தேவனுடைய பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதுமில்லை. தேவனுக்கு ஆவிக்குரிய பலிகளை செலுத்தும் அனுபவம் நமக்குத் தேவைப்படுகிறது.

ஆராதனை இருக்க வேண்டிய விதத்தில் இருக்க வேண்டுமானால் ஒருவர் என்ன செய்யமுடியும்?

ஆராதனைக்குப் போவதற்கு முன்பாக ஆயத்தமாக வேண்டும். தேவனுக்கு துதி, கனம், மகிமையை செலுத்துவதற்கு அவருக்கு முன்பாக காணப்படுவது என்பது யோசனையும், முயற்சியுமில்லாமல் செய்யப் படுகிற காரியமல்ல. இருதயத்தில் இல்லாத ஒன்றை அதால் வெளிப் படுத்த முடியாது. எனவே ஆராதனைக்கு முன்பாகவே நன்றி, தாழ்மை மற்றும் துதியால் இருதயத்தை நிரப்புங்கள். முக்கியமானவைகளை முதன்மைப்படுத்தி, தேவனிடத்தில் இருதயத்தை ஊற்ற விழிப்புணர்வா யிருக்கத் திட்டமிட்டிருங்கள்.

நீங்கள் அங்கே இருக்கும் போது பங்கு பெறுங்கள். ஆராதனை என்பது நாமே செய்யக்கூடிய ஒன்று. மற்றவர்கள் நமக்காக ஆராதிக்க முடியாது. உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பாருங்கள். உங்களையே தேவனுக்குக் கொடுங்கள். ஊக்கமாக ஜெபியுங்கள். துதிகளை ஏறெடுங்கள். தேவனுடைய வார்த்தைகளை தியானியுங்கள். தேவனிடம் கிட்டிச் சேருங்கள். இவைகளையெல்லாம் ஆராதனையில் நேரடியாக ஈடுபாட்டுடன் பங்கு பெறாமல் செய்யவே முடியாது. ❋

# *மிகச் சிறந்த நிலையை அடைய பாடுபடுதல்*

## Striving for Sterling

*Betty Tucker*

**நா**மெல்லோரும் நம் இல்லங்களில், குடும்பங்களில், வாழ்க்கை நிலையில் மிகச் சிறந்த நிலையை அடைய ஆசைப்படுகிறோம். ஆகையால், நம் வாழ்வில் உன்னத நிலையை அடையும்படி, அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

இச்சம்பவத்தைக் கொஞ்சம் கவனியுங்கள். ஒரு மனிதர் மரித்துப் போனார், பிரசங்கியார் அவரை அலங்கார வார்த்தைகளினால் புகழ்ந்தார். அந்த மனிதனுடைய மனைவி தன்னைச் சுற்றிலும் தன் பிள்ளைகளுடன் அந்தச் சிறு சபைக்கட்டிடத்தின் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவள் அந்தப் பிரசங்கியாரின் தொடர் புகழாரத்தைக் கேட்ட பிறகு, தன் மூத்த மகனிடம், " சவப் பெட்டியில் இருப்பது உன் தகப்பன் தானா, பார் " என்று மெதுவாகச் சொன்னார் ".

மிகச் சிறந்த அன்பை வெளிப்படுத்துவதற்கு நமக்கு உதவிச் செய்யும் அந்த அன்பின் இரகசியத்தை நாம் எங்கே காண முடியும்? நாம் நாளிதழ்களையோ, வேறு நிகழ்ச்சிகளையோ இதற்காக நாடக் கூடாது. திருமண ஆலோசகர்கள் ஆலோசனை கொடுக்கிறார்கள். ஆனால், அவைகள் முரண்பட்டவைகளாய் இருக்கின்றன. " *பின்பு, தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்* " (ஆதியாகமம் 2:18).

### தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகளிலிருந்து சேகரிக்கப்பட்டவைகள்

வேதாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தில், திருமணம் தேவனால் திட்டமிடப்பட்டது என்று பார்க்கிறோம். " *பின்பு, தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை உண்டாக்குவேன்* என்றான் " (ஆதி 2:18). பிற்பாடு, புதிய ஏற்பாட்டில் பரிசேயர்கள் மணமுறிவு சம்மந்தமாக கிறிஸ்துவை சோதித்தார்கள். மத்தேயு 19:3-9 வசனங்களில் குறிப்பாக ஐந்தாம் வசனத்தில் இயேசு கூறுவதைக் கவனியுங்கள். " *இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்* " *என்றார்.*

இது, திருமணம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை தெளிவாகப் போதிக்கிறது. தேவன் விவாகத்தை திட்டமிட்டார். தேவன்

இணைத்தார். அது வாழ்க்கை முழுவதற்குமான ஓர் ஒப்பந்தமாகும். இது ஆணுக்கும், பெண்ணுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்த தேவனால் தீட்டப் பட்ட மிக அழகான திட்டமாகும்.

சில வேளைகளில், திருமணத்தில் ஒரு ஆணோ, பெண்ணோ ஒருவரிலொருவர் உண்மையில்லாமல் இருந்து துரோகம் செய்து விடுகிறார்கள். மத்தேயு 19வது அதிகாரம் 9 ஆம் வசனத்தின் எச்சரிப்பை கவனியுங்கள். "*ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளி விட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிற வனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்*". பவுல் Iகொரி. 6:9,10 வசனங்களில் அநேகப் பாவங்களை பட்டியலிடுகிறார். அதில் விபச்சாரத்தையும் நாம் காண்கிறோம். விபசாரத்தில் ஈடுபடுகிற வர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று சொல்கிறார்.

எபேசியர் ஐந்தாம் அதிகாரத்திற்கு வேதாகமத்தைத் திருப்பும் போது திருமணத்திற்கான நடைமுறை வழிக்காட்டியைக் காண்கிறோம். அங்கே கீழ்க்காணும் போதனைகள் உண்டு.

*1. "புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்" (வசனம் 23)*

*2. "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" வசனம் 22*

*3. "மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" (வசனம் 33)*

*4. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (வசனம் 25).*

*5. அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூர வேண்டும் (வசனம் 28).*

தேவன் கட்டளையிட்டபடி கணவன் தன் மனைவியை நேசித்தால், மனைவி எளிதாக புருஷனுக்குக் கீழ்ப்படிய முடியும். அவர்கள் என்றென் றும் சந்தோஷமாக வாழலாம். அவர்களுடைய அன்பு நாம் தேடுகின்ற மிகச்சிறந்த நிலைக்கு மாதிரியாக இருந்து, மிகச்சிறந்த திருமண வாழ்வு வாழ்வார்கள்.

" ஒரு காரியத்தை எப்போதும் மனதில் வையுங்கள். பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வீட்டிலேயே ஆலோசனைகளை தேடுவது மிகச் சிறந்தது. இது விவாகரத்து நீதிமன்றங்களுக்கு ஓடுவதை விட எவ்வளவோ மேல். இது நடக்கும்போது, ஒவ்வொருவரும் பாதிக்கப்படுவார்கள். ஆனால், பிள்ளைகள் மிக மோசமாக காயப்படுத்தப்படுகிறார்கள் ".

**- Charles Burch**

# அவள் பிள்ளைகளின் மீது அவளுடைய அதிகாரம்

## *Her Power Over Her Children*

***Betty Burton Choate***

ராகேல் யாக்கோபை நோக்கி, "எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் " என்றாள் (ஆதி. 30:1). ராகேல் தன் சகோதரியாகிய லேயாள் குழந்தைகளுடன் இருப்பதைப் பார்த்து தனக்கு சொந்தமாக ஒரு பிள்ளை வேண்டும் என்று எவ்வளவாய் ஏங்கியிருப்பாள். அவள் தேவனிடம் தனக்கு ஒரு மகன் வேண்டுமென ஊக்கமாக ஜெபித்தாள். " *தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவி கொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று; தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும், இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசோப்பு என்று பேரிட்டாள்* " (ஆதி. 30:20-24).

பென்யமீன் பிறந்த போது யோசேப்புக்கு எத்தனை வயது என்று நமக்குத் தெரியாது. அவன் பிறந்தபோது ராகேல் அவனுக்கு பெனொனி, " என் துக்கத்தின் மகன்" எனப் பேரிட்டு மரித்துப் போனாள் ". யோசேப்பின் ஆரம்ப காலத்தில் அவன் எங்கே பயிற்சி பெற்றான் என்பது நமக்குத் தெரியாது.

யோசேப்பை தனக்குப் பிரியமாகத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவனுக்கு தேவனைப் பற்றி போதித்தது யாக்கோபு மட்டும்தானா? நிச்சயமாகவே, தேவன் தன்னோடு நேரிடையாகப் பேசுவதற்குத் தான் தேவனிடத்தில் தயவு பெற்றிருந்த அந்த அருமையான தருணங்களை யாக்கோபு யோசேப்புக்கு மாத்திரமல்ல தன் எல்லாக் குமாரர்களுக்கும் சொல்லியிருப்பார். ஒரு வாலிபனாக, தன் சகோதரனாகிய ஏசாவின் கோபத்திற்கு தப்பி ஓடி களைப்பான போது அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து தலையணையாக வைத்து தூங்கிக் கொண்டிருக்கும் போது, பெத்தேலில் தான் கண்ட சொப்பனத்தைத் தெளிவாக, உயிரோட்டத்துடன் விளக்கியிருப்பார். அதில் *ஓர் ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே கர்த்தர் நின்று நான் உன் தகப்பனாகிய*

*ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் என்று சொன்னார்* (ஆதியாகமம் 28:13).



யாக்கோபு இராமுழுவதும் ஒரு மனிதனோடு போராடி அந்த மனிதனை மேற்கொண்டான். அதினால் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கியது. அதினிமித்தம் அவர் நொண்டி நொண்டி நடந்தார். இந்தச் சம்பவங்களை யாக்கோபு அவர்களிடம் தெரிவித்திருக்க வேண்டும். யாக்கோபு தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொண்டபடியால் அவன் பெயர் " இஸ்ரவேல் " என மாற்றப்பட்டது. இந்த சந்திப்பு யாக்கோபை தன் சகோதரனாகிய ஏசாவை சந்திக்க தைரியத்தைக் கொடுத்தது, தேவன் தன்னோடிருந்து தன்னைக் காத்துக் கொள்வார் என்கிற நம்பிக்கையையும் கொடுத்தது.

இங்கே, நாம் யோசேப்பின் குணாதிசயத்திற்கும், லேயாள் மற்றும் வேலைக்காரிகளுக்கு பிறந்தவர்களாகிய சகோதரர்களின் குணாதிசயத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காணும் மிகப்பெரிய வித்தியாசத்திற்குக் காரணம் அவள் கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக ஒரு குமாரனுக்காக ஜெபித்தாள். அவள் நீண்ட நாட்களாக தன் மலட்டுத் தன்மை குறித்தும், வெறும் கைகளோடு இருப்பது குறித்தும் கடும் வேதனைப்பட்டாள். ஒரு குமாரனுக்காக பல வருடங்கள் சொப்பனங் கண்டு அதற்காக திட்டமிட்ட ஒரு தாய்க்கு தன் குமாரனைக் குறித்து ஆவிக்குரிய காரியங்களில் அக்கறை இல்லாமல் இருந்திருக்காது. யாக்கோபுக்குப் பிறந்த பன்னிரெண்டு குமாரர்கள் மற்றும் ஒரு குமாரத்தி ஆகிய இவர்களில் ஜீவனுள்ள விசுவாசத்தையும், தன் வாழ்க்கையின் பங்கு என்ன என்பதையும் முழுமையாகப் புரிந்து கொண்டது யோசேப்பு மட்டும் தான். எனவே, ராகேல் தேவனுடைய காரியங்களைப் போதித்திருக்க வேண்டும். இவைகளை வைத்து நாம்

என்ன முடிவுக்கு வருகிறோம். யோசேப்பு தன் தாயிடமிருந்து தான் அதிக மான விசுவாசத்தை கற்றிருக்க வேண்டும் என்பது தான்.

யாக்கோபு தான் நேசித்த மனைவியாகிய ராகேலிடத்தில் அதிகமான அன்பு காட்டியிருக்க வேண்டுமென்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. தேவன் தன்னிடம் பேசின ஒவ்வொரு வார்த்தை யையும், தன் விசுவாச வளர்ச்சியையும் பற்றி யாக்கோபு ராகேலிடம் முழுமையாகத் தெரிவித்திருப்பார். அல்லது யோசேப்பு தான் தூங்குவதற்கு முன்பாக ஒரு கதை சொல்லும்படி கேட்டிருக்கலாம், அல்லது ராகேலும், யோசேப்பும் அந்த நாடோடி வாழ்க்கையில் நெடுந் தூரம் நடந்து செல்லும் போது தாயிடம் கதை சொல்லும்படியாகக் கேட்டிருக்கலாம் : அம்மா, பூமிக்கும், வானத்துக்கும் நடுவே நின்ற அந்த அழகான ஏணி பற்றிச் சொல்லுங்கள் என்று கேட்டிருக்கலாம். நான் உன்னோடிருந்து உன்னை காத்துக் கொள்வேன் என்று தேவன் தகப்பனிடம் சொன்ன போது என்ன பொருள்படும்படியாகச் சொன்னார்? தகப்பன் தனியாக, பயந்து காணப்பட்ட போது தேவன் தகப்பனிடம் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் கேட்க விரும்புகிறேன் அல்லது அம்மா நீங்கள் உண்மையாகவே எனக்காக அநேக வருடங்கள் ஜெபித்தீர்களா? தேவன் உண்மையாகவே உங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு என்னை உங்களுக்குக் கொடுத்தாரா? என்று இப்படி அநேக கேள்விகளை யோசேப்பு ராகேலிடம் கேட்டிருக்கலாம்.

யோசேப்பின் இளம் மனதிற்குள் இந்த வார்த்தைகள், விசுவாசத்தின் பாடங்கள் வேரூன்றி வளர்ந்தன. அந்நிய தேவர்களைச் சேவித்த எகிப்தில், யோசேப்பு பல வருடங்கள் இருந்தபோது அவைகள் அவரை பக்தி ரீதியாக தாங்கியிருக்கின்றன. யோசேப்பு தவறான குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகி, சிறையில் இருந்தபோது, தேவன் தன்னோ டிருந்து, தன்னைத் தாங்கி, தனக்கு விரோதமாகச் செய்யப்பட்ட எல்லா சதிகளையும் மேற்கொள்ள தன்னை பலப்படுத்தினதை யோசேப்பு ஒரு போதும் மறக்கவில்லை (ஆதியாகமம் 45:7,8).

இன்றைய உலகின் தாய்மார்களாகிய நாம், நம் வார்த்தைகளா லும், நாம் தேவனுக்கு உண்மையாயிருந்து வாழும் வாழ்க்கையினாலும் நம் பிள்ளைகள், வாழ்க்கையை எப்படி சந்திப்பது என்றும் வாழ்க்கைப் பிரச்சனைகளை எப்படி மேற்கொள்வது என்றும் ஒவ்வொரு நாளிலும் போதிக்க முடியும். ❋

## கிறிஸ்தவ வீடு

# மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும்

## To The 3rd and 4th Generation

***David Tarbet***

**யா**த்திராகமம் 20:5ல், *பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் தேவன் விசாரிக்கிறவராயிருக்கிறார்* என்பது குறித்து நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். தேவன் தம்முடைய கோபத்தை ஐந்தாம், ஆறாம் தலைமுறை மட்டும் நீட்டிக்காமல் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் காட்டுகிறார் அல்லது அதற்குள் கட்டுப்படுத்துகிறார் என்கிற உண்மையில் ஒரு முக்கியத்துவம் இருக்க வேண்டும். அந்த முக்கியத்துவம் இதில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறையினர் ஒரே காலக் கட்டத்தில் வாழக்கூடியவர்கள். ஒருவர் மீது ஒருவர் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள். ஒரு தலைமுறையினரின் பாவமுள்ள நடத்தை சம காலத்தில் வாழும் எல்லா தலைமுறையிலும் திரும்ப திரும்ப செயல்படுத்தப் படுகிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை மாதிரியாகப் பார்க்கிறார்கள், பேரப்பிள்ளைகள் தங்கள் தாத்தா, பாட்டியை மாதிரியாக பார்க்கிறார்கள், அது போலவே, அதற்கு அடுத்த தலைமுறையினர் முதல் தலைமுறையினரை மாதிரியாகப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு தலைமுறையும் அதற்கு முந்தைய தலைமுறையின் மோசமான நடத்தை மாதிரியைப் பின்பற்றுகிறது. ஆகவே, தேவன் மூன்றாம், நான்காம் தலைமுறையினர் மீது தமது கோபத்தை வெளிப்படுத்துவது நியாயம் தான். ஏனென்றால், இந்த தலைமுறையினர் ஒருவர் செய்வது போல் மற்றவர்களும் செய்து அந்தப் பாவத்தில் பங்கேற்கிறார்கள்.

பாவமுள்ள நடக்கை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அவருடைய பிள்ளைகள் மீது இத்தகைய சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்துமானால், நீதியுள்ள நடக்கையும் அவர்கள் மீது சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, பிள்ளைகள் வீட்டிலிருக்கும் போது மட்டும் அவர்களிடத்தில் ஆவிக்குரிய செல்வாக்கைச் செலுத்தலாம் என எல்லை வகுத்துக் கொள்வது பெற்றோர்களின் மாபெரும் தவறாகும். உண்மையென்னவெனில், பிள்ளைகள் பெரியவர்களானபிறகு கூட அவர்கள் மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்த பெற்றோர்கள் தவறக்கூடாது. தாத்தா, பாட்டிக்கு மாத்திரமல்ல, கொள்ளு தாத்தா, கொள்ளு பாட்டி போன்றோருக்கும் பேரப்பிள்ளைகள் மீது தேவ பக்திக்கேற்ற செல்வாக்கைச்

செலுத்தும் பொறுப்பு இருக்கிறது. அது எவ்வளவு முக்கியமானது என்பதை சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா?

ஆகவே தான், நாமெல்லாரும் கர்த்தரிடத்திலும், அவருடைய சபையிலும் தொடர்ந்து உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய முன்மாதிரி தான் நம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அவர்களுடைய பிள்ளைகள் சபைக்கடுத்த காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதைத் தீர்மானிக்கும். வேறுவிதமாகச் சொன்னால், பெற்றோர்களின் வேலை ஒரு போதும் முடிந்து போவதில்லை. பிள்ளைகள் வீட்டிலிருந்து போய் அநேக வருடங்கள் ஆனாலும் கூட பெற்றோர்கள் நன்மையாகவோ அல்லது தீமையாகவோ ஒரு தாக்கத்தைத் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, முடிவு பரியந்தம் உண்மையாயிருங்கள். நீங்கள் உண்மையாயிருப்பதினால் போதிக்கும் பாடங்கள் நீங்கள் போன பிறகும் நீண்ட நாட்கள் சந்ததியினரால் உணரப்படும். ❋

## ஆராதனையில் பங்கு பெறுவதற்கான 10 காரணங்கள்

1. இயேசுவோடு இருப்பதற்கு (மத்தேயு 18:20)
2. இயேசுவில் கிடைக்கும் சமாதானத்தை பெற்றுக் கொள்வதற்கு (பிலிப்பியர் 4:7)
3. வேத வாக்கியங்கள் நமக்கு போதிக்கப்படும்படிக்கு (லூக்கா 24:45)
4. பரிசுத்த ஆவியை அவித்துப் போடாதபடிக்கு (1தெச. 5:19)
5. ஆறுதலையும், ஐக்கியத்தையும் பெற்றுக்கொள்வதற்கு (எபிரெயர் 10:24)
6. நம் விசுவாசத்தைப் பயிற்சி செய்வதற்கு (ரோமர் 10:17)
7. வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தை தவறவிடாதபடிக்கு (யோவான் 20:19,24,26-28)
8. ஆவிக்குரிய ஊக்கத்தைப் பராமரிப்பதற்கு (மத்தேயு 24:12)
9. ஆவிக்குரிய பசியை ஆற்றுவதற்கு (மத்தேயு 5:6)
10. கர்த்தர் திரும்ப வரும்போது அவரை எதிர்கொள்வதற்கு (மாற்கு 13:32,33)



# ஒரு பிள்ளையை நடத்த வேண்டிய வழி

## *Train Up a Child*

***Jack Harriman***

ஞானி சாலொமோன், " பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" என்று சொன்னார் (நீதிமொழிகள் 22:16).

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து என்பது அப்படி நடத்துவதற்கு சரியான வழி மற்றும் தவறான வழி என இரண்டும் இருக்கிறது என்பது மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தை சரியான பாதையில் செல்ல வேண்டுமானால், அவ்வழியில் செல்ல பயிற்றுவிக்கப்பட வேண்டும். " *பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்* " என்று சாலொமோன் சொல்லுகிறார் (நீதி. 22:15). " *தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்* " என்றும் (நீதி. 29:15) வாசிக்கிறோம்.

பிள்ளைகளை நாம் நடக்க வேண்டிய வழியிலே நடத்த வேண்டுமென்றால், முதலாவது, நமக்கு அந்த வழி தெரிந்திருக்க வேண்டும். இயேசு சொன்னார். "*குருடனுக்கு குருடன் வழிக்காட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே*" (மத்தேயு 15:14). நிச்சயமாவே, நாம் சரியான வழியை அறியவில்லையென்றால், நம்மால் சரியான வழியிலே பிள்ளைகளை நடத்த முடியாது.

அடுத்ததாக, பிள்ளைகளை அவர்கள் நடக்க வேண்டிய வழியிலே நடத்துவதற்கு நாம் அந்த வழியிலே முதலாவது நடக்க வேண்டும்.

“தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை” என்பதெல்லாம் சரியானது தான். பணமும், சிற்றின்பமும் தான் வாழ்க்கையில் முக்கிய மானவைகள் என்பதை அவர்கள் நம்பும் விதத்தில் வழி நடத்தினால், அவர்கள் அதையே பிடித்துக் கொள்வார்கள். அதுபோலவே, சரீரப் பிரகாரமான காரியங்கள் ஆவிக்குரிய காரியங்களை விட முக்கியமானது என்பதாக நாம் நடந்து கொண்டால் அவர்களும் அதையே பிடித்துக் கொள்வார்கள். நாம் எவைகளுக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் கொடுக்கிறோமோ அவைகளுக்கு தான் அவர்களும் கொடுப்பார்கள்.

நம் பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியிலே நடக்க வேண்டுமானால், அவ்வழியிலே நடக்க அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அந்தப் பயிற்சியிலே உண்மையும், தொடர் போதனையும் இருக்க வேண்டும். நம் பிள்ளைகள் வேத அறிவில்லாமையினால் சங்காரமாகாத படிக்கு தேவனுடைய பார்வையில் சரியானது எவை என்றும், மனிதனுடைய பார்வையில் சரியானது எவை என்றும் போதிக்க வேண்டும். பயிற்சி நடைமுறையோடு இருக்க வேண்டும். (ஒசியா 4:6). அவர்களுக்கு நாம் வெறுமனே போதிப்பது மட்டும் போதாது. நம் அதிகாரத்திற்குட்பட்டு பிள்ளைகள் இருக்கும் வரை, நாம் போதித்தவைகளை அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும்.

உங்களுக்கு நீதியின் வழி தெரியுமா? அந்த வழியில் நீங்கள் போகிறீர்களா? அந்த வழியில் நடக்க உங்கள் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கிறீர்களா?.

❋

---

## குழந்தைகள் எதோடு வாழ்கிறார்களோ அவைகளை கற்றுக்கொள்கிறார்கள்

ஒரு குழந்தை விமர்சனத்துடன் வாழ்ந்தால், அது கண்டிக்கக் கற்றுக்கொள்கிறது.

ஒரு குழந்தை பகைமை உணர்வுடன் வாழ்ந்தால் அது சண்டைபோடக் கற்றுக்கொள்கிறது.

ஒரு குழந்தை அவமானத்துடன் வாழ்ந்தால், குற்ற உணர்வுடன் இருக்க கற்றுக்கொள்கிறது.

ஒரு குழந்தை உற்சாகத்துடன் வாழ்ந்தால், தைரியத்தைக் கற்றுக் கொள்கிறது.

ஒரு குழந்தை சரியான நிலையில் வாழ்ந்தால், நியாயத்தைக் கற்றுக் கொள்கிறது.

ஒரு குழந்தை புகழ்ச்சியுடன் வாழ்ந்தால், பாராட்டக் கற்றுக் கொள்கிறது.

ஒரு குழந்தை பாதுகாப்புடன் வாழ்ந்தால், நம்பிக்கையைப் பெற்றுக் கொள்கிறது.

ஒரு குழந்தை அங்கீகாரத்துடன் வாழ்ந்தால், தன்னை விரும்ப கற்றுக் கொள்கிறது.

ஒரு குழந்தை சம்மதத்துடனும், நட்புடனும் வாழ்ந்தால், இவ்வுலகில் அன்பைக் காட்டக் கற்றுக் கொள்கிறது.

---

# குடும்ப ஒழுக்க நெறிகள்

## *Family Values*

### *John Gipson*

**பெ**ற்றோர் பாசம் பற்றிய அவசியத்தை வலியுறுத்தும் வேளை வந்து விட்டது. பாலிய ஸ்திரீகள் "தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாயிருக்க அவர்களுக்கு முதிர் வயதுள்ள ஸ்திரீகள் போதிக்க வேண்டும் " என வேதாகமம் வலியுறுத்துகிறது (தீத்து. 2:4). அவர்களுக்கு வீடு, உணவு, உடை போன்றவைகளைக் கொடுப்பது மட்டும் போதுமானதல்ல. நாம் அவர்களிடம் மிகுந்த பாசமாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வெளிநாட்டில் ஒருவர் தன்னுடைய பிள்ளைகளை வீட்டில் வைக்க விரும்பாமல் அநாதை இல்லத்தில் வளரும்படி அனுப்பி வைத்தாராம். மிருகங்கள் கூட தன் குட்டிகளை நேசித்து, பாசத்தால் நக்குகிறது. குட்டிகளை நல்ல முறையில் உருவாக்கும்படி அவை அப்படிச் செய்கிறது. ஆனால், சில குழந்தைகள், மிருகங்கள் தங்கள் குட்டிகளிடம் காட்டும் பாசத்தைக் கூட தங்கள் பெற்றோரிடமிருந்து பெறுவதில்லை.



"*பிள்ளைகள் தங்கள் தாயையும், தகப்பனையும் கனம் பண்ண கற்றுக் கொள்ள வேண்டும்*" (யாத்திராகமம் 20:12). ஞானமுள்ள பெற்றோர்கள், தேவன் தங்களிடத்தில் கொடுத்திருக்கிற அதிகாரத்தை உணர்ந்து, குழந்தைகளை நல்வழியில் நடத்தக் கட்டுப்படுத்துவதில் சோடை போகமாட்டார்கள்.

பிள்ளைகள் கட்டுப்பாடில்லாமல் வாழ்வது நியாயமற்றது. ஏனென்றால், கடிவாளம் இல்லையென்றால் இளம் வயதினரின் நலன் பாதுகாப்பாக இருக்காது.

குழந்தைகள் எவ்விதமாக படிப்பிக்கப்படுகிறார்களோ அவ்விதமாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட சாலொமோன் ஞானி, "*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்*" என்றார். (நீதி. 22:6). பெற்றோர்கள் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டு பிள்ளைகளைச் செம்மையாக வளர்ப்பது என்பது முடியாத காரியம், அதனால் தான், " ஜோஷ் பில்லியங்ஸ் " என்பவர் இப்படிச் சொன்னார். " பிள்ளையானவனை " நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அந்த வழியிலே நீ அவ்வப் பொழுதாவது நட என்று.

ஒரு குழந்தையை இந்த உலகத்திற்கு கொண்டு வர இரண்டு பேர் தேவைப்படுகிறார்கள், அதுபோல ஒரு குழந்தையின் தேவைகளை சந்திக்க இரண்டு பேர் தேவைப்படுகிறார்கள். தாயும், தகப்பனும் சேர்ந்து பிள்ளைக்கு வீட்டிலேயே பயிற்சி கொடுக்க வேண்டும்.

பாலங்களை கட்டுவது, புத்தகங்களை எழுதுவது, அணுவைப் பிளப்பது எப்படி என்பதெல்லாம், நாம் குழந்தைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதைக் காட்டிலும் முக்கியமானதல்ல.

உங்கள் குழந்தை உங்களிடமிருந்து மிகச் சிறந்தததைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானது என்பது எப்போதும் நினைவில் இருக்கட்டும்.

## மேரிக்கு ஒரு சிறு பையன் இருந்தான்

மேரிக்கு ஒரு சிறு பையன் இருந்தான்; அவன் ஆத்துமா பனியைப் போல் வெண்மையாயிருந்தது; அவன் ஒருபோதும் வேத வகுப்புக்கு போகவில்லை. ஏனென்றால், மேரி அங்கே போகவில்லை. சிறு பிள்ளையின் மனதைப் பரவசப்படுத்தும் கிறிஸ்துவின் வார்த்தைகளை அவன் ஒருபோதும் கேட்டதேயில்லை. மற்ற பிள்ளைகள் வகுப்புக்குப் போனபோது, இந்த சிறுவன் தனித்து விடப்பட்டான். அவன் வாலிபனாக வளர்ந்தபோது, அவன் துக்கப்படும்படி ஒரு காலத்தில் பனி போல் வெண்மையாக இருந்த அந்தப் பையனுடைய ஆத்துமா கறுப்பாக மாறியது. அவனை இழந்து போனதை உணர்ந்த தாய் அவனை மறுபடியும் மீட்டமைக்க முயற்சித்தாள். ஆனால், ஒரு காலத்தில் வெண்மையாக இருந்த ஆத்துமா இப்போது அசிங்கமாக, கறுப்பாக மாறி விட்டது. மேரி மாறினாள், தன் பாவங்களை அறிக்கையிட்டாள், ஆதாரனைக்குக் கூடப் போனாள். அதன் பின்பு அவள் பிரசங்கியாரிடம், நீங்கள் செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டாள். பிரசங்கியார் முயற்சி செய்து, தோல்வியுற்று, நாம் வெகு தூரத்தில் இருக்கிறோம், நான் பல வருடங்களுக்கு முன்பாகவே உனக்கு சொல்ல முயற்சித்தேன், ஆனால், நீ செவிக்கொடுக்கவில்லை. எனவே, ஒரு காலத்தில் பனியைப் போல் வெண்மையாக இருந்த ஒரு ஆத்துமாவை நாம் இழந்துவிட்டோம். வேத வகுப்புகள் உதவி செய்திருக்கும். ஆனால், மேரி பயன்படுத்தவில்லை.

# குடும்பத்தை அழகாக அலங்கரித்தல்

பிலமோன் ராஜா

**தே**வனுடைய வார்த்தையின் மீது தீராத தாகம் கொண்டவர்களாகிய அன்பான, வாசகர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன்.

பிரியமானவர்களே!

நாம் அனைவருமே அலங்கரித்தலை விரும்பக் கூடியவர்களாக இருக்கிறோம். உலகிலேயே அலங்கரிப்பிற்கான அழகு சாதனப் பொருட்கள் விற்பனையில் முன்னனியில் உள்ள நாடுகளில் நமது இந்தியாவும் ஒன்று. வேதாகமம் புறம்பான அலங்கரிப்பைப் பற்றிக் கூறாமல் உள்ளான அலங்கரிப்பைப் பற்றிக் கூறுகிறது. அது நம்முடைய குணங்களை (அல்லது) பண்புகளை அழகாக, தேவனுக்கு உகந்தபடி அலங்கரிப்பதாகும்.

"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது". (1பேதுரு. 3:3-4).

இப்படிப்பட்ட அலங்கரிப்பே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாகவும், அழியாததாகவும் இருக்கிறது. சில வீடுகளுக்கோ, இடங்களுக்கோ செல்லப் பிடிக்கும்; சில வீடுகளுக்கோ, இடங்களுக்கோ செல்ல விருப்பமே வராது. வீட்டைப் பற்றி அல்ல வீட்டில் உள்ளவர்களைப் பற்றி பேசுகிறார்.

"சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம்". (நீதி. 21:19)

குடும்பத்தில் ஒருவரோடு ஒருவர் எல்லா செயல்களுடன் ஒத்துப் போக முடிவதில்லை. ஒருவரைப் பற்றி ஒருவன் உள்ளத்துக்குள் கசந்து உதட்டில் முறுமுறுத்துக் கொண்டுள்ளோம். அநேக நேரங்களில் நாம் செய்வது நமக்கே (பாராட்டத்தக்கதாக) விரும்பத்தக்கதாக இருப்பதில்லை. ஆனால் தேவன் ஒரு தூய்மையான நோக்கத்திற்காக குடும்பத்தை உண்டாக்கினார். நாம் நம்மை (உள்ளான மனுஷனை) அலங்கரித்துக் கொள்வதை அவர் விரும்புகிறார். (சங். 96:9) நாம் எப்படி நம்முடைய குடும்பத்தை அலங்கரிக்க வேண்டும் என்பதற்கு தேவனே தனது ஆவிக்குரிய குடும்பத்தை அலங்கரித்து முன் மாதிரி காட்டியுள்ளார். அவைகளை நாம் தெரிந்து கொண்டு, கடைபிடிக்கும் பொழுது நம் குடும்பம் தேவன் விரும்புகின்ற குடும்பமாக இருக்கும்.

### I அன்பினால் அலங்கரிக்க வேண்டும்

தேவன் தன்னுடைய குடும்பத்தை அன்பினாலே அலங்கரித்துள்ளார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". (யோவா 3:16).

நாமும் நமது குடும்பத்தை அன்பினாலே அலங்கரிக்க வேண்டும். " புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து.... " (எபே. 5:25).

இந்த அன்பு சகலத்தையும் தாங்கி, சகித்து, நம்பி விசுவாசிக்கும்; சத்தியத்திலே மகிழ்ந்து, இறுமாப்பாயிராமல், தற்புகழ்ச்சியை விரும்பாமல் இருக்கும் எவ்வளவேனும் சுயநலமற்றதாகும். (1 கொரி. 13:4-8).

### II தியாகத்தினால் அலங்கரிக்க வேண்டும்

தேவன் தன்னுடைய குடும்பத்தை அலங்கரிக்கத் தன்னுடைய ஒரே பேறான குமாரனையே பலியாக கொடுத்தார். கிறிஸ்துவும் தன்னைத் தானே பலியாக்கினார்.

"கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் " (எபே. 5:2).

நாமும் தியாகத்தினாலே நமது குடும்பங்களை அலங்கரிக்க வேண்டும். போட்டி போட்டுக் கொண்டு தியாகம் செய்ய வேண்டும். மாமியார் மீது மிகுந்த அக்கறைக் கொண்டு, அதனால் தன் எதிர்கால வாழ்வைப் பற்றிக் கவலைப்படாத ரூத், தன் மருமகளின் சந்தோஷமே பெரிது என்று வாழ்ந்த நகோமி போல நாமும் தியாகம் செய்ய வேண்டும். (ரூத். 1:15-17).

### III விட்டுக்கொடுத்தலினால் அலங்கரிக்க வேண்டும்

விட்டுக்கொடுத்தல் மிகவும் அவசியமான ஒன்றாகும். குடும்பங்களில் இது அத்தியாவசிய குணமாகும். விட்டுக் கொடுக்காததால் (பிடிவாதத்தால்) எவ்வளவோ குடும்பங்கள் இன்று பிரிந்து காணப்படுகின்றன. இயேசு பரலோகத்தை விட்டு விட்டு பூமியிலே மனிதனாகப் பிறந்தார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி; அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்". (பிலி. 2:5-7).

ஆபிரகாமின் விட்டுக் கொடுத்தல் பற்றி நாம் படித்திருக்கிறோம் அல்லவா! அவன் வாக்குத்தத்தமான இடத்தைக்கூட

விட்டுக்கொடுக்க துணிந்தான் அல்லவா! "ஆபிரகாம் லோத்தை நோக்கி; எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்ப ருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல் லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடது புறம் போனால், நான் வலதுபுறம் போகி றேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான் ". (ஆதி. 13:8,9) விட்டுக் கொடுத்தல் குடும்பங்களைக் கட்டும்.

### IV ஊக்க மூட்டுதலினால் அலங்கரிக்க வேண்டும்

இது மிகவும் அவசியமான தாகும். பாராட்டுங்கள்! துவளும் போது தோள் கொடுங்கள்! அழும் போது தேற்றுங்கள்! ஆதரவாக இருங்கள்! இயேசு தங்களை விட்டுப் பிரிந்து போகிறதை கேட்ட அப்போஸ்தலர்கள் மனம் கலங்கி னார்கள். இயேசு அவர்களை ஊக்க மூட்டினார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத் தில் விசுவாசமாயிருங்கள். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய் வேன் ". (யோவா. 14:1,16)

எல்க்கானா தனது மனைவி யாகிய அன்னாளுக்கு ஊக்கமளித் தார். ரூத் " தன் இரண்டு மருமக்க ளோடுங்கூடத்தானிருந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டாள். யூதா தேசத்திற்குத் திரும்பிபோக, அவர்கள் வழி நடக்கையில், நகோமி தன் இரண்டு மருமக்க ளையும் நோக்கி; நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப் போங்கள்; மரித்துப் போனவர் களுக்கும் எனக்கும் நீங்கள் தயை செய்தது போல, கர்த்தர் உங்க ளுக்கும் தயை செய்வாராக ". (ரூத் 1:7,8). சந்தோஷத்தில் கைதட்டும் பத்துவிரல்களை விட துயரத்தில் கண்ணீரைத்துடைக்கும் ஒரு விரல் வலிமையானது.

### V நேர்மையினால் அலங்கரிக்க வேண்டும்

நேர்மை அல்லது உண்மை யினால் அலங்கரிக்க வேண்டும். நேர்மையாயிருப்பது குடும்பத்திற் குள்ளே நம்பிக்கையை வளர்க்கும். வெளிப்படையாக மனம் விட்டுப் பேசுங்கள். செய்ததை, செய்யப் போவதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இயேசு தான் செய்யப் போகிற தை மனம் விட்டு வெளிப்படை யாகப் பேசினார். "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக் காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கேள் விப்பட்ட எல்லாவற்றையும் உங்க ளுக்கு அறிவித்தேன்" (யோவா. 15:15).

ஒரு மகனாக, மகளாக உங்கள் பெற்றோரிடத்திலும், ஒரு கணவனாக உங்கள் மனைவியி டத்திலும், ஒரு மனைவியாக உங் கள் கணவனிடத்திலும், ஒரு

பெற்றோராக உங்கள் பிள்ளைகளிடத்திலும் நேர்மையாயிருப்பதை தேவன் விரும்புகிறார். எல்லாவற்றிற்கும் ஒரு விசுவாசியாக கிறிஸ்துவினிடத்திலும் நாம் நேர்மையாயிருக்க வேண்டும். அவருடைய நேரத்தை, கனத்தை, ஸ்தானத்தை அவர் மற்ற யாருக்கும் நாம் பகிர்வதை விரும்பாதவர்.

### VI ஒற்றுமையினால் அலங்கரிக்க வேண்டும்

" இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? " (ஆமோஸ் 3:3)

மன ஒற்றுமை குடும்பத்தை சீராக இயங்க வைக்கும். அனனியா, சப்பிராளும் தீமை செய்ய மனம் ஒன்றுபட்டார்கள். (அப். 5:9), ஆக்கில்லா, பிரிஸ்கில்லா நன்மை செய்ய ஒரு மனப்பட்டார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள் ". (ரோம. 16:3-4).

குடும்பத்திலோ, சபையிலோ எடுக்கப்படும் நல்ல முடிவுகளுக்கு எதிராக தனியாக கறுப்புக் கொடி பிடிக்க வேண்டாம். தேவனுக்கு உகந்ததைச் செய்ய நமது மனம் எப்பொழுதும் ஒன்றாக இருக்கட்டும். "சமாதானக்கட்டில் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள்." (எபே. 4:3).

### VII தேவனை தொழுது கொள்வதினால் அலங்கரிக்க வேண்டும்

அனுதினமும் தேவனிடத்தில் குடும்பமாக ஜெபியுங்கள்; அவரைத் துதியுங்கள்; அவருக்கு ஊழியம் (பணிவிடை) செய்யுங்கள்; அவரை ஆராதியுங்கள்! (யோபு. 1:15).

யோசுவாவும் தனது குடும்பத்தை கர்த்தரைத் தொழுது கொள்வதினாலே அலங்கரித்தான். "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான் ". (யோசுவா 24:15).

இந்த அலங்கரிப்பு எல்லாவற்றையும் விட மேலானதாகும். வேத வசனங்களினாலே தேவன் விரும்புகிறபடி நமது குடும்பங்களை நாம அலங்கரிப்போம். எல்லாம் வல்ல தேவன் அதற்கு அருள்புரிவாராக! ஆமென். ❋

கிறிஸ்தவ வீடு

# ஒரு குழந்தையின் ஆத்துமா

## *The Soul of a Child*

*Author Unknown*

ஒரு குழந்தையின் ஆத்துமா
தேவனுடைய தோட்டத்தில் வளரும் அழகிய மலராகும்.
அது பலவீனத்திலிருந்து அறிவுக்கும், அதிகாரத்திற்கும் வளர்ந்து
படர்கிறது மண்ணிலிருந்தும், புழுதியிலிருந்தும் வானத்திற்கு ஏறுகிறது.

அது நன்கு பராமரிக்கப்பட்டு அழகோடும், இனிமையோடும் வளர்கிறது.
அதன் மென்மையற்ற, கரடுமுரடான பகுதிகளெல்லாம் நீக்கிப் போடப்படுகிறது;
அது மென்மையான, ஆச்சரியமும், அழகுமுள்ள மலராகும்.
அது குழந்தையின் இனிமையான ஆத்துமாவாகும்.

தோட்டக்காரனே, மென்மையாக நடந்துகொள், அதற்கு அதன் பங்கைக் கொடு
அதற்கு ஈரப்பதத்தையும், உஷ்ணத்தையும், வெளிச்சத்தையும் கொடு;
பனியிலிருந்தும், நோயிலிருந்தும் அதைப் பாதுகாக்க ஜாக்கிரதையான
கவனிப்பில் எந்தக் குறையும் வைக்காதே.



மலர்கள் தன் இதழ்களை விரிக்கும்
போது, அந்த நாள் மகிழ்ச்சியாயிருக்கும்.
அது தேவதை, புன்னகை
பூத்தது போலிருக்கும்

ஒரு குழந்தையின்
உணர்வுள்ள ஆத்துமா
சொல்லமுடியாத அழகையும்,
இனிமையையும் பிரதிபலிக்கிறது.

மலரின் அரும்பில் வசந்தகால
வாக்குத்தத்தம் இருக்கிறது;
சிறிய நீலவண்ண முட்டையில்
பறவைகள் பாடும்;

விதையின் ஆன்மாவில்
புல்வெளியின் நம்பிக்கை இருக்கும்;
குழந்தையின் ஆத்துமாவில் தேவனு
டைய ராஜ்யம் இருக்கிறது. ❋

செயலில் கிறிஸ்தவம்

# கிறிஸ்து சொன்னது

# What Christ Said

நான் வயல்வெளியில் நடக்கிறேன் என்று சொன்னேன்
அவர் சொன்னார், "இல்லை, பட்டணத்தில் நட என்று"
"அங்கே மலர்கள் இல்லை" என்று சொன்னேன்
அவர் சொன்னார், "மலர்கள் இல்லை, ஆனால் கிரீடம் இருக்கிறது என்று"

"வானம் கருவண்ணமாக இருக்கிறது என்று சொன்னேன்
அங்கே சத்தமும், இரைச்சலும் அல்லாமல் வேறொன்றுமில்லை"
ஆனால், அவர் அழுது என்னை திருப்பி அனுப்பி
"அங்கே இன்னும் பாவம் இருக்கிறது" என்றார்.

"காற்று அடர்த்தியாக இருக்கிறது
சூரியனை மறைத்துக் கொண்டது என்றேன்".
அவர் சொன்னார், "ஆத்துமாக்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறது
இருளில் உள்ள ஆத்துமாக்கள் கவனிப்பாரற்று இருக்கிறது என்று".

"நான் வெளிச்சத்தை இழந்து போவேன் என்றேன்
என் நண்பர்கள் என்னை இழக்க நேரிடும்" என்றார்கள்
அவர் சொன்னார் "இன்று இரவே நீ தெரிந்து கொள்
இல்லையானால் நான் உன்னை இழக்க நேரிடும்" என்று.

எனக்கு நேரம் தரப்படவேண்டுமென்று மன்றாடினேன்,
அவர் சொன்னார், "இது தீர்மானிக்க கடினமா? என்று".
"உன் வழிகாட்டியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது பரலோகில்
உனக்கு கடினமாயிராது"! என்றார்.

நான் வயல்வெளிகளில் என் பார்வையை வைத்தேன்
பட்டணத்தை நோக்கி என் முகத்தை வைத்தேன்;
அவர் சொன்னார் "என் பிள்ளையே, பலன் கொடுப்பாயா? என்று
கிரீடத்திற்காக மலர்களை விட்டுக் கொடுப்பாயோ?

அதன்பின்பு அவருடைய கரங்களுக்குள் என் கரங்கள் சென்றது.
என் இருதயத்திற்குள் அவர் வந்தார்,
நான் பார்க்கப் பயந்த பாதைகளில்
தெய்வீக ஒளியில் நடந்தேன்"

*-George McDonald*

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# சுவிசேஷ ஜோடி

## A Missionary-Team Couple

***Randal Matheny***

"ஒற்றுமைக்காக வேற்றுமை" என்கிற கொள்கை உலகத்திலும், குடும்பத்திலும், சபையிலும் சமமாக வேலை செய்கிறது. "வேற்றுமை ஆனால், ஒற்றுமை" அல்லது "வேற்றுமையில் ஒற்றுமை" போன்ற சொற்றொடர்கள் இந்த கொள்கையைப் புரிந்து கொள்ளாததையே நமக்குக் காட்டுகின்றன. ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் தான் தேவன் வேற்றுமையை உண்டாக்கினார். நம்மெல்லாருக்கும் தேவையானவைகளை நாம் பெற்றுக்கொள்ளும்படியாக ஒன்றையொன்று மேம்படுத்த ஒவ்வொருவருக்கும் தேவன் வரங்களைத் தந்திருக்கிறார்.

இந்த உலகம் ஒற்றுமை என்கிற எண்ணத்தையே மறந்து விட்டபடியால், வேற்றுமையை வலியுறுத்தி வருகிறது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் மகளிர் இயக்கங்கள் பெண்ணுரிமைகளையும், சமத்துவத்தையும் மிகைப்படுத்தி வருகின்றன. இது, ஒடுக்கப்பட்டோர் ஒடுக்குவோர் மீது எடுக்கும் நடவடிக்கையாகும்.

இந்தச் சூழ்நிலையில், இங்கே ஒரு தம்பதியினரைப் பார்த்து நாம் உற்சாகமடைகிறோம். அவர்கள் வீட்டில் அதிகாரத்திற்காக சண்டையிடாமல், தேவனுடைய ராஜ்யத்தின் நலனிற்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் தம்பதியினர் ஒருங்கிணைந்து கர்த்தருக்காக வேலை செய்தபடியால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு, தொடர்ந்து கர்த்தருடைய வேலையைச் செய்யும்படியாக அனுமதிக்கப்பட்டார்கள்.

### கொரிந்துவில் பவுலை ஏற்றுக் கொள்ளுதல்

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வரும்போது இந்தத் தம்பதியினரை நாம் முதன் முதலாகப் பார்க்கிறோம் (அப்போஸ்தலர் 18:1-2) அவர்கள் அரச ஆணையின்படியே மற்ற யூதர்களோடே ரோமாபுரியிலிருந்து துரத்திவிடப்பட்டார்கள், அவர்கள் கொரிந்து பட்டணத்திற்கு வந்து அங்கே கூடாரத் தொழில் செய்து வந்தார்கள். பவுலும் அதே தொழிலைச் செய்து அவர்களோடு தங்கினார். அப்போஸ்தலனாகிய பவுல் உங்கள் வீட்டில் தங்குவதாக கற்பனை செய்து பாருங்கள்! அங்கே தங்கியிருந்த போது, பவுல் தரிசனங்களைக் கண்டார் (அப். 18:9,10).

ஆக்கில்லாவும், பிரிஸ்கில் லாளும் பவுலின் வேலையில் பங்குபெற்று ஒன்றரை வருடங் களுக்குப் பிறகு, பவுல் சீரியா தேசத்திற்குச் சென்றபோது அவர் களும் கூடச் சென்றார்கள் (வசனம் 18,19). எபேசு பட்டணத்துக்கு வந்த போது, அவர்களை விட்டு விட்டு பவுல் வேறு இடத்துக்கு செல்ல வேண்டியதாயிருந்தது. எபேசு விலே அவர்களுக்கு கர்த்தருக் கென்று செய்யும்படியாக அநேக வேலைகள் இருந்தன.

பிரசங்கியாரான அப்பல்லோ எபேசுவுக்கு வந்த போது, அவனுக்கு அதுகாறும் தெரியாம லிருந்த அவசியமான வேதாகம உண்மைகளை ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவனுக்கு அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல "*ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லா ளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்* " (அப். 18:26). அவர்கள் இருவரும் பவுலோடு இருந்து தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இப்போது இவர்களால் மற்றவர்க ளுக்குப் போதிக்க முடியும். (1தீமோத்தேயு 2:2ல், பவுல் தீமோத் தேயுவிற்கு என்ன சிபாரிசு செய்தா ரோ அதைத் தானும் பயன்படுத்தி னார்.) பின்பு அப்பல்லோ அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றி ருக்கையில், " *சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி ஆக்கில்லா வும், பிரிஸ்கில்லாளும் அவர்க ளுக்கு எழுதினார்கள். அப்பல்லோ அங்கே வந்த பின்பு கிருபையினா லே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்* " (அப். 18: 27).

பின்பு பவுல் எபேசுவுக்குத் திரும்புகிறார். அங்கேயிருந்து அவர் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதினார். ஆக்கில்லாவும், பிரிஸ் கில்லாளும் கொரிந்து சபைக்கு வாழ்த்துதல்களை அனுப்பினார் கள்: " ஆக்கில்லாவும், பிரிஸ்கில் லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார் கள் " (1 கொரி. 16:19). அவர்கள் அநேக சீஷர்களுக்கு கூட்டங் களை நடத்த தங்கள் வீடுகளை திறந்து வைத்தார்கள். அவர்களு டைய உபசரிப்பும், ஆவிக்குரிய வேலைக்காக கொடுக்கும் ஆசை யும் அநேக வழிகளில் சகோதரர் களுக்குத் தங்களை அர்ப்பணிக்க காரணங்களாக அமைந்தன.

## ரோமாபுரிக்குத் திரும்புதல்

பவுல் ரோமாபுரியாருக்கு கடிதங்களை எழுதினபோது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ரோமாபுரியில் இருந்தார்கள். அவர்களுக்குப் பவுல் இவ்வித மாக வாழ்த்துதல் அனுப்புகிறார். " *கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ் கில்லாவையும், ஆக்கில்லாவை யும் வாழ்த்துங்கள், அவர்கள் என்*

*பிராணுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்"* (ரோமர் 16:3,4).

இவ்விருவரும் தேவனுடைய ஊழியமாகிய சுவிசேஷத்தைப் பல தேசங்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் தங்கள் உயிரைக் கூடப் பெரிதாக நினைக்கவில்லை (அநேகமாக அப்போஸ்தலர் 18 ஆம் அதிகாரத்தில் கொரிந்துவில் இருந்திருக்கலாம்). தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் வகித்த முக்கியப் பங்கை பவுல் நன்றியோடு அங்கீகரிக்கிறார்.

இங்கே இந்த தம்பதியினர் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம், அவர்கள் ரோமாபுரியிலும் செய்து வருகின்ற முக்கிய வேலையின் மதிப்பை அங்கீகரிக்கிறார். இவ்விருவரும் ஆவிக்குரிய நோக்கங்களுக்காக ரோமாபுரிக்குத் திரும்பும் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக ரோமாபுரியை விட்டுச் சென்றார்களா அல்லது கொரிந்துவிலே பவுலால் மனமாற்றம் செய்யப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனாலும், ரோமர்களுக்கு முதல் முறையாக சுவிசேஷத்தை அறிவிக்கவோ, அல்லது ராயனுடைய கட்டளையால் தடைபட்டிருந்த தங்களால் தொடங்கப்பட்ட வேலையை முடிக்கவோ ரோமாபுரிக்குத் திரும்பியிருக்கலாம்.

**மறுபடியும் எபேசுவில்**

பவுல் தன் ஊழியத்தின் கடைசியில், எபேசுவில் ஊழியம் செய்து கொண்டிருந்த தீமோத்தேயுவிற்கு, இரண்டாவது நிருபத்தை எழுதுகிறார். மறுபடியும், அந்த பட்டணத்தில் ஆக்கில்லாவையும், பிரிஸ்கில்லாவையும் நாம் காண்கிறோம். "பிரிஸ்கில்லாளுக்கும், ஆகில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு" (தீமோத்தேயு 4:19). ஒருவேளை, பவுல் அவர்களை தீமோத்தேயுவுடன் இணைந்து வேலை செய்யும்படி எபேசுவுக்கு அனுப்பியிருக்கலாம். இருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்துவுக்கு சேவை செய்வதற்காக ஒருமுறை அல்ல, பல முறை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள், தங்களோடு இணைந்து ஊழியம் செய்கின்ற மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து அந்த சாம்ராஜ்யம் முழுவதும் சுறுசுறுப்பான வேலையாட்களைக் கொண்ட ஓர் ஆவிக்குரிய கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளுடைய பெயர்கள் 6 முறை மேற்கோள்காட்டப்பட்டிருக்கிறது. அதில், பிரிஸ்கில்லாளுடைய பெயர் 4 முறை தன் கணவனுடைய பெயருக்கு முன்பாக மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. வேத அறிஞர்கள் பிரிஸ்கில்லா, ஆக்கில்லாவை விட சுறுசுறுப்புடன் செயல்படுகிற கிறிஸ்தவளாக இருந்திருக்கலாம் என யூகிக்கிறார்கள்.

இன்னும் சிலர், ஆக்கில்லாவை விட பிரிஸ்கில்லா உயர் வகுப்பைச் சேர்ந்த பிரஜையாக இருந்திருக்க லாம் என்றும், ஒரு சிலர் பிரிஸ் கில்லா சபையில் எல்லோராலும் அறியப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

பெயர் வரிசை அடிப்படையி லான யூகம், ஒன்றிற்கு மற்றொன் றை விட முக்கியத்துவம் கொடுக்க நமக்குக் காரணமாக அமைகிறது. இருப்பினும், இவர்கள் தங்கள் நோக்கத்தில் ஒற்றுமையாயிருந்து, ராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்காகக் கடுமையாகப் பாடுபட்டார்கள் என்பதை இவர்களது வாழ்க்கை யில் காணமுடிகிறது. அவர்கள் கிறிஸ்துவுக்காகவும், சகோதரரு டைய தேவைகளுக்காகவும் தங்க ளையே கொடுக்க விருப்பமுள்ள வர்களாயிருந்தார்கள்.

**அவர்களைப் போன்றவர்களைப் பெருக்கி னார்கள்!**

கர்த்தருக்கென்றும், கர்த்த ருடைய வேலைக்கென்றும் தங்க ளை முழுமையாக அர்ப்பணித்த இந்த தம்பதியினர் எவ்வளவு ஆச்சரியமானவர்கள்! ராஜ்யத்திற் காக அவர்கள் எவ்வளவு செய்திருக் கிறார்கள்! அவர்கள் எவ்வளவு ஊழியம் செய்திருக்கிறார்கள்! புதிய ஊழியப் பணிகளைத் தொடங்கினார்கள், உபசரித்திருக் கிறார்கள், ஆவிக்குரிய நோக்கங் களுக்காக பலமுறை இடம் பெயர்ந்திருக்கிறார்கள், கடினமான வேளைகளைக் கடந்து வந்த அவர்களை நாம் பின்பற்ற எனக் காட்டியிருக்கிறார்கள், அனுபவ மிக்கவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறார்கள், குறைவான அனுபவமிக்கவர்களுக்கு போதித் திருக்கிறார்கள். அவர்களை திருத் தியிருக்கிறார்கள், சுவிசேஷப் பயணங்களை உற்சாகப்படுத்தி யிருக்கிறார்கள். இவைகள் எல்லா வற்றையும் விட, ஆவிக்குரிய வேலையை நிறைவேற்ற பூமிக் குரிய வேலையை செய்திருக்கி றார்கள்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு பணியை எடுத்துச் செய்வதற்கு, இவர்களைப் போன்ற பல தம்பதி யினரின் வாழ்க்கையில் கர்த்தர் கிரியைச் செய்வாராக. உரிமை கள் பற்றி தற்கால விமர்சகர்கள் சொல்வதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நம் கீழ்ப்படிதலுக் கும், நம் துதிக்கும், நம் நன்றிக் கும் கர்த்தர் பாத்திரராயிருக்கிற படியால் நாம் கணவன் மனைவி யாக முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், அர்ப்பணித்து ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போன்று ஊழியத்தில் ஒருமைப்பட்டு செயல் படுவோமாக! ❋

> " அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங் கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந் தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள் " (மத்தேயு 25:34,35).

# யோபுவின் சிறந்த முன்மாதிரி

## The Emample of Job

*Jack W.Carter*

**யோ**பு என்னும் பேர் கொண்ட பழைய ஏற்பாட்டு பக்தனைப் பற்றி நாம் நினைக்கும் போது, வழக்கமாக பொறுமை பற்றி நினைப் போம். இந்த முன் உதாரணம் தான் அவரிடம் இருந்து நமக்கிருக்கிறது என்று பெரும்பாலும் எண்ணுகிறோம்.

ஆனால், யோபு இன்னும் அநேக விதங்களில் தனித்துவம் வாய்ந்தவராக, தனிச்சிறப்பு பெற்றவராக இருக்கிறார். தேவனிடத்தில் அவர் வைத்திருந்த மாபெரும் அன்பும், விசுவாசமும் நாமெல்லாரும் அவரைப் பின்பற்ற வைக்கிறது. தன் பிள்ளைகள் மீது அவருக்கிருந்த பொறுப்பு அவருடைய குணாதிசயத்தின் ஆழத்தை அடையாளப்படுத்து கிறது. நம்மில் அநேகர் இவை இல்லாமல் கூட திருப்தி பட்டுக் கொள் கிறோம். இல்லாதவர்களுக்கு அவருடைய ஈகை, சோதனையான வேளை களில் கூட தேவனை இகழ மறுத்தல்; இன்னும் அதிகமானவைகள் அவரு டைய அசாதாரண குணாதிசயங்களைப் பற்றிப் பேசுகின்றன.

என்னுடைய தினசரி வேதவாசிப்பு கையேட்டில் யோபு புத்தகத்தில் என் கவனத்தை ஈர்த்த அநேக வசனங்களைப் பட்டியலிட்டிருக்கிறேன். ஒவ்வொரு சம்பவத்திலும் பின்பற்றும்படி ஒரு பண்பை அவரிடத்தில் காண்கிறேன். "*அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்கு வதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகா ரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்*" (யோபு 23:12).

" *என் கண்களோடே உடன்படிக்கைப் பண்ணின நான் ஒரு கன்னி கையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?* " (யோபு 31:1).

இப்புத்தகம் நிறைவுபெறுவதற்கு சற்றுமுன்பு, தேவன் யோபுவை கடுமையாக கடிந்து கொள்கிறார். யோபு தான் உபத்திரவங்களை சகித்துக் கொள்வது சம்மந்தமாக தேவனிடம் கேள்வி கேட்பதில் சற்று எல்லையைக் கடந்து விட்டார். ஆனால், தேவன் கடிந்து கொண்ட பிறகு, கோபப்படு வதற்குப் பதிலாக, யோபு இவ்விதமாகச் சொன்னார்.

"ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும், சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" (யோபு 42:6)

தேவன் எல்லாவற்றையும் சரியாகச் செய்தார், யோபு தான் தவறு செய்தார். இதை உணர்ந்து ஒத்துக் கொள்வதற்கு யோபுவுக்கு தேவனைப் பற்றிய ஆழமான அறிவு இருந்திருக்கிறது. நாம் பெரும்பாலும் இப்படிப்பட்ட குணாதிசயங்களை பிறரிடம் காண்பதில்லை.

யோபுவிடமிருந்து மிகப்பெரிய அளவில் நாம் காரியங்களை கற்றுக் கொள்ள முடியும். யோபுவைப் பற்றி நாம் நினைக்கும் போது பொறுமையை மட்டும் நினைக்க வேண்டாம். விசுவாசத்தில் வல்லவர்களான ஏனையோரைப் போல், யோபுவின் வாழ்க்கை, நாங்களும் விசுவாசத்தில் நடக்கிறோம் என்று சொல்லுகிற நம்மில் அநேகரைக் காட்டிலும் மிக அதிகமான பக்திப் பண்புகளைக் கொண்டுள்ளது. ❊

# பாவம் என்றால் என்ன?
# What is Sin?

இந்நாட்களில், "பாவம்" மலையேறிப் போன ஒன்றாக மாறி விட்டது! பாவம் பற்றிப் பேசுவது அரிதாகி விட்டது. அவர்களுடைய தவறுகளெல்லாம் மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்டுமாயிற்று என்று எண்ணுகிறார்கள்.

ஆனால், எல்லோரும் நினைப்பது போல் பாவம் மறைந்து போகவில்லை. உண்மையில், பாவத்திற்கு தாராள அனுமதி தந்து, எந்தப் பாவத்தையும் ஏற்று சகித்துக் கொள்ளும் உலக மக்களின் போக்கால், பாவம் அபரித வளர்ச்சி பெற்று, ஒரு புற்று நோயைப் போல் மனித இருதயத்தை அரித்து, அழித்துக் கொண்டுள்ளது. ஆனால், ஆவிக்குரிய நிலையில் நாம் வாழ வேண்டுமானால், ஒரு புற்றுநோய் அகற்றப்படுவது போல பாவம் அகற்றப்பட வேண்டும்.

பாவம் என்றால் என்ன? நியாயப் பிரமாணத்தை மீறுவதே பாவம் (1 யோவான் 3:4). குடிமக்கள் அரசாங்க சட்டத்தை மீறுவது மட்டும் பாவமல்ல (ரோமர் 13:1,2) பாவம் என்பது தேவனுடைய ஒழுக்க ரீதியான, ஆவிக்குரிய பிரமாணங்களை மீறுவதாகும். மனித இனத்தின் ஆரம்பத்திலிருந்தே இந்த ஒழுக்க ரீதியிலான மற்றும் ஆவிக்குரிய பிரமாணங்கள் மனிதன் கீழ்ப்படியத்தக்கவர்களாய் இருந்து வருகின்றன.

தேவன் பொய், களவு, சோம்பேறித் தனம், விபச்சாரம், ஒரினச் சேர்க்கை, பாலியல் சம்மந்தமான குற்றங்கள், பேராசை, துஷ்பிரயோகம் மற்றும் கொலை போன்றவைகளை பாவம் என்றழைக்கிறார், "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்று சொல்கிறார்" (வெளி. 21:8).

# யூதாஸ்
# Judas

***Bill Dillon***



மரித்தவர்களும், பிறக்காமல் இருப்பவர்களும் மாத்திரமே தவறு செய்வது இல்லை. சில தவறுகள் சிறிய வைகளாயிருக்கிறது. அவை களை எளிதில் சரிசெய்து கொள்ளலாம். மற்றவைகள் பெரிய தவறுகளாகவும் வாழ் நாள் முழுவதும் அல்லது நித்தியம் முழுவதும் விளைவு களை சுமந்து செல்லக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. ஒரு மனிதன் செய்யும் தவறுகளில் மிகவும் மோசமானது கிறிஸ்துவை நிராகரிப்பது தான். யூதாஸ் காரியோத் இந்தத் தவறை செய்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான்.

## யூதாஸின் தொடக்கம்

யூதாஸ் தன் வாழ்க்கையை நன்றாகத் தான் தொடங்கியிருக்கிறான். அவன் கர்த்தருக்கு மிக நெருக்கமானவனாகத் தான் இருந்திருக்கிறான். அப்போஸ்தலக் குழுவில் பொருளாளராக இவன் தான் இருந்தான். இவன் கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்டவன்; அவனுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன ; சுவிசேஷ வரலாற்றில் குறிப்பிடத்தக்க, முக்கியமான நிகழ்வுகளை நேரில் பார்த்திருக்கிறான், ஆனால், யூதாஸ் தனக்குள் பிசாசு பிரவேசிக்க அனுமதித்தான். அங்கே இருள்சூழ்ந்த இராத்திரி வேளையில் தேவ குமாரனை காட்டிக் கொடுத்தான் (யோவான் 13:26-30).

## யூதாஸின் குணம்

யோவான் 12 ஆம் அதிகாரம் யூதாஸின் குணங்கள் சிலவற்றை நமக்குச் சொல்கிறது. "*அவன் திருடனானபடியினாலும் பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனாக*

*இருந்தான்*" (யோவான் 12:6). யூதாஸ் உயர்ந்த நோக்கம் உடையவனாக இருந்தான் என்று வேத வாக்கியங்களில் எதுவுமே சொல்லப்படவில்லை. அவன் பொருளாசையும், பேராசையும் உடையவனாக இருந்திருக் கிறான். "பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்று பவுல் எழுதினார் (I தீமோத்தேயு 6:10). தவறான வழியில் ஆதாயம் தேடும் ஆசை அவன் மனதில் இருந்திருக்கிறது. யூதாஸ் மனித இனம் பெற்றி ருந்த மிகச் சிறந்த நண்பரை காட்டிக் கொடுத்து விட்டான்.

**யூதாஸின் விலை**

யூதாஸ் கர்த்தரை முப்பது வெள்ளிக் காசுக்காக விற்றுப்போட்டான், ஆனால், இது அவனுடைய தவறுக்கான உண்மையான விலை அல்ல. விற்றப் பணத்தின் மூலமாக அவன் எந்த நன்மையையும் பெறவில்லை, இந்த உலகத்திலோ, வரும் உலகத்திலோ சந்தோஷப்படும்படி ஒரு நிமிடம் கூட அவனுக்கு கொடுக்கப்படவில்லை. தன் மாபெரும் குற்றத் திற்காக அவன் தற்கொலையைத் தெரிந்து கொண்டான் (அப். 1:17,18). இவன் " பரலோகத்தின் வாசலை முத்தம் செய்து விட்டு, நரகம் சென்றான் " என்று விவரிக்கப்படுகிறான்.


இன்றும் மனிதர்கள் கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். யூதாஸ் முத்தத்தினால் காட்டிக் கொடுத்தான்; நவநாகரீகக் கொள்கைகள் நம் ஆண்டவரைப் பற்றி நன்றாகப் பேசுவது போல் பேசி அதைத்தான் நிறைவேற்றுகிறார்கள். அவிசுவாசிகள், " இயேசு ஒரு நல்ல போதகர் " அல்லது " ஒரு நல்ல மனிதர் " என்று சொல்லி விட்டு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை அங்கீகரிக்காதபோது, அவர்களும் தேவனுடைய குமாரனைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

நாம் அநீதியாக வாழும் போது, அவரை நாம் காட்டிக் கொடுக்கி றோம். அவருடைய வார்த்தையின் ஆலோசனையை நாம் மறுக்கும் போது அவரைக் காட்டிக் கொடுக்கிறோம். நாம் வாழ்க்கையில் வழிதப்பிப் போனால் அவரைக் காட்டிக் கொடுக்கிறோம்.

இன்றைக்கு அநேகர், தாங்கள் தேவனுக்கு விரோதமாகச் செய்து கொண்டிருக்கிற தவறுகளைத் திருத்திக் கொள்ள, உலகத்திலுள்ள செல்வங்களையெல்லாம் ஈடாகத் தருகிறேன் என்று சொன்னாலும், அது நடக்காது. ஏனெனில், அப்பொழுது காலம் கடந்து போயிருக்கும்.

ஆகையால் பாவியே, சுவிசேஷத்திற்கு இப்பொழுதே கீழ்ப்படிய மாட்டாயா? (மாற்கு 16:16)

❋



# மத்தேயு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன்

## A Man Named Matthew

*Leon Cole*

**வே**தாகமத்தைப் படிக்க மிக சுவாரஸ்யமான வழி அதன் கதாப்பாத்திரங்களைப் படிப்பதாகும். அடிக்கடி படிக்கப்படாத சில கதாப்பாத்திரங்கள் கூட சில வேளைகளில் மிக முக்கியமான பாடங்களைத் தருகிறது. அப்படிப் பட்ட மனிதர்களில் ஒருவனாகத் தான், ஆயத்துறையில் வரி வசூலித்துக் கொண்டிருக்கையில் இயேசுவால் எனக்குப் பின் சென்று வா என்று சொல்லப்பட்டவன் (மத்தேயு 9:9) அந்த மனிதனுடைய பெயர் மத்தேயு என்பதாகும்.

மத்தேயு லேவி என்றும் அழைக்கப்படுகிறான் (மாற்கு 2:14; லூக்கா 5:27) இவர் இயேசுவின் ஒரு சீடர் என்று அநேகரால் எண்ணப் பட்டிருக்கமாட்டார். இவர் ஓர் ஆயக்காரனாக இருந்தார். ரோம அரசாங்கத்திற்கு வரி வசூல் செய்கிறவராக இருந்தார். அவருடைய நாட்டு மக்கள் அவரை துரோகி என்று நினைத்தார்கள். யூதமதப் பிரிவுகளின்படி ஆயக்காரர்கள் பேராசையுடையவர்களாகவும், ஊழல் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ரோம அரசாங்கத்தின் வேலையாட்களாக இருந்தபடியால் தங்கள் எஜமான்களுக்குக் கொடுப்பதற்கும், தங்களுக்கென்று வைத்துக் கொள்வதற்கும் ஜனங்களிடத்தில் பணத்தை வற்புறுத்தி வாங்கினார்கள்.

அந்நாட்களில் இந்த மனிதன் நண்பர்கள் இல்லாதவனாகவும், சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டவனாகவும் இருந்திருக் கிறான். இவனுக்கு வரி வசூல் செய் கிறவர்கள் மட்டும் நண்பர்களாக இருந்திருக்கிறார்கள். இவன் மற்ற வர்களைப் போல ஜெப ஆலயத் தில் தொழுது கொள்ள தடை செய் யப்பட்டிருந்தான். லூக்கா. 18:13ஐ ஒருவர் வாசிக்கும் போது, கூட ஆயக்காரர்கள் தேவாலயத்துக் குள் செல்ல பயந்து, வாசலிலே யே நின்று விடுவார்கள் என்று தெரிகிறது.

தன் மார்பிலே அடித்துக் கொண்டு; " தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று சொன்ன ஆயக்காரனைப் பற்றி நாம் வாசிக்கும் போது இது மத்தேயு பற்றியதாக இருக்கலா மோ என்று கூட எண்ணுகிறோம். இது, அவருடைய மனப்பான்மை யை பிரதிபலிக்கிறது. தான் தன்னு டைய ஜனங்களால் ஏற்றுக் கொள் ளப்படவில்லை என்பதை அறிந்தி ருக்கிறபடியால், தேவன் தன்னை ஏற்றுக் கொள்வாரோ என்று எண்ணினான்.

பாவத்தின் ஆழங்களிலி ருந்து பலர் சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். கொரிந்தியர்கள் அதற்கு உதார ணமாக இருக்கிறார்கள் (1கொரிந் தியர் 6:9-11). தாங்கள் மாபெரும் பாவிகளாயிருக்கிறோம் என்பதற் காக ஜனங்கள் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. பாவிகளை இரட்சிப்பதற்காகவே கிறிஸ்து வந்தார்.

இயேசு ஆயத்துறை வழி யாகக் கடந்து சென்றபோது, மத்தேயுவுக்கு வாய்ப்பு வந்தது. சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்ட இவருக்கு, பொன், வெள்ளி யைக் காட்டிலும் விலையேறப் பெற்ற வேலையும், பலன்களும் முன் வைக்கப்பட்டது. அப்போது, இராயனைவிட மேலான ராஜா வுக்கு மத்தேயு சேவை செய்ய முடிந்தது. மத்தேயு இயேசுவைத் தேட வில்லை; கிறிஸ்து அவரைத் தேடினார். இங்கே நமக்கு மிகப் பெரிய பாடம் இருக்கிறது; நாம் நம் எஜமானைப் பின்பற்ற வேண்டு மானால், நாமும் இழந்து போன வர்களைத் தேடுகிறவர்களாக இருக்க வேண்டும்.

மத்தேயு உடனே எழுந்து இயேசுவைப் பின்பற்றினான். ஒருவேளை அந்த வாய்ப்பை நழுவ விட்டிருந்தால் மற்றொரு வாய்ப்பு வராமலே போயிருக்கலாம். இயேசுவைப் பின்பற்றும் போது, எப்போதுமே நிகழ்காலமே வலியு றுத்தப்பட வேண்டும். மத்தேயு எல்லாவற்றையும் விட்டு விட்டார். இயேசுவைப் பின்பற்றுவதற்கும், அவருக்கும் இடையில் எதுவும் நிற்க அவன் அனுமதிக்கவில்லை. அவன் தன் முடிவைக் குறித்து வெட்கப்படவுமில்லை. அவன் கர்த்தருக்கு ஒரு விருந்தை ஆயத் தப்படுத்தி, தன் நண்பர்களை (வரி வசூல் செய்பவர்களை) அழைத் தான். இதன் மூலம், தன் பழைய

வாழ்வுக்கு விடை கொடுத்து, புதிய வாழ்வைக் கொண்டாடினான். இன்னும், இதன் மூலம், தன் நண்பர்களும் இயேசுவின் காரியங்களைக் கேட்கும்படியான வாய்ப்பை உண்டாக்கினான். இவைகளெல்லாம் அவன் தன் புதிய ஜீவனைக் கொண்டாடுவதோடு பழைய வாழ்க்கையை வழியனுப்பி விட்டு விட்டு, இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிக் கொடுக்க தன் நண்பர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறார் என்பதைத் தெரிவிக்கிறது.

இயேசு "மத்தேயு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதனைக் கண்டபடியால்", மற்றவர்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒருவனைக் கண்டார்கள். ஆனால், ஆராய்கிற, தேடுகிற இரட்சகரால் இழந்து போனவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்படுகிறார்கள் என்பதை வாசிக்கும் போது அது பரவசத்தை ஏற்படுத்துகிறது. உண்மையாகவே, தெய்வீகக் கிருபையின் அற்புதங்கள் நமக்கு நினைப்பூட்டபடுகின்றன. நாம் இந்த கிருபையுடன் கடந்து போய், மனிதர்களைத் தங்கள் பாவ மனிதனை களைந்து போட்டு, கிறிஸ்துவுக்குள் புது ஜீவனாய் மாற வலியுறுத்த வேண்டும். ❋

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. [II கொரிந்தியர் 5:17].

## சத்தியம்

1. உம்முடைய வசனமே சத்தியம். (யோவா 17:17)
2. சத்தியம் நம்மை விடுதலையாக்கும். (யோவா 8:32)
3. சத்தியத்தை அறிந்து கொள்ளலாம். (எபே. 3:5)
4. சத்தியம் குறைவற்றது. (சங். 19:7)
5. சத்தியம் வல்லமையுள்ளது. (எபி. 4:12,13)
6. சத்தியம் நம்மை பக்தி விருத்தியடையச் செய்யும். (அப். 20:32)
7. சத்தியம் என்றென்றும் நிலை நிற்கும் (மத். 24:35)
8. சத்தியத்தோடு குறைக்கவோ கூட்டவோ கூடாது. (வெளி. 22:18,19)
9. சத்தியத்தையே நாம் போதிக்க வேண்டும். (2. தீமோ. 4:2)
10. சத்தியத்தில் நாம் உறுதியாய்க் காணப்பட வேண்டும். (2 தெச. 2:17,18)
11. சத்தியத்தை புரட்டக்கூடாது. (கலா. 1:8,9)
12. இச்சத்தியத்தால் தான் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவா. 12:48)

வசனப்பகுதி பாடங்கள்

# தேவனால் கைவிடப்பட்டவர்கள்

## Abandoned by God

*Bobby Dockery*

"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். ... தேவனை அறியும் அறிவைப்பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" [ரோமர் 1:24,28].

வேதாகமத்திலேயே மிக ஆழ்ந்து கவனிக்கத்தக்க வாக்கியங்களில் ஒன்று ரோமர் 1:26 ல் இடம் பெற்றிருக்கிறது. பாவமுள்ள, ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருந்த குறிப்பிட்ட மக்களைப் பார்த்து பவுல், "*தேவன் அவர்களை ஒப்புக் கொடுத்து விட்டார்*" என்று எழுதினார்... ஒழுக்கக் கேடான வாழ்க்கைக்கு அவர்கள் அடிமைப்பட்டிருந்தபடியால், தேவன் அவர்களை முற்றிலுமாக கைகழுவினார்! ஆவிக்குரிய பிரகாரமாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதை மேலும் வலியுறுத்துவதற்காக, பவுல் இருமுறை அந்தக் குற்றச்சாட்டைப் பதிவு செய்கிறார்; " தேவன் அவர்களை ஒப்புக் கொடுத்தார் " என்று. (ரோமர் 1:24,28)

தேவனால் கைவிடப்படுவது எவ்வளவு பயங்கரமான நிலைமை! இந்த சோக சம்பவத்திற்குக் காரணமாக இருக்கும் உண்மை என்னவென்றால், இந்த மக்கள், தங்கள் நம்பிக்கையற்ற நிலைமைக்கு தாங்களே முழுப் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள் என்பது தான். இத்தீங்கை அவர்கள் தங்களுக்குத் தாமே வருவித்துக் கொண்டார்கள். முதலில் அவர்கள் தேவனை கைவிட்டபிறகு தான் அவர்கள் தேவனால் கைவிடப்பட்டார்கள்! அந்த ஜனங்கள் தேவனுக்கு முதுகைக் காட்டியபடியால், "*அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய் புறங்கூறுவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துரோகம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய்,*

*வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர் களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர் களுமாய் உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில் லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதர்களுமாய் இருக்கிறார்கள்*" (ரோமர் 1:29-31).

மேற்கூறப்பட்ட கைவிடப்பட்ட பாவப்பட்டியலிலிருந்து பாவம் பற்றிய மூன்று உண்மைகளும் அதன் தன்மையும் தெரிய வருகிறது.

**1. பாவம் உண்மையானது :** இந்த ஜனங்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்த தற்கான காரணம் அவர்களுடைய வாழ்க்கையில் பாவம் இருந்ததுதான். அவர்களுடையது, கலாச்சார குறைபாடல்ல, சமுதாய சீர்குலைவுமல்ல அல்லது மனக்கோளாறுமல்ல. அவர்கள் தேவனுடைய ஒழுக்க நெறிகளைத் தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக தங்களுடைய ஒழுக்க நெறிகளை வைத்தார்கள். அவர்களுடைய பாவம் அவர்களை தேவ கோபாக்கினையின் கீழ் வைத்தது (ரோமர் 1:18).

**2. பாவம் அழிவை ஏற்படுத்தக்கூடியது :** பாவத்தின் சோகமான முடிவு களுள் ஒன்று, அது பாவிக்கு ஏற்படுத்தும் அழிவு தான். பாவம் அறிவை அழித்துப் போடுகிறது. ரோமர் ஒன்றாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக் கிற பாவிகள் தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள் என்று படிக்கி றோம் (ரோமர் 1:21). பாவம் உணர்வுகளைக் கெடுத்துப்போடுகிறது. பவுல் இந்தப் பாவிகளை இழிவான இச்சைகளுக்கும், தகாதவைகளைச் செய்யும்படிக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டவர்களென்றும் சொல்கிறார் (ரோமர் 1:26-28). பாவம் சரீரத்தைச் சேதப்படுத்துகிறது. பாவம், அவர்களில் சிலரை தங்கள் சரீரங்களை அவமானப்படுத்த வைத்தது (ரோமர் 1:24).

**3. பாவம் நமக்கும் தேவனுக்கும் இடையில் பகையை ஏற்படுத்துகிறது :** பாவத்தின் சோககரமான முடிவுகளுள் இன்னொன்று மனிதனுக்கும் தேவனுக்கும், இடையில் பகையை ஏற்படுத்துவது. பாவமானது தேவனுடைய புனிதத் தன்மைக்கு எதிரான பொறுக்க முடியாத குற்றமாயிருக்கிறது. அது தேவனுடைய அதிகாரத்திற்கு எதிராகச் செய்யப்படும் கலகமாயிருக் கிறது. மனந்திரும்பி, பாவங்களை விட்டு விடாதவர்கள் மாற்ற முடியாத அளவுக்கு, முற்றிலுமாக தேவனிடத்திலிருந்து அந்நியப்படுத்தப்படுகிறார் கள். ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நீங்கள் பாவத்தில் வாழ்ந்தால் தேவனில்லாத வாழ்க்கையை வாழ்கிறீர்கள். பாவம் உங்களைக் கைவிடப்பட்ட நிலைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு, நீங்கள் எதையாவது செய்வது அவசியமாகிறது. “தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்” என்று சொல்லப்படுவது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது!. ❋

# ஆகையால்.....

# Therefore....

*T. Pierce Brown*

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.* இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத். 28:18-20)

நான் பிராதன கட்டளையை தியானித்துக் கொண்டிருந்த போது, ஆகையால் என்கிற வார்த்தை என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. இந்த வார்த்தை இல்லாமல் பிரதானக் கட்டளைக்கு எந்த வல்லமையும், நோக்கமும் இருக்காது. " சகல அதிகாரமும் " எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ஞானஸ்நானங் கொடுத்து, உபதேசம் பண்ணுங்கள் என்று இயேசு சொல்லியிருந்தார். இதன் உட்பொருள் உங்களுக்குப் புரிகிறதா? கிறிஸ்துவின் அதிகாரமில்லாமல் நாம் செய்கின்ற எதுவும் பயனற்றதாயிருக்கும்; நாம் எதைப் போதித்தாலும் அது வீணாயிருக்கும்; நாம் கொடுக்கும் ஞானஸ்நானம் வெறும் சடங்காச்சாரமாகத்தான் இருக்கும்.

இந்த உண்மையை உணர்ந்து, அறிந்து இதன் போதனையின் அடிப்படையில் செயல்பட்டால் மட்டுமே கிறிஸ்துவின் சபையிலும், மற்ற எல்லா பிரிவினை சபைகளிலும் மத சம்மந்த மான செயல்பாடுகளின் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். உண்மையில், இந்த போதனைகளின்படி மனிதர்கள் நடந்து கொண்டால் பிரிவினை சபைகள் ஒழிந்து போகும். பிரிவினைச் சபைகளுடைய எல்லா கொள்கைகளும் அவர்கள் செய்கின்ற எல்லா சடங்காச்சாரங்களும், ஒருவேளை வெளிப்புறமாக கிறிஸ்துவின் அதிகாரத்தால் செய்யப்படுகிறது போல் தெரிந்தாலும் உண்மையில் அப்படி இல்லாதபடியால் - அவைகள் தானாகவே ஒழிந்துபோம்.

இயேசுவால் பயன்படுத்தப்பட்ட "ஆகையால்" என்னும் வார்த்தையானது, நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இரண்டு விதமான பொருளை சிறப்பாகக் கொடுக்கிறது. முதலில், எதிர்மறை கருத்தைப் பார்ப்போம். அதாவது, பக்தி ரீதியாக, இயேசுவால் அங்கீகரிக்கப்படாத எதையும் நாம் செய்யக்கூடாது என்பது. உதாரணமாக, "சகல அதிகாரமும் எனக்குக்

கொடுக்கப்பட்டிருக்கிற". ஆகையால், நீங்கள் போய் பாடுங்கள் என்று சொல்லப்பட்டிருக்குமானால், ஆராதனையில் இசைக் கருவி வேண்டுமா, வேண்டாமா என்ற விவாதத்திற்கே இங்கு இடமில்லை.

இந்த வாக்கியம் முழுமை யாக புரிந்துகொள்ளப்பட்டால், நேர் மறையான பொருளும் சிறப்பான தாகவே இருக்கும். ஏன் " சுவிசே ஷத்துடன் உலகம் முழுவதும் செல்வதைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? " என்று கேள்வி எழுப்பப்படலாம். இதற் கான உடனடி பதில் வெளிப்படை யாக இருக்கிறது, ஏனென்றால், "ஆகையால்" என்றுள்ளதால், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் பெற்றிருக்கிற எனக்காக மரித்த என் ஆண்டவர் அப்படிச் செய்யும்படி என்னை நெருக்கி ஏவி என்னுடைய அன்பான கீழ்ப்படிதலை விரும்புகிறார்.

ஞானஸ்நானத்திற்கு கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார் என்பதை விட மேலான நோக்கம் வேறொன்று மில்லை என்று "டேவிட் லிப்ஸ் கோம்ப்" போன்றவர்கள் சொல்வது எவ்வித சந்தேகமுமின்றி சரிதான். "*நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு* " (ரோமர் 6:17) நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியாமற் போனால் அந்த கீழ்ப்படிதலில் எந்த அர்த்த மும் இல்லை.

இதை சுலபமாகச் சொல்ல வேண்டுமானால், சகல அதிகாரத் தையும் உடையவர் "*மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள்* " என்று சொல்லும் போது, அது அவசி யமானது என்று நான் நினைக்க வில்லை என்று ஒருவர் சொன்னால் இயேசுவின் நாமத்தினாலே அவரை ஞானஸ்நானப்ப டுத்துவது முடியாத காரியம். *அவர் தன்னுடைய நோக்கம் எதுவென்று சொன்னாலும் அதுபற்றி ஒன்று மில்லை.* அவரை இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானப் படுத்துவது கூடாத காரியம்.

ஒரு மனிதன் நான் கர்த்த ருக்குக் கீழ்ப்படிய விரும்புவதால் அவருடைய அதிகாரத்தால், கர்த்த ருடைய பந்தியில் பங்கு பெற விரும்புகிறேன் என்று சொல்லலாம். ஆனால், ஒருவர் காபியையும், பிஸ்கட்டையும் வைத்து ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையில் அல்லது நான்கு மாதத்திற்கு ஒருமுறை அதைப் புசித்து குடித்து விட்டு என் சபை இதை நடைமுறைப்படுத்து கிறது என்று சொன்னால், அவர் என்ன சொன்னாலும் அம்மனி தரின் செயல் தேவனுடைய பார்வையில் ஒருபோதும் எடுபடாது. "*மனுஷ ருடைய கற்பனைகளை உபதேசங் களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்* " (மத். 15:9). மத். 28:19 ல் நாம் பார்க்கிற, "ஆகையால்" என்கிற பதத்தை நாம் மனதில் உறுதியாக வைத்தால், தவறாகச் செய்யும்படி துணிய மாட்டோம். "ஆகையால்", என்பதில் கிறிஸ்து சகல அதிகாரத்தையும் உடையவராயிருக்கிறார் என்பது உட்பொருளாயிருக்கிறது. ஆகையால், நீங்கள் எதைச் செய்தா லும் அவருடைய அதிகாரத்தால் செய்யுங்கள். ❀

# ஞானமுள்ள பிள்ளைகள்

# Wise Children

*P.R. Swamy*

" ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்" (நீதி. 10:1).

இந்த வசனத்தில் வாழ்க்கையின் இரண்டு எதிர்எதிர் வழிகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. ஞானம் என்பது ஒழுக்க மேன்மையைக் குறிப்பது. மதியீனம் என்பது ஒழுக்கக் கேடான, துன்மார்க்க செயல்களில் நிறைந்து காணப்படுவது.

ஞானமுள்ள மகன் யார்? ஞானமுள்ள மகன் உலகப் பிரகாரமான கல்வியில் உச்ச நிலையை அடைந்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. அதற்குப் பதிலாக தேவ பயத்தைக் கற்று, தேவனுடைய உபதேசத்தின்படி தன் பண்புகளை வளர்த்துக் கொள்கிறவன் தான் உண்மையாகவே ஞானமுள்ளவன்.

பெற்றோர்கள் மீது பிள்ளைகள் ஏற்படுத்துகிற தாக்கத்தை மதிப்பீடு செய்வது இயலாத காரியம். ஆனால், பிள்ளைகள் இதைப் பெரும்பாலும் நம்புவதில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைப் போக்கு யாருக்கும் எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்று எண்ணி தங்கள் பெற்றோர்களின் உணர்வுகளைக் குறித்து கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள்.

பெற்றோர்களின் அன்பின் ஆழத்தை ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பெற்றோர் ஆகும் வரை புரிந்து கொள்ளவே முடியாது என்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஓர் உண்மை. பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து ஜீவன், உணவு, இருப்பிடம் மற்றும் அன்பை வாழ்க்கை முழுவதும் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே, அவர்கள் தங்களிடத்தில் மிகப் பெரிய நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பெற்றோர்களின் சந்தோஷம் அவர்களிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் தாய், தகப்பனுடைய வாழ்வை இருளாக்குவதும், வெளிச்சமாக்குவதும், அவர்களை சந்தோஷப்படுத்துவதும், துயரத்தில் ஆழ்த்துவதும் அவர்கள் கையில் தான் இருக்கிறது.

பெற்றோர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் இரகசியம் குமாரன் அல்லது குமாரத்தியின் ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய நடத்தையில் இருக்கிறது. " கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் " (நீதி. 1:7). ஞானமில்லாத மகன் மந்தபுத்தியுள்ளவனாக, அறிவில்லாதவனாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை, தேவனுடைய உபதேசத்தின்படி நடக்காதவனே ஞானமில்லாத மகன்.

பிள்ளைகள் சிறுவயதில் இருக்கும் போது பெற்றோர்கள் பிள்ளைகளுடைய பூமிக்குரிய செழுமை ஒளிமயமான எதிர்காலம் செல்வம் மற்றும் உலகப் பிரகாரமான சாதனைகளுக்காக கனவு காண்கிறார்கள். ஆனால், பிள்ளைகள் வாலிபர்களாகும் போது மேற்கூறப்பட்டவைகளெல்லாம் இரண்டாம் பட்சமானது என்பதை காண்கிறார்கள். தகப்பனுடைய நரைமுடிக்கு துக்கத்தை மிகப்பெரிய அளவில் கொண்டு வருவது பிள்ளைகளின் புத்தி இல்லாமையோ, தோல்விகளோ அல்ல; ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய தோல்வியாகிய பாவம் தான் - அது மிகவும் ஆபத்தானது.

ஒவ்வொருப் பெற்றோருடைய ஜெபமும் இவ்விதமாக இருக்க வேண்டும். " பிதாவே, எங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கத்தக்க உதவி செய்யும் " (எபேசியம் 6:4). அவர்களுடைய குணாதிசயம் நம்முடைய குணாதிசயத்தைச் சார்ந்திருக்கிறது.

1. நாம் என்ன போதிக்கிறோமோ அதை அவர்கள் நம்புவார்கள்.

2. நாம் அவர்களுக்கு வைத்திருக்கிற முன் மாதிரியைப் பின்பற்றுவார்கள்.

3. நாம் அவர்களுக்கு முன்பாக எதை வெளிப்படுத்துகிறோமோ அதை அப்படியே பிடித்துக் கொள்வார்கள்.

பெற்றோர்கள்தான் பிள்ளைகளுக்கு முன் மாதிரிகளாக இருக்கிறார்கள்.

"பிள்ளைகள் தங்களுக்கு நன்மை உண்டாகவும், தங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், தங்கள் பெற்றோர்களை கனம் பண்ண வேண்டும்" (எபேசியர் 6:1-3).

பெற்றோரும், பிள்ளைகளும் அவரவருடைய செல்வாக்கையும், பொறுப்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதும், துக்கப்படுத்துவதும் அவர்கள் கையில் தான் இருக்கிறது.

அதே விதமாக, தேவன் நம் தகப்பனாயிருக்கிறார். நம்முடைய பாவங்களினால் அவரை நாம் துக்கப்படுத்த முடியும்; ஆனால் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவதூதர்களோடு சேர்ந்து தேவன் களிகூறுகிறார்.

பெற்றோர்களே ! நாம் ஞானமுள்ள குமாரர்களையும், குமாரத்திகளையும் உண்டாக்குவோம் ! ❋

### வேதாகம கேள்விகள்

# தேவன் இன்று நம்மோடு எப்படிப் பேசுகிறார்?

## How Does God Speak to us Today?

*John Thiesen*

இன்று தேவன் நம் செவிகள் கேட்கும்படியான சத்தத்தில் பேசுவாரா? சிலர், தங்கள் வாழ்க்கையின் ஏதாவது காலக் கட்டத்தில், தேவன் தங்களிடம் விசேஷித்த செய்தியைப் பேச அதைக் கேட்கும்படியாக ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது குரல் மூலமாகவோ அல்லது வழக்கத்திற்கு மாறான விதத்திலோ இருக்கலாம்.

*பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். (எபி. 1:1,2)*



*வேதாகம மனிதர்கள் பலர் வானத்திலிருந்து விசேஷித்த செய்திகளைக்* கேட்டார்கள் என்பது உண்மை தான். அந்தச் செய்தியை அவர்கள் தேவதூதர்கள் மூலமாகவோ, அல்லது தேவன் நேரடியாகவோ பேசக் கேட்டார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, சாமுவேல், தாவீது, எலியா, ஏசாயா போன்றோர் தேவனிடத்திலிருந்து நேரடியாகவே வெளிப்பாடுகளைப் பெற்றார்கள். புதிய ஏற்பாட்டில் மூன்று சம்பவங்களில் இயேசு, "தேவனுடைய நேச குமாரன்" என்பதாக தேவனுடைய சத்தம் கேட்கப்பட்டிருக்கிறது. இயேசு பரமேறிய பிறகு, தர்சு பட்டணத்தானாகிய சவுல் இயேசுவைக் காணும் படியாகவும், அவருடைய சத்தத்தைக் கேட்கும் படியாகவும் அனுமதிக்கப்பட்டார்.

வேதாகமம் இத்தகைய உதாரணங்களை உடையதாயிருக்கிறபடியால், இன்று தேவனோடு ஐக்கியம் கொள்ளவேண்டுமென்றால், வானத்திலிருந்து சத்தம் கேட்கப்படுவது ஒன்றும் புதிதல்ல என்ற முடிவுக்கு வருகிறார்கள்.

#### கிறிஸ்து கடைசிப் பேச்சாளர்

ஆனால், அவர்களுக்கு சிலுவைக்குப் பின்னானது தெரியவில்லை. நம்முடைய காலத்தில் தேவன் பேசும் விதத்தை மாற்றியிருக்கிறார். கிறிஸ்துவுக்கு

முன்பாக, தேவன் தம்முடைய ஜனங்களிடத்தில் அநேக விதமாகப் பேசியிருக்கிறார். "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபிரெயர் 1:12). தேவன் தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களிடத்தில் திருவுளம் பற்றியிருக்கிறார், அவர்கள் பல் வேறுபட்ட வழிகளில் தகவல்களைப் பெற்றிருக்கிறார்கள். தரிசனங்கள் மூலமாக, சொப்பனங்கள் மூலமாக, தேவதூதர்கள் மூலமாக, சில வேளைகளில் குரல் மூலமாக. ஆனால், நம்முடைய காலத்தில், தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசுவதில்லை. தேவன் தம்முடைய குமாரன் மூலமாக மட்டுமே நம்மிடம் பேசுகிறார்.

தேவனுடைய வெளிப்பாடு இப்போது முழுமை பெற்றிருக்கிறது.

இந்தக் கடைசிக் காலத்தில் மனித இனத்திற்கு இயேசு கடைசிப் பேச்சாளராக இருக்கிறார். அவர் தேவனுடைய வெளிப்பாடுகளை நமக்கு முழுமையாகக் கொண்டு வந்தார். நாம் இன்னும் காத்திருக்கும்படியாக வேறொரு செய்தி இல்லை. தேவனிடத்திலிருந்து வந்த இந்த மாபெரும், கடைசி வார்த்தையாகிய நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கடைசி சித்தமும், புதிய ஏற்பாட்டில் நிரந்தரமாக எல்லோரும் தொடர்பு கொள்ளத்தக்க வகையில் வசனங்களாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

சத்தியத்தின் வெளிச்சத்தில், தம்முடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசும் வழியை தேவன் விட்டுவிட்டு, யாராவது நபரைத் தெரிந்து கொண்டு அந்த நபருக்குக் கிறிஸ்துவைக் காட்டும்படியாக அவரிடம் ஏன் பேச வேண்டும்? தேவன் பட்சபாத முள்ளவரல்லவே என்று வேத வசனம் சொல்கிறது. தேவன் ஒருவரை புதிய வெளிப்பாடுகளைக் கொண்டு இவ்விதமாக இரட்சிக்க வேண்டுமானால், இதே தயவை காட்ட அவர் கடமைப் பட்டிருக்கிறார். தேவன் மனிதர்களிடம் நேரடியாகப் பேசின நாட்களில் கூட அவர் எல்லோரிடமும் பேசவில்லை, தெரிந்து கொள்ளப் பட்ட மத்தியஸ்தர்களாகிய தீர்க்க தரிசிகள் மூலமாகவே பேசினார். அவர்கள் அந்தச் செய்தியை ஜனங்களிடத்தில் அறிவித்தார்கள்.

இந்த வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருக்கிறவர்களே தேவன் இன்று உங்களோடுப் பேச முயற்சிக்கிறார். நீங்கள் அவருடைய வார்த்தைகளை உள்ளடக்கிய வேதாகமத்தை வாசித்துப் படித்தால், உங்களுக்கான அவருடைய செய்தியையும், மனித இனம் முழுமைக்கான அவருடைய செய்தியையும் நீங்கள் கற்றுக் கொள்ள முடியும். ❋